

# அரசு—மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** —வலிவும் வனப்பும் வாய்ந்தது



## தேசீய ஒருமைப்பாட்டை நிலை நாட்ட சபதம் ஏற்போம்!

நமது இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களின் 71-வது பிறந்த நாள் தேசிய ஒருமைப் பாடு நாளாக நாடெங்கிலும் கொண்டாடப் பெற்றது.

13-5-1976 அன்று மாலை 6 மணிக்கு சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசீய ஒருமைப் பாட்டு நாள் விழா மிகச் சிறப் பாக அமைந்தது. தேசீய ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் விழா வாக—தேசீய ஒருமைப் பாட் டின் சிறப்பை எடுத்துரைக்கும் விழாவாக—குடியரசுத் தலைவரின் பிறந்த நாள் விழா நடைபெற் றது.

தலைமை வகித்த ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது, 'தேசீய ஒருமைப்பாடு, ஒற்றுமை ஆகிய இலட்சியங்களுக்காகவும், அண்டை நாடுகளுடன் உறவு முறை வகையிலும், குடியரசுத் தலைவர் திரு பக்ருதீன் அலி அகமது அவர்கள் சிறந்த பணி புரிந்திருக்கிறார்கள். அவர் எப் போதும் நாட்டின் நலத்தையே தலையாயதாகக் கருதி வருபவர். ஒருமைப்பாட்டு உணர்வு அவரது நரம்பில் ஓடுகிறது'' என்று குறிப் பிட்டார்.

இந்த விழாவில், முன்னாள் துணை மேயர் திரு. அல்லாப் பிச்சை, டாக்டர் எஸ். விஜய லெட்சுமி, திரு சித்ராநாராயண சாமி, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா ஆகியோர் ஒருமைப்பாடுச் சிறப்பையும், குடியரசுத் தலைவரின் பெருமை யையும் குறித்து உரையாற்றினர். தலைமைச் செயலர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் நன்றி யுரை கூறும்போது, ''தேசிய ஒருமைப் பாட்டை நாம் நிலை நாட்டுவோம் என்று சபதம் ஏற் போமாக!''—என்று குறிப்பிட் டார்.

பின்னர், இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற் றன. அவையாவும் தேசீய ஒருமைப்பாட்டின் சிறப்பைப் பொது மக்களுக்கு எடுத்துரைத் தன; விழாவுக்கு வந்திருந்தோர் அனைவரின் உள்ளத்திலும் இந்த ஒருமைப்பாட்டு நாள், தக்க வகை யில் இடம் பெற்றதோடு தணி யாத நாட்டுப் பற்றையும் உரு வாக்கியது என்றால், மிகையா காது!


# தமிழரசு

மலர் - 6  16 - 5 - '76  இதழ் - 22


மோர்—....

# ஆளுநர் மேற்கொண்ட பாதயாத்திரை



தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் 11-5-'76 அன்று கிராமம் கிராமமாக 7 மைல் தூரம் நடந்து சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். இந்தப் பாத யாத்திரையில் ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. பி. கே. தவே பங்கேற்றார்.

செங்கற்பட்டு மாவட்டம், சோமங்கலம் கிராமப்புறச் சீரமைப்புத் திட்டத்தில் உள்ள சிறுகளத்தூர், காலடிப்பேட்டை, அழகேச நகர், நந்தம்பாக்கம் காலனி, பூந்தண்டலம் ஆகிய கிராமங்களில் இந்தப் பாத யாத்திரை நடைபெற்றது.

ஆளுநர் அவர்களையும் ஆலோசகர் அவர்களையும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு திவான் முகமது அவர்களும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு நடராசன் அவர்களும் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

ஆளுநர் திரு கே. கே ஷா அவர்களுக்கும், ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்களுக்கும் செல்லுமிடமெல்லாம் சிறப்புமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. தாரை, தப்பட்டைகள் முழங்க மக்கள் மகிழ்ந்து வரவேற்றார்கள்.

தாய்மார்கள் ஆரத்தி எடுத்து அகமகிழ்ந்தார்கள்.

முதன் முதலில் சிறுகளத்தூர் கிராமத்திற்குச் சென்ற ஆளுநர் அவர்களும், ஆலோசகர் அவர்களும் அங்கே கிராம மக்கள் அமைத்திருந்த கால்நடைக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். ''கால்நடைகள் இன்னும் தரமானதாக வளர மக்கள் பெரிதும் உதவ வேண்டும்'' என ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

பின்னர், பாலர் பள்ளியைப் பார்வையிட்ட ஆளுநர் அவர்கள், அங்கே தமக்கு அணிவிக்கப்பட்ட மாலைகளைப் பள்ளிச் சிறுவர்களுக்கு அணிவித்து வாழ்த்தினர்.

அமராவதி கோயிலுக்குச் சென்று தெய்வதரிசனம் செய்த ஆளுநர் அவர்கள், பிறகு கோயிலின் பின்னால் புதிதாக அமைக்கப்பட்டிருந்த நீர் அடிகுழாயைத் திறந்து வைத்தார். குடத்தோடு நின்றிருந்த பெண்களைத் தண்ணீர் பிடிக்கச் சொல்லி ஆளுநர் அவர்களே கைப்பம்பின் கைப்பிடியை அடித்தபோது தாய்மார்கள் பெரும் மகிழ்வுற்று வாழ்த்தினர்.

சிறுகளத்தூரில் புதிதாக 11 ஆயிரம் வோல்ட் சக்தியுள்ளதாக அமைக்கப்பட்டிருந்த 'டிரான்ஸ்பார்ம'ரை ஆளுநர் திரு. கே. கே. ஷா. அவர்கள் திறந்து வைத்தார்.

இதன்பிறகு அவர் மக்கள் அளித்த ஏராளமான மனுக்களைப் பெற்றுக் கொண்டதோடு, வேளாண்மை குறித்தும், கடன் தொல்லை குறைப்பது குறித்தும் பொதுமக்கள் சொன்ன குறைகளையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

தனது பிழைப்புக்கு வழி செய்யுமாறு கண்ணீரும் கம்பலையுமாகக் கூறிய ஒரு கிழவிக்கு ஆறுதல் தெரிவித்த ஆளுநர் அவர்கள் ஆடுமாடுகள் வாங்கக் கடனுதவி அளிப்பதாகக் கூறினர்.

### சிறு தொழிலுக்கு அரசு உதவி

ஆங்கே கூடியிருந்த மக்களிடையே பேசுகையில் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதாவது.

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் கிராமங்களின் வறுமையை ஒழிக்க வளர்ச்சித் திட்டம் இங்கே தொடங்கப்பட்டுள்ளது. 3 ஏக்கருக்கு மேல் உள்ளவர்கள் முப்போகம் பயிர் செய்ய வசதி செய்யப்பட்டு வருகிறது.

அதற்குக் குறைவாக நிலம் உடையவர்கள். கூட்டுறவு முறையில் பயிர் செய்யலாம்.

விவசாயத் தொழிலோடு, ஆடு மாடு, கோழி ஆகியவைகளையும் வளர்த்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

விவசாயத் தொழிலாளிகள் துணைத் தொழில்கள் மூலம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம். சிறு தொழிலுக்கு அரசு உதவி செய்கிறது. 20 அம்சத் திட்டத்தின் நோக்கம், ஒவ்வொரு குடும்பத்தின் வருமானத்தையும் ரூ. 400 ஆக உயர்த்துவதேயாகும்.

—இவ்வாறு பேசிய ஆளுநர் அவர்கள் ''கோழி, கறவை மாடுகள், மின்விசை, கைத்தறி விசைகள் யார் யாருக்கு வேண்டுமோ மனுக்களைத் தாருங்கள்'' என்று கேட்டதும் அவற்றிற்காக ஏராளமானோர் மனுக்களைக் கொடுத்தனர்.

இதற்குப் பிறகு அழகேச நகர், நந்தம்பாக்கம் காலனியைச் சுற்றிப்பார்த்த ஆளுநர் அவர்கள் மக்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார். ஆர்வத்தோடும் உருக்கத்தோடும் மக்கள் தெரிவித்த குறைகள் அனைத்தையும் கவனமாகக் கேட்ட ஆளுநர் அவர்கள், குறைகளையெல்லாம் உடனுக்குடன் குறித்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று உடன் வந்திருந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### சுயமுயற்சி அவசியம்

பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தவறிய மாணவர் ஒருவர் 'இந்தப் பகுதியில் சிறு தொழிற்சாலைகள் தொடங்கினால் அதன் மூலம் என்னைப் போன்றவர்கள் பிழைப்பு நடத்தமுடியும்' என்றார்.



நீர் அடிகுழாயை ஆளுநர் திறந்து வைக்கிறர்

உடனே ஆளுநர் அவர்கள் தெரிவித்த பதில் விவரம் வருமாறு:

''எஸ். எஸ். எல். சி. வரை படித்த நீ ஏன் சுயமுயற்சி மூலம் முன்னேறக்கூடாது? ஒவ்வொரு இடத்திலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினல் மட்டும் போதுமா; எல்லாவற்றையும் அரசே செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதை விட சுயமுயற்சியும் அவசியம். உன்னைப் போன்ற ஒவ்வொருவரும் சொந்த முயற்சியுடன் முன்னேற வேண்டும். படித்தவர்கள் எந்தத் தொழிலைச் செய்யவும் முன்வரவேண்டும். இங்கே வியர்வை சொட்டச் சொட்ட நிற்கிற விவசாயிகள் போல உழைக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.''

—இவ்வாறு ஆளுநர் அவர்கள் கூறினர்.

பின்னர் பூநதண்டலம் கிராமத்திற்குச் சென்ற ஆளுநர் அவர்கள் அப்பகுதி வாழ்மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார்.

அங்கே நெசவாளப் பெருமக்கள் அளித்த பரிசுகளில் ஒன்ருன ஒரு சேலையை ஆளுநர் அவர்கள் அக்கூட்டத்திலிருந்த வயது முதிர்ந்த ஓர் மூதாட்டிக்கு அன்புடன் அளித்தார்.

### குடை வேண்டாம்!

காலை 7.35-க்குத் தொடங்கிய இந்தப் பாத யாத்திரை 10.30 மணிவரை நடைபெற்றது. இடைப்பட்ட நேரத்தில் 7 மைல்கள் ஆளுநர் அவர்கள் நடந்தே சென்ருர்.

அப்போது வெயில் காரணமாகப் பெரிய நிழற்குடையொன்று பிடிக்கப்பட்டதை ஆளுநர் அவர்கள் வேண்டாமென மறுத்துவிட்டார்.

கிராமவாசிகளின் தமிழ்ப் பேச்சை ஆளுநர் அவர்கள் புரிந்துகொண்டதோடு, முடிந்தவரை ஆளுநரும் அவர்களோடு தமிழிலேயே பேசினர்.

### குடும்ப வருமானம் பெருக்கும் குறிக்கோள்

பாத யாத்திரை முடிந்ததும் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் தமிழக ஆளுநர் அவர்கள் தெரிவித்ததாவது :

பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தைக் கிராம மக்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிருர்கள்.

ஒவ்வொரு குடும்பத்தின் வருமானத்தையும் ரூ. 400 ஆக உயர்த்துவதே அரசின் குறிக்கோளாகும்.

இப்பகுதி மக்கள், முன்னேறுவதற்கு மிக்க ஆவல் உடையவர்களாக இருக்கிருர்கள். பெரு முயற்சியோடு உழைத்து வருகிருர்கள்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இப்பகுதி மக்களுக்கு நல்ல உதவி செய்து வருகிறது. இதுபோலத் தேசிய மயமாக்கப்பட்ட எல்லா வங்கிகளும் நல்ல முறையில் உதவி செய்ய வேண்டும்.

இவ்வாறு ஆளுநர் அவர்கள் கூறினர்.

சிறுகளத்தூரில் புதிய 'டிரான்ஸ்பார்மரை' ஆளுநர் திறந்து வைக்கிறர்.





# தமிழகத்தின் 4 புதிய மசோதாக்கள்

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டதால், தமிழகத்திற்குரிய சட்டங்களை இயற்றுவதற்கு 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 1-5-1976 அன்று சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள இராஜாஜி அரங்கில் மத்திய உள் துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 48 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிற்குரிய பின் கண்ட 4 மசோதாக்கள் (Bills) அக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டன.

1. 1976-ஆம் ஆண்டின் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மசோதா.

2. 1976-ஆம் ஆண்டில் தமிழ் நாடு சமய, அறநிலையக் கட்டளைகள் (திருத்தமும், சிறப்பு ஏற்பாடுகளும்) மசோதா.

3. 1976-ஆம் ஆண்டின் தமிழ் நாடு உள்ளாட்சி அதிகாரங்கள் (திருத்த) மசோதா.

4. 1976-ஆம் ஆண்டின் சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு நகராட்சி மன்றங்கள், ஊராட்சிஒன்றியங்கள் (திருத்த) மசோதா.

அக்கூட்டத்தில் மேற்கூறிய நான்கு மசோதாக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவற்றில் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மசோதா, தமிழ் நாடு இந்து சமய, அறநிலையக் கட்டளைகள் (திருத்தமும் சிறப்பு ஏற்பாடுகளும்) மசோதா, இரண்டும் முக்கியமானவை.

கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் குழுவின் பதவிக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், மொத்தத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்க தனி அலுவலர்களை நியமிக்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்த மசோதா வகை செய்கிறது.

ஆண்டுதோறும் 20 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாத வருவாய் உள்ள எல்லா கோவில்களுக்கும் பரம்பரை அறங்காவலர்கள் அல்லாத மற்ற அறங்காவலர்கள் நியமிக்கும் அதிகாரத்தை தமிழக அரசிடமே ஒப்படைக்க அறநிலையச் சட்டத்திருத்த மசோதா வகை செய்கிறது.

இவ்விரு மசோதா மீதும் விரிவாக விவாதம் நடைபெற்றது. அதன் பின், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விரு மசோதாக்களையும் ஏற்றுக் கொண்டனர்.

தொழில் வரி வசூலிக்கும் முறை, ஸ்டாம்பு தீர்வை மீது சர்சார்ஜ் விதித்தல் ஆகிய இரு மசோதாக்கள் அதிக விவாதம் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கூட்டுறவு மற்றும் அறநிலையத் திருத்த மசோதாக்களை வரவேற்று பொதுவாக இவை தேவையான மசோதாக்கள் தான் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சரியான, திறமையான, புகார்களுக்கு ஆட்படாதவர்களையே கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களாக நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் யோசனை கூறினார்கள்.

அறநிலையத் துறை ஆலோசனை குழுக்களில் 50சதவிகிதம் மடாதிபதிகள், பரம்பரை தர்மகர்த்தாக்கள், இதர அறங்காவலர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற மசோதாவில் இருந்த பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்று பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தியதன் பேரில் அந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, 50 சதவிகித இட ஒதுக்கீடு திட்டம் கைவிடப்பட்டது.

இந்த 4 மசோதாக்களும் குடியரசுத்தலைவர்அங்கீகாரத்திற்குப் பின் சட்டமாக (Acts) விரைவில் வெளிவரும்.

—ஆர். மாணிக்கம்



# வறட்சியை வெல்வோம்!

''வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழகத்தின் வறட்சித் துயர்துடைப்புப் பணிகளுக்காக மத்திய அரசு தற்போதைக்கு 7.5 கோடி போய் நிதி உதவி செய்ய இசைவு அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து 10.5 கோடி ரூபாயை வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்காகச் செலவிடும்'' என்று தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.

மத்திய அரசு நிதி அமைச்சர் அவர்களுடனும், மத்திய அரசு அலுவலர்களுடனும் தமிழக வறட்சித் துயர்துடைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து 5-5-76, 6-5-76 ஆகிய இரு நாட்களில் புதுடில்லியில் ஆலோசனை நடத்திவிட்டு, சென்னை திரும்பிய ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 8-5-'76 அன்று செய்தியாளர்கள் கூட்டத்தில் பின்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

''மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர்களுடனும், மற்றும் உயர் அலுவலர்களுடனும் மே 5, 6 ஆகிய இரு நாட்களில் தமிழக வறட்சி நிலை குறித்து—குறிப்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினை பற்றி—விரிவான ஆலோசனைகள் நடத்தினர்,

''1976-ம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,400 ஆழ்குழாய்க்கிணறுகளைத் (Deep Bore Tube Wells) தோண்டும் முனைப்புத் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மொத்தத்தில் 6,300 குழாய்க்கிணறுகள் (Tube Wells) அமைக்கப்பட வேண்டுமென்று இப்பொழுது முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப்பணி செப்டம்பர் 1976 இறுதிக்குள் முடிவடையும்.

''அரிசன குடியிருப்புக்களில் குடிதண்ணீர் வசதிக்கு வகை செய்வது மிக முக்கியத்துவம் வாய்ந்த பணி என்று மத்திய நிதி அமைச்சர் வலியுறுத்தினர். ஒருமைப்பாட்டினை வளர்ப்பதற்காகவும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்காகவும், கிராம மக்கள் அனைவரது உபயோகத்திற்குமான பொதுவான கிணறுகள், கிராமங்களில் அமைக்கப்பட வேண்டும். ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கும் இந்த மிகப் பெரிய பணிக்குத் தேவையான துளைக்கருவிகள் (Rigs) கிடைப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும். மத்திய அரசு மற்ற மாநிலங்களிலிருந்து தேவையான துளைக்கருவிகள் (Rigs) கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை அவசர முறையில் அணுகும். இத்துடன் தேவைக்கு ஏற்ப, கூடுதலான துளைக் கருவிகளை (Rigs) மாநில அரசு மேலும் வாங்கும்.

''மாநில அரசு நகர்ப்புற இடங்களுக்குக் குடிதண்ணீர்ப் பற்றுக்குறையைத் தீர்க்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்தப் பணிகள் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டுமென்றும், இவற்றை நிறைவேற்றுவதில் மிகத் திறமையுடன் செயலாற்ற வேண்டும் என்றும் மத்திய நிதி அமைச்சர் கூறினர்.

''மாநில அரசு இப்பணிகளின் பலன்களை உன்னிப்பாகக் கவனித்து, தேவை ஏற்பட்டால் மாற்றுத் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்றும் மத்திய நிதி அமைச்சர் கூறினர்.

''இந்தக் குடிநீர் வசதித் திட்டங்களைத் தவிர, வேலைவாய்ப்பு வசதிகளைத் தரக்கூடிய நடுத்தர-சிறுபாசனத் திட்டங்கள்; மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், காடு வளர்ப்புத் திட்டங்கள் மூலம், திட்ட முதலீட்டை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேறு வேலை-வாய்ப்புப்பணிகளுக்கு வகை இல்லாத போது, சாலைச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். வறட்சித் துயர்துடைப்புப் பணிகளில், சமுதாயத்துக்கு நிரந்தரமான சொத்துக்களை உருவாக்குவதே முக்கியமாகக் கொள்ளப்படும். நடைமுறைத் திட்டப் பணிகள் தேவைக்கேற்ப துரிதப்படுத்தப்படுவதுடன், இப்போதிலிருந்து ஜூலை '76-க்குள் 12 கோடி ரூபாய்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூடுதல் நிதியை மத்திய அரசு வழங்கும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதிய வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்க இது உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

''தமிழ்நாட்டின் வறட்சித் துயர்துடைப்புத் திட்டத்துக்கு, முன்தொகையாக 7.5 கோடி ரூபாயை ஒதுக்குவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது. 1976 ஜூன் மாதத்தில் எழக்கூடிய தேவைகளுக்கேற்ப இந்த ஒதுக்கீட்டுத் தொகை பற்றி மறுபரிசீலனை செய்யப்படும். தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், நிலையான-குறிப்பிடத்தக்க பயன்தரக்கூடிய துயர்துடைப்புப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை, போதிய அளவுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும்'' என்று ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது.

**வாரத்திற்கு 200 துளைக்கிணறுகள்!**

''வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வசதிக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுத்து, வாரத்திற்கு இருநூறு கிணறுகள் வீதம் தோண்டுவதற்கு முனைப்புத் திட்டம் தயாரித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரையில், அதாவது ஏப்ரல் மாதத்திலிருந்து இன்று வரை மொத்தம் 734 ஆழ் துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. ஆழ்துளைக் கிணறுகள் தோண்டுவதற்குத் தேவையான துளைபோடும் கருவிகளை மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களிலிருந்து தருவித்துத் தரவும், தேவையானல் மத்திய தொகுப்பை உருவாக்கி அதிலிருந்து பெற்றுத் தரவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியத்திடம் 36 துளை போடும் கருவிகள் உள்ளன. இவை தவிர, தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்டுள்ள 26 துளை போடும் கருவிகளையும் சேர்த்து மொத்தம் 62 கருவிகள் தற்போது உள்ளன.

முந்தைய திட்டப்படி மொத்தம் 2,400 ஆழ் துளைக் கிணறுகள் 1976 ஜூன் மாத இறுதிக்குள் தோண்ட உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் 6,300 கிணறுகள் வெட்டப்படும்.

''வறட்சிப் பகுதிகளில் குடிநீர்த் திட்டத்திற்கே முதலிடம். சாலை அமைப்பு போன்ற பணிகள் மிக அத்தியாவசியத் தேவை இருந்தால் மட்டுமே மேற்கொள்ளப்படும். இம்முறை, வறட்சி நிவாரணத் துயர் துடைப்புப் பணிகள் நிலையான-நிரந்தரப் பலன் கொடுக்கும் திட்டங்களாக நிறைவேற்றப்படும்; மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது போன்றவைகளும் குறிப்பிடப்பட்ட—தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் நிறைவேற்றப்படும். கிணறு தோண்டும் வேலையில் பல காரணங்களால் பலனளிக்காத நிலை குறித்து ஆராய, பணிக்குழுக்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் வறட்சிப் பகுதிகளில் துயர் துடைப்புப் பணிகளை முழுமையாக நிறைவேற்ற நிதி இடர்ப்பாடு குறுக்கே நிற்காது. துயர் துடைப்பு முக்கியமே தவிர, பணமில்லை என்று காரணம் காட்டி துயர் துடைப்புப் பணிகள் நிறுத்தப்படா.

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 3,500-க்கு மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் சுமார் 11 இலட்சம் பேர் வறட்சி நிலையால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களின் நலன் கருதி செப்டம்பர் மாத இறுதி வரை மூன்று கோடி மனித உழைபபு நாட்களுக்கு வேலை தரப்படும். மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சிறு பாசனத் திட்டங்கள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' என்றார்.

''துயர் துடைப்புப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்படும் நிலை, அதனைத் தொடர்ந்து உள்ள நிலை, தேவை ஆகியவைகளைக் கண்டறிய, தேவைப்பட்டால் மற்றொரு மத்தியக்குழு தமிழகம் வரும்'' என்றும் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னர்.

## அட்டைப்பட விளக்கம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்ட விளம்பர விழா, 1976, மே 21, 22, 23, 24 ஆகிய நாட்களில் நடைபெறவிருப்பதையொட்டி, திருச்சி மலைக் கோட்டையின் வண்ணப் படம் இவ்விதழின் அட்டையை அழகு செய்கிறது.

வண்ணப்படம்: திரு. ராஜா

(நன்றி: சுற்றுலாத்துறை, சென்னை-9.)

# இந்தியா—ஸ்ரீலங்கா கடல் எல்லை நிர்ணயம்!

# தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அறிவிப்பு!

இந்திய நாட்டு மீனவர்கள் ஸ்ரீலங்காவின் கடல் எல்லைக்குள் சென்று மீன் பிடிப்பதையும், ஸ்ரீலங்கா மீனவர்கள் நம் நாட்டுக் கடல் எல்லைக்குள் புகுந்து மீன் பிடிப்பதையும் தடுக்கும் நோக்கத்துடன் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையே 1974-ஜூன் திங்களில் ஒன்றும், 1976 மார்ச்சுத் திங்களில் ஒன்றும் ஆக இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

**1. கச்சத் தீவு:**

ஆதம் பாலத்திலிருந்து பாக் ஜலசந்தி வரையில் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான கடல் எல்லை, நிலப்பட நெடுங்கோடுகள், கிடைக்கோடுகளால் வரையறுக்கப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைமையின்படி கீழ்க்காணும் நிலைகளுக்கு இடையே வளையக்கோடுகளாக அமையும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிலை | 1 : | 10° 05' | வடக்கு | 80° 03' | கிழக்கு |
| நிலை | 2 : | 09° 57' | வடக்கு | 79° 35' | கிழக்கு |
| நிலை | 3 : | 09° 40.15' | வடக்கு | 79° 22.60' | கிழக்கு |
| நிலை | 4 : | 09° 21.80' | வடக்கு | 79° 30.70' | கிழக்கு |
| நிலை | 5 : | 09° 13' | வடக்கு | 79° 32' | கிழக்கு |
| நிலை | 6 : | 09° 06' | வடக்கு | 79° 32' | கிழக்கு |

மேலே கண்ட இந்த வரையறைக்குட்பட்டு இந்திய நாட்டு மீனவர்களும், புனிதப் பயணம் செய்வோரும் (Pilgrims) இதற்கு முன்னர் சென்று வந்தது போலவே இனியும் கச்சத்தீவுக்குச் சென்று வரலாம். அதற்காக அவர்கள் பயண ஆவணங்களும், இசைவு ஆணைகளும் ஸ்ரீலங்கா அரசிடமிருந்து பெற வேண்டியதில்லை. மீனவர்கள் அங்குச் சென்று வலைகளை வேண்டுமானால் உலர்த்தலாமே ஒழிய, அத்தீவைச் சுற்றி ஸ்ரீலங்கா கடற்பரப்பில் மீன் பிடிக்கக்கூடாது.

**2. மன்னார் வளைகுடா :**

மன்னார் வளைகுடாவில் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான கடல் எல்லை, நிலப்பட நெடுங்கோடுகள், கிடைக்கோடுகளால் வரையறுக்கப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைமையின்படி கீழ்க்காணும் நிலைகளுக்கு இடையே வளையக்கோடுகளாக அமையும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிலை | 1m : | 09° | 06'.0 | வடக்கு | 79° 32.0' | கிழக்கு |
| நிலை | 2m : | 09° | 00'.0 | வடக்கு | 79° 31'.3 | கிழக்கு |
| நிலை | 3m : | 08° | 53'.8 | வடக்கு | 79° 29'.3 | கிழக்கு |
| நிலை | 4m : | 08° | 40'.0 | வடக்கு | 79° 18'.2 | கிழக்கு |
| நிலை | 5m : | 08° | 37'.2 | வடக்கு | 79° 13'.0 | கிழக்கு |
| நிலை | 6m : | 08° | 31'.2 | வடக்கு | 79° 04'.7 | கிழக்கு |
| நிலை | 7m : | 08° | 22'.2 | வடக்கு | 78° 55'.4 | கிழக்கு |
| நிலை | 8m : | 08° | 12'.2 | வடக்கு | 78° 53'.7 | கிழக்கு |
| நிலை | 9m : | 07° | 35'.3 | வடக்கு | 78° 45'.7 | கிழக்கு |
| நிலை | 10m : | 07° | 21'.3 | வடக்கு | 78° 38'.8 | கிழக்கு |
| நிலை | 11m : | 06° | 30'.8 | வடக்கு | 78° 12'.2 | கிழக்கு |
| நிலை | 12m : | 05° | 53'.9 | வடக்கு | 77° 50'.7 | கிழக்கு |
| நிலை | 13m : | 05° | 00.0 | வடக்கு | 77° 10'.6 | கிழக்கு |

**3. பாக் ஜலசந்தி :**

வங்காள விரிகுடாவில் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான பாக் ஜலசந்தியில் கடல் எல்லை, நிலப்பட நெடுங்கோடுகள், கிடைக்கோடுகளால் வரையறுக்கப்பட்டு, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறைமையின்படி கீழ்க்காணும் நிலைகளுக்கு இடையே வளையக்கோடுகளாக அமையும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிலை | 1b : | 10° | 05'.0 | வடக்கு | 80° | 03'.0 | கிழக்கு |
| நிலை | 1ba : | 10° | 05'.8 | வடக்கு | 80° | 05'.0 | கிழக்கு |
| நிலை | 1bb : | 10° | 08'.4 | வடக்கு | 80° | 09'.5 | கிழக்கு |
| நிலை | 2b : | 10° | 33'.0 | வடக்கு | 80° | 46'.0 | கிழக்கு |
| நிலை | 3b : | 10° | 41'7 | வடக்கு | 81° | 02'.5 | கிழக்கு |
| நிலை | 4b : | 11° | 02'.7 | வடக்கு | 81° | 56'.0 | கிழக்கு |
| நிலை | 5b : | 11° | 16'.0 | வடக்கு | 82° | 24'.4 | கிழக்கு |
| நிலை | 6b : | 11° | 26'.6 | வடக்கு | 83° | 22'.0 | கிழக்கு |

மேலே குறிப்பிட்ட ஒப்பந்தங்களின்படி இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையில் கச்சத்தீவு, பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா ஆகிய மூன்று பகுதிகளுக்கும் கடல் எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள நமது நாட்டு எல்லைகளை மனத்தில் கொண்டு இந்திய எல்லைக்குள்ளேயே மீன் பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்திய எல்லைகளை மீறிச் சென்று ஸ்ரீலங்கா கடல் எல்லைக்குள் மீன் பிடித்த மீனவர்கள் மீது, ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்துள்ளதால், இந்திய மீனவர்கள் நமது கடல் எல்லையைத் தாண்டி ஸ்ரீலங்காவின் கடல் எல்லைக்குள் சென்று மீன் பிடிக்க வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகின்றனர்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

**ஆண்டுக்கு இருமுறை**

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட* **11,116** *பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| | முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. 1,00,000 |
| 5 | இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50,000 |
| 10 | மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 20,000 |
| 100 | நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 5,000 |
| 1,000 | ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 500 |
| 10,000 | ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# மின் சக்தி பெருகிட எண்ணூரில் 5 வது யூனிட்

தமிழகத்தின் மின்சாரத் தேவை நாள்தோறும் வளர்ந்து கொண்டு வருகிறது எனினும் மின் உற்பத்தியை அதிகரித்துத் தேவையைச் சமாளிக்கத் தமிழ்நாடு அரசு, தக்க வகையில் முயற்சியெடுத்துப் பணியாற்றி வருவது குறிப்பிடத் தக்கது. வரலாற்றுப் புகழ்மிக்க இந்தச் சாதனையில் நினைவு கூர்ந்து பாராட்டத்தக்கதொரு மைல்கல்லாக விளங்குகிறது எண்ணூர் அனல் மின் நிலையம்.

பொதுவாக, நீர்மின்சார உற்பத்திக்காகும் செலவு மிகக் குறைவானதே எனினும், வற்றாத ஜீவநதிகள் ஏதுமின்றிப் பருவமழையையே நம்பியிருக்கும் ஒருநாட்டில், நீர்மின்சார உற்பத்தி குறைந்தால் எத்துணை விபரீதங்கள் - பயங்கரங்கள் - இழப்புகள் ஏற்படக்கூடும் என்பவற்றை நாம் அனுபவத்தில் கண்டு வருகிறோம். இந்த நிலையை மாற்றி, மின் உற்பத்தியை நிரந்தரமாக்கி நிலைப்படுத்தும் எண்ணத்தின் அடிப்படையில்தான், தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூரில் பெரிய அளவில் ஓர் அனல்மின் நிலையத்தை அமைத்திடத் திட்டமிட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மிகப் பெரிய திட்டமான எண்ணூர் அனல்மின் நிலையம், சுமார் 88 கோடி ரூபாய் முதலீட்டில், 5 டர்போ ஜெனரேட்டர்களுடன் உருவாக்கப்பட்டது. 1965-1976 ஆண்டுகளுக்கிடையே கட்டப்பட்ட இந்த அனல்மின் நிலையத்தின் மொத்த உற்பத்தித் திறன் 450 மெகாவாட் ஆகும். அதாவது, எண்ணூரில் கடந்த 10-4-76-ல் திறந்து வைக்கப் பெற்ற 5-வது மின் இயந்திரத்தின் உற்பத்தி 110 மெகாவாட். இதன் மூலம் தமிழ்நாடு மின் கிரிடின் மொத்தத் திறன் 2,254 மெகாவாட்டிலிருந்து 2,364 மெகாவாட் ஆக உயர்ந்திருக்கிறது.

எண்ணூர் அனல் மின்நிலையம் இரண்டு கட்டங்களாகச் செயற்படுத்தப்பட்டது. 60 மெகாவாட் திறன் கொண்ட 2 யூனிட்டுகளும் 110 மெகாவாட் திறன்கொண்ட 2 யூனிட்டுகளும் அமைப்பது முதற்கட்டம்; 110 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு யூனிட் அமைப்பது இரண்டாவது கட்டம். இவ்விரு கட்டப்பணிகளுக்கும் முறையே 63 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 23 கோடியே 50 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

1964 செப்டம்பரில் திட்டக் குழுவின் ஒப்புதல் பெற்று, 1965 இல் ஆரம்பிக்கப்பட்ட முதல் யூனிட் 1970-ல் துவக்கி வைக்கப்பட்டது. அதன்பின் ஆண்டு தோறும் ஒரு யூனிட் துவக்கி வைக்கப்பட்டது. 4-வது யூனிட் 1973-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர், 110 மெகாவாட் திறன் கொண்ட 5-வது யூனிட் அமைக்கும் இரண்டாவது கட்டப் பணி, 1973 ஏப்ரலில் மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த யூனிட்டுக்கு ஐதராபாத்தின் 'பெல்' ( BHEL ) நிறுவனம், திருச்சி 'பெல்' நிறுவனம், கோட்டாவிலுள்ள இன்ஸ்ட்ருமென்டேஷன் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் கருவிகளை வழங்கியுள்ளன. 6.6 கிலோவாட் ஸ்விட்ச் கியர், குளிர வைக்கும் தண்ணீர் பம்புகள், சில 'இன்ஸ்ட்ருமென்டேஷன்' கருவிகள் தவிர மற்றக் கருவிகள் அனைத்தும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. 'பெல்' மற்றும் 'இன்ஸ்ட்ருமென்டேஷன் லிமிடெட்' நிறுவனங்களின் வழிகாட்டுதலின் பேரில் தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த யூனிட்டை நிர்மாணித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இங்குப் பயன்படுத்தப்பட்ட 'டர்போ ஜெனரேட்டர்' ஹைதராபாத் 'பெல்' நிறுவனம் தயாரித்த 9-வது 'டர்போ ஜெனரேட்ட'ராகும். ஆனால் செயல்படுத்தப்படுவதில் ஐந்தாவதாகும். இதற்குப் பொருந்தக் கூடிய கொதிகலன் திருச்சி 'பெல்' நிறுவனம் தயாரித்த, 11-வது கொதிகலனாகும்; ஆனால் செயல்படுத்துப்படுவதில் 5-வது ஆகும்.

இந்த ஐந்தாவது யூனிட்டை நிறுவுவது, இயக்குவது ஆகியவை

தொடர்பான பணிகளை 'பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்'டின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு மின்சார வாரியப் பொறியியல் வல்லுநர்களே செய்துள்ளனர் என்பதும், இந்த நிலயத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் பல, உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்தே பெறப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடக்கத்தில், அதாவது 1965-ல் எண்ணூரில் பனங்காடாக விளங்கிய இந்தப் பகுதி இப்போது, தமிழகத்தைத் தொழில்மயமாக்கவும், பசுமைப் புரட்சியின் உச்சக்கட்டத்தை அடையவும், உபயோகப்படும் மின்சாரத்தை வாரி வழங்கும் பூமியாகவே காணப்படுவதோடு, மழையையே முழுக்க முழுக்க நம்பியிருக்க வேண்டிய நிலைமைக்கும் ஓரளவு விடிவு ஏற்பட்டுள்ளது.

இந்த ஐந்தாவது யூனிட்டை 10-4-76-ல் தமிழ்நாடுஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தலைமையில், மத்திய எரிபொருள் அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் துவக்கி வைத்தார். துவக்க விழா உரையில் கூறியதாவது:

''1973-ல் அனுமதி வழங்கப்பட்ட இந்த விஸ்தரிப்புத் திட்டம் 1975 மார்ச் மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்பட முதலில் திட்டமிடப் பட்டிருந்தது. எனினும் நீண்ட காலமாக இத்திட்டத்திற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று தோன்றுகிறது. 1974-ஆம் ஆண்டு இறுதியில் மத்திய மின் துறை நிர்வாகம் இத் திட்ட வளர்ச்சியைக் கண்காணிக்கத் துவங்கியபோது பல பகுதிகள் முடிக்கப்படாமல் பாக்கியிருந்தன. இத்திட்டத்திற்கான பல சாதனங்கள் விநியோகிக்கப்படவில்லை. கட்டட வேலை, கால தாமதமாக நடந்தது. சில மாதிரி அமைப்புகள்கூடப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன. இதையெல்லாம் எண்ணும்போது 1975 டிசம்பர் 23-ந் தேதி இப்பிரிவு ஒழுங்குபடுத்தப்பட்டது மிகவும் பாராட்டிற்குரியது.

''மின்சக்தி அபிவிருத்தியில் தமிழ்நாடு ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் மின் சக்தி அபிவிருத்தியின் முன்னோடியாக அது விளங்கியது. கிராமங்களுக்கு மின்சக்தியை விஸ்தரித்த பெருமையும் அதற்கு உண்டு.



**ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் விழா மலரை வெளியிட்டு, மத்திய எரிபொருள் அமைச்சர் திரு கே. சி. பந்த் அவர்களிடம் வழங்குகிறார்.**

''கடந்தசில ஆண்டுகளில் இந்த மாநிலம் மின் சக்தி விநியோக நிலைமையில் மிகவும் பின் தங்கியிருந்தது துரதிருஷ்டவசமானதாகும். மின்சக்தி விநியோகத்தில் கடுமையான கட்டுப்பாடு ஏற்பட்டது. எண்ணூர் அனல் மின் சக்தி நிலயத்தின் திறனளவு உபயோகம் 30 சதவிகிதத்தும் குறைவாகவே இருந்தது. திறமையற்ற நிர்வாகம், ஊக்கமின்மை, தவறான ஊழியர் நலக் கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து அத்தகைய நிலை ஏற்பட்டது.

''இப்பொழுது நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1976 மார்ச்சில் எண்ணூர் நிலயத்தின் செயல்முறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டுள்ளது. அப்பொழுது அந்நிலயத்தின் திறனளவு உபயோகம் 60 சதவிகிதத்துக்கும் மேலாக அதிகரித்து விட்டது. 1976-ஆம் ஆண்டின் நல்ல பருவ நிலை, மின்சக்தி விநியோகத்தைக் கணிசமாக மேம்படுத்த உதவியது. அண்டை மாநிலமாகிய கேரளத்தின் உதவியோடு அடுத்த பருவக் காலம்வரையில் மின்சக்தி விநியோக நிலைமை திருப்திகரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்வாரியம் இப் பலன்களை ஒன்று திரட்டி அதிகமான மின் சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு மேலும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்.

''வேலை ஒய்வு நேரத்தைக் குறைப்பது, செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான வழிகளில் ஒன்றாகும். வேலை ஒய்வு நேரத்தைக் குறைந்தபட்சமாகக் குறைப்பதற்கு மின்சக்தி நிலயங்களை நிர்ப்பந்திப்பதுடன் கூட, முறையான பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பதற்கான வேலை ஒய்வு நேரத்தைக் குறைப்பதற்கு உரிய வழிமுறைகளைப் பற்றி யோசனை கூறும் குழு ஒன்றையும் நிறுவியுள்ளோம். பெரும் மின் நிலயங்களின் பராமரிப்பை நவீனப்படுத்துவது பற்றிய இக்குழுவின் அறிக்கை நிர்வாகம், மனித சக்திச் சாதனங்கள், கருவிகள், இயந்திரங்கள் முதலிய அம்சங்கள் அனைத்திலும் முறையான பராமரிப்பைத் திட்டமிடுவதற்கு உரிய வழிமுறைகளை மிக விரிவாக அளித்துள்ளது. இந்த அறிக்கையின் நகல்கள் மாநில மின்வாரியங்கள் எல்லாவற்றிற்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் அடங்கியுள்ள வழிமுறைகளைச் செயல்படுத்துவதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதனால் ஏற்படும் பலன்களை மத்திய மின் துறை நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டாலும் நான் மகிழ்ச்சியடைவேன். அத்தகைய பின் விளைவு அறிக்கைகளின் அடிப்படையில் இந்த வழிமுறைகளைத் திருத்தி அமைத்து அவற்றை மேம்படுத்த முடியும்.

''அனல் மின்நிலயங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதில் ஓர் அம்சமாக, மத்திய மின் துறை நிர்வாகம் தவிர்க்க முடியாத இழப்புக்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்கத் துவங்கியுள்ளது. அவற்றை ஆராய்ந்து முக்கிய காரணங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் நிரந்தரச் சீரமைப்பு முறைகளை உருவாக்குவதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.



**என்னூர் அனல் மின் நிலைய 5 வது யூனிட்டை மத்திய எரிபொருள் அமைச்சர் திரு கே.ஸி. பந்த் அவர்கள் 10-4-76 அன்று துவக்கி வைத்தார்**

வளரும் நாடுகளின் மின் நிலையங்களோடு ஒப்பிடுகையில் இந்திய மின் நிலையங்களில் ஏற்படும் கட்டாய இழப்புக்களினால் உண்டாகும் மொத்த இழப்பு நேரம், மிக அதிகமானதாக இன்னமும் உள்ளது. இத்துறையில் கணிசமான மேம்பாட்டுக்கு வாய்ப்பு உள்ளது.

''சரியான ஊழியர் நலக் கொள்கையையும் பயிற்சித் திட்டத்தையும் ஏற்றுக் கொள்வது மின் நிலையங்களின் மேம்பட்ட நிர்வாகத்துக்கு ஒரு முக்கிய அம்சமாகும். வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தில் அனுபவ மிக்க மின்சக்தித் தட்டுப்பாடு எப்போதும் இருக்கிறது; ஆகையால் கிடைக்கக்கூடிய வளங்களை மிகச் சிறப்பான முறையில் உபயோகிக்க வேண்டியது இன்றியமையாதது. ஒரு வேலை திறமையாகவும் விரைவாகவும் செய்யப்பட வேண்டுமானால் தகுந்த அனுபவம் உள்ள ஆட்களைத் தெரிந்தெடுத்து வேலைக்கு அமர்த்த வேண்டும். ஊழியர்கள் அடையும் அனுபவம் பெரும் பொறுப்புக்களை நிர்வகிக்கும் திறமையை அவர்களிடம் மலரச் செய்யும் வகையில் வேலைப் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும்.

''வேலையைத் துரிதமாக முடிப்பதற்குப் போதுமான அதிகாரங்களை வழங்குவது மற்றொரு மிக முக்கிய அம்சமாகும். ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கான பொறுப்புள்ள நபருக்கு, அப்பணியைக் கண்காணிக்கத் தேவையான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டியது அவசியம். தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டுமானால், தீர்மான முடிவுகள் எடுப்பதை மத்திய அதிகாரத்திலிருந்து பிரித்துப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். பெரிய திட்டங்கள் காலவரம்பு கொண்ட திட்டங்களின்படி செயல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் அபூர்வமான மூலதன வளங்கள் நன்கு உபயோகப்படுத்தப்படாமல் போய் விடும். அடிமட்டங்களில் பெரும் அதிகாரங்களைப் பிரித்து அளித்தல் அந்த அதிகாரங்களை ஓரிடத்தில் குவிப்பதற்கல்ல; அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதை தடுப்பதற்கு நேர்மையான, தகுதியான ஆட்களை வேலைகளில் அமர்த்துவதை உறுதி செய்ய வேண்டும்.

''தூத்துக்குடி அனல்மின் நிலையம், தமிழ்நாட்டின் பொறுப்பிலுள்ள மிக முக்கிய மின்நிலையமாக இருக்கிறது. அது தனது மின் உற்பத்தித் திறனளவை 600 மெகாவாட் அளவுக்குப் பெருக்கும். இருப்பினும் இத்திட்டத்தின் வளர்ச்சி திருப்திகரமாக இல்லை. 1973 செப்டம்பர் மாதத்திலேயே இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும் அதன் முதல் பிரிவு - 5வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டிலேதான் உற்பத்தியைத் துவக்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது; இதற்குக்கூட இப்போதிலிருந்தே வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கணிசமாக முடுக்க வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியம் மிக ஆர்வத்துடன் இதனை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டால் அது மகிழ்ச்சியளிக்கும்.''

## ஆளுநர் அவர்களின் தலைமையுரை

தமிழ்நாடு ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் தம் தலைமையுரையில், ''புதிதாகத் துவக்கி வைக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவின் உற்பத்தித் திறனளவைச் சேர்த்தால் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மொத்த உற்பத்தித் திறனளவு 450 மெகாவாட் ஆகிறது; இந்தப் பிரிவின் அமைப்புக்காக முழுக்க முழுக்க உள்நாட்டுச் சாதனங்களையே உபயோகித்துள்ளது அதிக திருப்தி தரும் ஒன்றாகும். தமிழ்நாடு மின்சார வாரியம், 'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்' நிறுவனத்தின் உதவியுடன் எவ்விதமான

# காதி கிராப்ட்






உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக்கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள்.

அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்.

ரமானது ... மலிவானது ... இவை வாங்கிட
தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

**காதி கிராப்ட்**

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம்,
'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381

அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவியுமின்றி இந்தச் சாதனை யைப் புரிந்துள்ளது பெருமை தரத்தக்க செயலாகும்'' என்றும்,

''மின் அபிவிருத்தியில் மிகவும் முன்னணியில் இருந்த தமிழகம் கடந்த சில ஆண்டுகளில் குறிப் பாக மின் உற்பத்தியில் பின்னல் தள்ளப்பட்டது என்றும், மின் உற்பத்தியில் போதுமான கவனம் செலுத்தப்படாமையே அதற்குக் காரணம்'' என்றும்,

''தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் முதல் பிரிவு 1978 டிசம்பர் மாதத்தில் துவக்கப் படும் என்று எதிர்பார்ப்பதாக வும், அந்த அனல் மின் திட்டத் தின் அமைப்புக்கான பொறுப் பினை ஏற்றுள்ளவர்கள் அதற்கான வேலைகளை முடுக்கிவிட்டுக் குறித்த காலத்தில் மின் உற்பத்தி நடை பெற உதவ வேண்டும்'' என்றும்

''நடப்பு ஆண்டில் ரூ. 5 கோடி அனுமதியுடன் பாண்டியாறு புன்னம்புழா திட்ட வேலைகளும் துவக்கப்படும்'' என்றும் குறிப் பிட்டார்.

மலர் வெளியீடு

தமிழ்நாடு ஆளுநர் அவர் களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், மின் வாரிய ஊழியர்களுக்குக் கட்டப் படவிருக்கும் 208 வீடுகள் கொண்ட குடியிருப்புக்கு அடிக் கல் நாட்டி, விழாச் சிறப்பு மல ரையும் வெளியிட்டு உரையாற்று கையில்,

''மின்வாரியம் போன்ற அமைப்புகளில் பணியாற்றுகிற அரசு ஊழியர்கள் மரியாதையுட னும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும்; அரசாங்கத் தின் சிறப்பு, தலைமைச் செயலகத் தில் உள்ளவர்களால் மட்டுமே உயருவதில்லை. எழுத்தர்கள், மின்துறை லைன்மேன்கள் போன்ற ஊழியர்களாலும் அரசின் சிறப்பு அதிகரிக்கிறது.'' என்று குறிப் பிட்டார்.

தொடக்கத்தில் மின்வாரியத் தலைவர் திரு. எம். எம். இரா ஜேந்திரன், ஐ.ஏ.எஸ். அனைவரை யும் வரவேற்றார்.

பசுமைப்புரட்சிக்கும், தொழில் புரட்சிக்கும் இன்றியமையாது தேவைப்படும் மின்சக்தியை உற்பத்தி செய்து, நாடு வளம் பெற, எண்ணூர் அனல் மின் நிலையம் உதவிடும் என்பதில் ஐய மில்லை.

— சாமி. பழனியப்பன்

# புதை பொருள்கள் தரும் வரலாற்றுத் தகவல்கள்



இந்தியாவின் ஆரியக் கலாச்சாரத்தோடு சம்பந்தப்பட்ட கிழக்கிந்தியக் கலாச்சாரப் பண்பாடுகளுக்கும் ஹரப்பா கலாச் சாரத்தின் கடைசிக் கட்டப்பண்பாடுகளுக்கும் தொடர்பு இருப்பது ஹரியானாவில் குருஷேத்திர மாவட்டத்தில் பாகவனபுராவில் புதைபொருள் ஆராய்ச்சியின் போது தெரிய வந்தது. சரஸ்வதி ஆற்றின் கரையருகே அமைந்த இப்பகுதியில் நடப்புப்பருவக் காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

குருஷேத்திரத்தில் வாழ்ந்த மக்களின் கலாச்சாரம் பற்றித் தெரிந்து கொண்டு, சரித்திரத்தை மீண்டும் உருவாக்க, இந்தப் புதைபொருள்கள் பெரிதும் உதவும். இப்பகுதியில் இவ்விரு நாகரிகங்களும் இருந்துள்ளன என்பது, அவர்கள் பயன்படுத்திய வண்ண ஓவியம் கொண்ட மண்பாண்டங்களிலிருந்தும் சிற்பங் களிலிருந்தும் தெரிய வருகிறது. இவ்விரு நாகரிகக்காலத்தின் போது இரும்பு பயன்படுத்தப் படவில்லை.

ஹரப்பா நாகரிக காலத்தின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தாம் சரஸ்வதி நதியின் வண்டல் மண் பகுதிகளில் முதன் முறையாகக் குடியேறியிருக்கின்றனர். வெள்ளத்தடுப்புக்காக அவர்கள் 2 மணல் மேடுகளை எழுப்பியிருப்பது தெரிய வருகிறது. இவ்வாறு இருந்தபோதிலும் இருமுறை அப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வண்ண ஓவியம் கொண்ட பழுப்பு மண் பாண்டங்களைப் பயன்படுத்துவோர் வாழ்ந்த காலத்தில் தான் இரண்டாவது முறையாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அத்தகையோரின் கல்லறைகள், வீடு கட்டும் முறை போன்ற முக்கிய விஷயங்கள் பற்றி அண்மைக்கால ஆய்வு தெரிவிக்கிறது. அந்த மக்கள், அரைவட்ட வடிவமான குடிசை களில் வசித்து வந்திருக்கின்றனர். அந்த நாகரிகத்தின் அடுத்த கட்டத்தில் அவர்கள் மண் சுவர்கள் எழுப்பி வீடு கட்டிக் கொண்டுள்ளனர். இந்தப் புதை பொருள் ஆராய்ச்சியின் போது, 13 அறைகளும், முற்றமும் கொண்ட பெரிய வீடு ஒன்று இருந்ததற்கான சான்று கிடைத்துள்ளது. 1.60 மீட்டர் நீளம் X 1.60 மீட்டர் அகலம் கொண்ட அறை முதல் 3.35 மீட்டர் நீளம் X 4.20 மீட்டர் அகலம் கொண்ட அறைவரை, பலவகையான அறைகள் இருந்திருக்கின்றன. அந்த வீட்டி லிருந்து விலங்கின் எலும்புகள், மண்பாண்டங்கள், செப்புப் பொருட்கள், வண்ணம் தீட்டப்பட்ட பாண்டங்கள், மண் உருண்டைகளால் ஆன மணிகள் ஆகியவை எடுக்கப் பட்டுள்ளன. மூன்றாவது கட்டக் கட்டட அமைப்பில் 3 விதச் செங்கற்களால் ஆன கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மக்கள் வசிக்கும் பகுதியிலேயே இரண்டு கல்லறைகள் உள்ளன. இவ்விரண்டிலும் உள்ள எலும்புக் கூடுகள் வடக்கு- தெற்கு நோக்கி இருக்கின்றன.

# வறட்சி நிவாரணத்தில்

# மத்தியப் பேரரசின் உதவி!

—திரு. ஆர். பத்மநாபன்,
(செயலர், வருவாய் வாரியம்)

சென்ற 1974-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வட கிழக்குப் பருவக் காற்றினால் பெய்ய வேண்டிய மழை மிக மிகக் குறைவாகப் போயிற்று. சாதாரணமாக வட கிழக்குப் பருவக் காற்றினால் சராசரி 461.20 மி.மீ. அளவுக்குத் தமிழ்நாட்டில் மழை பெய்ய வேண்டும். ஆனால் 1974-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் டிசம்பர் முடிய 198 மி.மீ. அளவுக்குத் தான் பெய்தது. அதுவும் பெய்ய வேண்டிய காலத்திலும் பரவலாகப்பெய்யாததனாலும்நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள் முதலியவற்றில் போதுமான தண்ணீர் நிரம்பவில்லை. வானிலை ஆராய்ச்சித் துறையினரும், 'இவ்வளவு குறைவாகவும் காலம் தவறியும் சென்ற நூறு ஆண்டுகளில் அதாவது 1876 முதல் தமிழ்நாட்டில் எப்பொழுதும் வட கிழக்குப் பருவக் காற்று மழை தவறியதில்லை', என்று சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரிப் பருவத்தே மழை பெய்யாததன் காரணமாக, ஆற்றுப் பாசன வசதியுள்ள இடங்களும், டெல்டாப் பிரதேசங்களும் தவிரத் தமிழ்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வறட்சி நிலைமை ஏற்படலாயிற்று. மார்கழி, தை மாதங்களிலேயே தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே குடி தண்ணீர் கிடைப்பதும் அரிதாகப் போனது சென்ற ஆண்டில்தான். தவிர, தென் மேற்குப் பருவக் காற்றினால் பெய்த மழையை நம்பி எப்படியும் ஓரளவு மழை பெய்யக்கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஏழை, எளிய, விவசாய மக்கள் தங்களிடமிருந்த தானியங்களை விதையாக இட்டு ஓரளவு மகசூலை எதிர்பார்த்தனர். ஆனால் வானம் பொய்த்ததால் இந்தப் பயிர்கள் விளையவில்லை. அதன் பயனாக, எதிர்பார்த்த பயிர் நட்டத்துடன் கையிலிருந்த பொருளும் செலவாகி அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை வாங்கவும் வசதியற்ற நிலைமையில் இருந்தனர். இம்மாதிரி வறட்சியால் ஏற்பட்ட இடுக்கண்களைக் களைய ஒரு மும்முனைத் திட்டம் செயலாக்கப்பட்டது.

அதன்படி, முதலாவதாகப் பொதுமக்களுக்கு ஆங்காங்கே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தியும் புதிய கிணறுகளை வெட்டியும், குடிதண்ணீர் வசதி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அத்துடன்கூட எல்லா இடங்களிலும் போதுமான அளவு உணவு தானியங்களை ஆங்காங்கு வைத்து நியாயமான விலைக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாயிற்று.

பயிர் நட்டமடைந்து தவிக்கும் விவசாயிகளுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய நிலவரி, அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் முதலானவற்றிலிருந்து நிவாரணம் அளிக்க வேண்டியதாயிற்று.



மூன்றாவதாக, வறட்சியினால் பாதிக்கப்பட்டவர்கள், அன்றாட வாழ்க்கைப் பொருட்களை வாங்குவதற்கு வசதியாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஆங்காங்கு வேலை வாய்ப்பு அதிகம் உள்ள மராமத்து வேலைகள், சாலைகள் அமைத்தல் முதலான பல்வேறு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. வருவாய் வாரிய உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் பல்வேறு மாவட்டங்களிலே உள்ள நிலையை அவ்வப்போது ஆராய்ந்து இந்த மும்முனைத் திட்டப்படி அவசியமான இடங்களில் வேலை வாய்ப்புத் தரவும், குடி தண்ணீர் வசதி தரவும் செயல்பட்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள 17,069 கிராமங்களில் 12,022 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அறிவிக்கப்பட்டது. முன் சொன்ன திட்டங்களின் அடிப்படையிலே ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளில் 1975-ஆம் ஆண்டு ஜனவரி முதல், மார்ச் வரையிலே குடிதண்ணீர் வசதி செய்வதற்காக 352 இலட்ச ரூபாயும்; குளம் ஏரி முதலானவற்றை மராமத்துச் செய்யும் வகையில் 377 இலட்ச ரூபாயும்; சாலைகள் அமைப்பதில் 148 இலட்ச ரூபாயும்; மண் வளத் திட்டத்துக்காக 2 இலட்ச ரூபாயும்; ஆக 880 இலட்சம் அதாவது 8.8 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ஆயினும் 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு அப்பாலும் வறட்சி நிலை தொடர்ந்து நீடித்ததால் மேற்சொன்ன வேலைகளை இன்னும் தொடர்ந்து செய்ய வேண்டிய நிலை உருவாயிற்று. ஆக 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல், நவம்பர் முடியக் குடி தண்ணீர் வசதிக்காக 709 இலட்ச ரூபாயும், ஏரி குளங்கள் மராமத்து சம்பந்தமாக 633 இலட்ச ரூபாயும், சாலைகள் மண் வளம் வேலைகளிலே 232 இலட்ச ரூபாயும் ஆக 1,572 இலட்சம் அதாவது 15.72 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இதன் பயனாகக் குடிநீர்

வசதிக்காக 36,028 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும் புதிதாக வெட்டப்பட்டும் உள்ளன. 17,300 பாசன வசதிகளுக்கு மராமத்து மேற்கொள்ளப்பட்டன. தவிர 6,500 புதிய சாலைகளும் அமைக்கப்பட்டன. ஆக, சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சி நிலையைச் சமாளிக்கச் சுமார் 25 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் மத்தியப் பேரரசின் உதவி மட்டும் ரூபாய் 7.5 கோடியாகும். முன் சொன்னவை தவிர சாதாரணமாக ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் மேற்கொள்ளும் வேலைகள் குறிப்பாகவும், சிறப்பாகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. ஆங்காங்கு உள்ள மக்கள் வேலையின்றி அவதியுற்ற காரணத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் நோக்கத்தால் இம்மாதிரி செயல்படுத்தப்பட்டது. இந்த வகையில் 1975-ஆம் ஆண்டு ஜனவரி முதல், மார்ச் மாதம் வரையில் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. திட்ட அடிப்படையில் இந்தச் செலவில் ஒரு பகுதி மத்திய அரசின் உதவியுடன் கூடியதாகும்.

வறட்சி நிலைமை ஏற்பட்டவுடன் 1975-ஆம் ஆண்டு ஆரம்பத்திலே தமிழ்நாட்டில் ஒரு பயங்கரச் சூழ்நிலையே உருவாயிற்று. இந்தச் சூழ்நிலையை நேரிடையாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டி, சென்ற ஆண்டு ஜனவரி மாத இறுதியில் மத்தியப் பேரரசின் விவசாயத் துறை ராஜாங்க அமைச்சர் மாண்புமிகு ஏ.பி. ஷிண்டே அவர்கள் தலைமையில் ஒரு குழு தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. தவிர மேதகு ஆளுநர் அவர்களும் வறட்சி நிவாரண ஆணையாளர்





அவர்களும் ஆங்காங்குச் சென்று வேலைகளைப் பார்வையிட்டனர். நிவாரணம் அளிக்க வேண்டிய அளவு பற்றி விவாதிக்க, சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று, மத்தியப் பேரரசின் நிதியமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னை வந்து விவாதித்து, அதன் பயனாக 'நிவாரண வேலைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கருதி மத்திய அரசின் உதவியாக ரூபாய் 7.5 கோடி வறட்சி நிவாரண வேலைகளுக்கு அளிக்கப்படும்' என அறிவித்தது, குறிப்பிடத்தக்கதாகும். காலத்தால் செய்த இந்த உதவி வறட்சி நிலைமையைச் சமாளிக்க மிகவும் உதவியாய் இருந்தது என்று சொல்லத் தேவையில்லை. இது தவிர, வறட்சியால் பாதிக்கப்படாத பொதுமக்களும் மேதகு ஆளுநர் உள்பட மற்ற அதிகாரிகளும் வறட்சி நிவாரண நிதிக்காகச் சுமார் மூன்று கோடி ரூபாய் வரை நன்கொடையாக அளித்தனர்.

பண உதவி செய்ததோடு மட்டுமல்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள மக்களுக்கு நியாய விலையிலே உணவுப் பண்டங்கள் கிடைக்க வேண்டி, சென்ற ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே மத்தியப் பேரரசு தமிழ்நாட்டுக்கு மத்திய கையிருப்பிலிருந்து கோதுமையும் அரிசியும், தட்டின்றி அனுப்பி வைத்தனர். அதன் பயனாகத் தான் ஆங்காங்கு உணவுப் பொருள்களைத் தட்டில்லாமல் கொண்டு சென்று மக்களின், குறிப்பாக, ஏழை விவசாய மக்களின்-அவசியத் தேவையை ஒருவாறு நிறைவேற்றி அவர்களைப் பசி, பட்டினியினின்று காப்பாற்ற முடிந்தது.

வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சமயத்தில் மத்தியப் பேரரசு தமிழ்நாட்டுக்கென 6 இலட்சம் டன்கள் கோதுமையும், 1.8 இலட்சம் டன்கள் அரிசியையும் கொடுத்து உதவியது காலத்தில் செய்த உதவியாகும்.

தவிரவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆங்காங்குள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளைத் தோண்டவும் மிக அவசியமாகத் தேவைப்பட்டவை ஆழ் கிணறு தோண்டுவதற்கு வேண்டிய சாதனங்கள் ஆகும். அதற்காகத் துளை போடும் கருவிகள், இயந்திரங்கள் முதலானவற்றை இதர மாநிலங்களிலிருந்து இங்கே அனுப்பி வைக்கவும், தவிர ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நல நிறுவனத்தார் தமிழ்நாடு குடிநீர் வாரியத்துக்கு வேண்டிய துளை போடும் கருவிகள், வாகன வசதிகள் முதலியவற்றைச் செய்து கொடுப்பதற்கும், துணை புரிந்தனர். அம்மாதிரி அவர்கள் மூலமாக இதர மாநிலங்களிலிருந்து கிடைத்த சாதனங்களைப் பயன்படுத்திக் குடிநீர் வாரியம் 3,635 புதுக் கிணறுகளைக் குறைந்த காலத்தில் உருவாக்கியுள்ளது. அப்போதுள்ள நிலையில் தீவிரமாகக் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மக்கள் பெருமளவு அவதிக்கு உள்ளாக நேரிட்டிருக்கும். வறட்சியின் கொடுமையிலிருந்து நிவாரணம் அளிப்பதற்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு பணிகளிலும் முன் சொன்ன மாதிரி, மத்தியப் பேரரசு பங்கேற்றுக் காலத்தால் செய்த பண உதவியும், இதர உதவிகளும், குறிப்பாக மத்திய அமைச்சர்கள் ஆங்காங்கு வந்து நிவாரண வேலைகளை மேற்பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் அளித்ததும் மறக்கற்பாலதன்று.

சென்ற அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் ஓரளவு பரவலாக மழை பெய்திருந்தாலும் இன்னும் நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சில இடங்களில் இவ்வாண்டும் தொடர்ந்து வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றைச் சமாளிக்கத் தமிழ்நாடு அரசும், மத்தியப் பேரரசும் வேலை வாய்ப்புத் திட்டங்களை மேற்கொண்டும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கப் புதுக் கிணறுகளைத் தோண்டவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நில வரி, கடன் சுமை முதலானவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கவும் அவசியமான திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

**(நன்றி: சென்னை வானொலி நிலையம்)**


வளமான
வாழ்விற்கு....
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.



# அன்றாட வாழ்க்கையில் கைவினைப் பொருள்

சிற்பக்கலை, ஓவியக் கலை, நாடகக் கலை, நாட்டியக்கலை, கட்டடக் கலை போன்ற எண்ணற்ற அருங்கலைகளின் உறைவிடமாக இந்திய நாடு இலங்கி வருகிறது.

இந்தியாவின் பழைமை வாய்ந்த கலாச்சாரப் பாரம்பரியத்தின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்கும் வண்ணம் கலைகளையும், கைவினைத் தொழிலையும் சென்ற பன்னிரெண்டு ஆண்டுகளாகக் காத்து வளர்த்து வருகிறது 'இந்தியக் கைவினைப் பொருட் சங்கம்''. (The Crafts Council of India.)

எல்லா வழிகளிலும் கைவினைத் தொழில் மறுமலர்ச்சி அடையச் செய்வதும், கைவினைப் பொருள் படைப்புக் கலையை அழியாமல் காப்பதும், நலிவுற்ற கைவினைஞர்க்கு உதவிபுரிவதுமே இச் சங்கத்தினுடைய குறிக்கோள்களாகும்.

1964-ஆம் ஆண்டு 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,000 கைவினைஞர்களைக் கொண்டு துவக்கப்பட்ட இச்சங்கம், உலகக் கைவினைப் பொருட்சங்கத்தின் அங்கீகாரம் பெற்றதாகும். அரசுச் சார்பற்ற நிறுவனமான இவ்வமைப்பு 'யுனெஸ்கோ'வுடன் தொடர்பு கொண்டதாகும். தற்போது பம்பாய், டெல்லி மற்றும் சில இடங்களில் இதன் மண்டல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்துக் கலைகள் மற்றும் கைவினைத் தொழில் பற்றி அறிந்து கொள்ளவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் உதவக்கூடிய முழு விவரங்களும் அடங்கிய ஒரு மாதிரி வடிவ வங்கி (Design Bank) சங்கத்தின் தலைமை யிடத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

மறைந்து கொண்டிருக்கும் பழைமை வாய்ந்த கைத் தொழிலைப் பற்றிய சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள், முதுநிலை கைத்தொழில் பயிற்சி வல்லுநரால் நடத்தப்பட இருக்கின்றன.

ஏற்கெனவே பூம்புகார் மாதிரி வடிவ அமைப்பு மேம்பாட்டு நிலையத்தின் (Poomphuhar Design Development Centre) உதவியுடன் 'கலம்கரி' வேலைகளில் (Kalamkari work) பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட்டுவிட்டன. மேலும் சமூகத்தின் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய குடிசைத் தொழில்களான பனைஓலைத் தொழில், பொம்மை செய்தல் போன்றவற்றையும் இச்சங்கம் நடைமுறைப் படுத்த இருக்கின்றது.

மேலும் உலகக் கைவினைத் தொழில் கழகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதனால் இந்தியக் கைவினைப் பொருட்சங்கம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உலகமெங்கும் இத்துறையின் முன்னேற்றங்களையும் செயல் முறைகளையும் வெளிப்படுத்தவும் பரப்பவும் ஏதுவாயிருக்கிறது.

இந்தியக் கைவினைப் பொருட் சங்கத்தின் தலைமையகம் டெல்லியிலிருந்து சென்னைக்கு மாற்றப் படுவதையொட்டி, 'அன்றாட வாழ்க்கையில் கைவினைப்பொருள்' என்றதொரு கைவினைப் பொருட் கண்காட்சி 27-4-'76 முதல் 1-5-'76 வரை சென்னையில் மாக்ஸ் முல்லர் பவனில் நடைபெற்றது.

மாநிலம் முழுவதிலிருந்தும் கைவினைக் கலைஞர்கள் கலந்து கொண்டு தாங்கள் உருவாக்கிய பொருட்களை காட்சிக்கும், விற்பனைக்கும் வைத்திருந்தனர். நவீன கலப்பு உலோகப் பொருட்கள், ஆலய ஆபரணங்கள், தோல் கைவினைப் பொருட்கள், காகித வேலைப் பாடமைந்த பொருட்கள், சிற்பங்கள் மற்றும் சித்திர வேலைப் பாடு கொண்ட திரைச்சீலைகள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்தியக் கைவினைத் தொழிற் சங்கமும் மாக்ஸ்முல்லர் பவனும் கூட்டாக நடத்திய பொருட் காட்சியினைத் துவக்கி வைத்து ஆளுநரின் ஆலோசகர் திரு. பி.கே தவே அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''சுவீடன் நாட்டில் ஒரு கைவினைஞருக்கு மாதச் சம்பளத் தோடு மட்டுமின்றி, புதிய பொருட்களை அவர் படைப்பதற்கு வசதியாக இடவசதி, கச்சாப் பொருள், பணவசதி முதலியனவும் ஏற்பாடு செய்து தரப்பட்டது. அதைப் பயன் படுத்தி, அவர் அருமையான கைவினைப் பொருட்களை உருவாக்கினார். விருத்தாச்சலத்தில் உள்ள பீங்கான் தொழிற்சாலையின் கைவினைஞர்களுக்கும் இதுபோன்ற வாய்ப்புக்களை உருவாக்கித் தந்தால், அவர்களும் பல அரிய கைவினைப் பொருட்களை உருவாக்கக்கூடும். குழந்தைகளுக்கும் இத்தகைய படைப்புக் கலையில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தர வேண்டும். புதிய பொருட்களை வடிவமைத்து தயாரிப்பதற்குரிய நிதியுதவியையும், கச்சாப் பொருட்களையும் கைவினைஞர்களுக்கு மத்திய அரசு அளித்து உதவ வேண்டும்.''

''அன்றாட வாழ்க்கையில் கைவினைப் பொருள்'' என்ற பொருட்காட்சியில் வைக்கப் பட்டிருந்தவை ஆடம்பரப் பொருளாக மட்டுமின்றி அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவைகளாகத் திகழ்ந்ததுடன் கைவினைஞர்களின் திறமையைப் பறைசாற்றும் பொருள்களாகவும் விளங்கின என்றால் மிகையல்ல!

—இராவணன்




# செய்தியும் சித்திரமும்



தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப் பட்டு வரும் பகுதிகளில் குடிநீர் வசதி அளிப்பதற்காக 4.5 கோடி ரூபாய் செலவில் 2,400 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்கத் தமிழ்நாடு அரசு திட்டம் வகுத்துள்ளது.



# எண்ணெய்ப் பொறியின் கதை



''நான்தான் எண்ணெய்ப் பொறி. எண்ணெய்ப் பொறி' என்ற என்னுடைய இயற்பெயரைச் சொன்னால் அநேகமாக உங்களுக்குத் தெரியாது! 'ஆயில் என்ஜின்' என்கிற ஆங்கிலப் பெயரைச் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும். இப்படித்தான், எனது எஜமானர் வீட்டில் அவரது மகன் ஒரு சின்னப் பையன் தனது தந்தையை ஒரு முறை ''அப்பா, ரேடியோவுக்கு இங்கிலீஷ் பேர் என்னப்பா?'' என்று கேட்டான். அந்த அளவுக்கு ''ரேடியோ'' என்ற பெயர் தமிழில் வழங்கப் பட்டுவிட்டது. அது சரி, என் குறைகளை உங்களிடம் கூற வந்து விட்டு, என் பெயர்ப் பெருமையைக் கூறிக் கொண்டிருக்கிறேன்.

''இன்றைய சூழ்நிலையில் நான் இந் நாட்டு மக்களுக்காக எவ்வளவு உழைக்கிறேன் தெரியுமா? வேளாண்மைத் துறையில் பம்பு செட்டுகளை நான்தான் இயக்குகிறேன். தொழிற்சாலைகளில் இயந்திரங்களை நான்தான் இயக்குகிறேன். ஆனால் இவையெல்லாம் எப்போது? மின்சாரப் பற்றாக்குறை வரும் காலங்களிலும், வறட்சிக் காலங்களிலும் மட்டும்தான்! மின்சாரப் பற்றாக்குறை வரும் காலங்களில் அந்த மின்சாரத்தையே உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களை இயக்குவதற்கும் என்னைத்தான் பயன்படுத்துவார்கள். ஆனால், மின்சாரப் பற்றாக்குறை அல்லது வறட்சி நீங்கி, நிலைமை சீரடைந்து விட்டாலோ! என்னையும், என்.சேவையையும் மக்கள் மறந்து விடுவார்கள். மீண்டும் மின்சாரப் பற்றாக்குறை அல்லது வறட்சி வரும் போதுதான் என்னைத் தேடுவார்கள். அப்படி அவர்களுக்கு நான் சேவை செய்கின்ற காலத்திலாவது என்னை நன்கு பேணிக் காப்பார்களா? என்றால் அதுவும் இல்லை. விவசாயிகளுக்கு முக்கியமான பயிர் செய்யும் காலத்தில் மின்வெட்டு அமுலுக்கு வந்துவிடும். எல்லோரும் ஒரே மூச்சாக என்னைத் தேடுவார்கள்! நாடுவார்கள். நான் அப்படியே பெருமையால் பூரித்துப் போய் மேனாமினுக்கி மின்சார மோட்டாரைப் பார்த்து லேசாகச் சிரிப்பேன். ஆனால், நான் அவர்களுக்கு சேவை செய்திடும் நேரத்தில் அவர்கள் என்னைப்படுத்தும் பாடு! அப்பப்பா, நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது!

''என்னோடு இணைக்கப்பட்டிருக்கும் பம்பு செட் வேலை செய்யவில்லையென்றாலும், என் மீது தான் குறை சொல்வார்கள்! நான் கறுப்பாகப் புகை விடுகிறேனாம்! அங்கங்கே எண்ணெய் ஒழுகிக் கொண்டு பார்ப்பதற்கே அசிங்கமாக இருக்கிறேனாம்! இதற்கெல்லாம் காரணம் யார்? என் முதலாளி என்னைச் சரியாகப் பராமரிக்காதது தானே! என் முதலாளி, அவர் வீட்டிலே வளரும் நாய்க்குட்டியைக் கூட அழகாகக் குளிப்பாட்டி, வேளைக்குச் சாப்பாடு போட்டு சுத்தமாக வைத்துக் கொள்கிறார். ஆனால், ஆயிரக் கணக்கில் பணம் செலவு செய்து வாங்கிய என்னையோ! ஆயில் என்ஜின் தானே! என்று உதாசீனப்படுத்துகிறார்! ஆனால், நான் இத்தனை அவமதிப்புகளையும், உதாசீனங்களையும் தாங்கிக் கொண்டு வேலை செய்வேன். அது தான் என் தப்பு! ''ஆயில் என்ஜினை எப்படி வைத்துக் கொண்டாலும் அது வேலை செய்யும்'' என்கிற எண்ணம் அவர்களுக்கு.

''தவறிப் போய் எப்போதாவது, நான் ரிப்பேர் ஆகி விட்டால் போதும்; என்னைக் கொண்டு போய் உள்ளூர் கிராமப் பட்டறையில் தள்ளி விடுவார்கள். என்னைச் சரி பார்க்கும் டாக்டர் இருக்கிறாரே! அதுதான் மெக்கானிக்! அவர் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியிருக்க மாட்டார்! அவர், என் பாகங்களில் தேய்ந்து போனவற்றிற்குப் புதிதாக எதையும் மாற்றவும் மாட்டார்! பட்டறைக்குப் போன உடன் என்னை மண்ணெண்ணெயில் குளிப்பாட்டுவார்! என்னை அக்கு வேறு, ஆணி வேறாகப் பிரித்துப் போடுவார்! தேய்ந்து போன பாகத்தை வெல்டிங் செய்து தட்டி நீட்டி, எப்படியோ தற்காலிக மருத்துவம் செய்து ஓடவிடுவார்! என் முதலாளியும் ஏமாந்துபோய் 50 அல்லது 100 ரூபாய் கொடுத்து என்னை எடுத்துக் கொண்டு போய் வயலில் வேலை செய்ய வைப்பார்! நான் பதினைந்தே நாளில் மீண்டும் ரிப்பேராகி விடுவேன்! அவர் உடனே சலித்துக் கொள்வார். ''சே! இந்த வறட்சி எப்போது தான் போகுமோ? இந்த ஆயில் என்ஜினை வைத்துக் கொண்டு மாரடிக்க வேண்டியிருக்கிறது'' என்று தலையிலடித்துக் கொண்டே என்னை மீண்டும் அந்தப் பட்டறை டாக்டரிடம் அழைத்துப் போவார். மீண்டும் அதே மண்ணெண்ணைக் குளியல், தட்டல், நீட்டல், வெல்டிங், தண்டச் செலவு!

''இதைத் தவிர்ப்பது எப்படி? இந்த விவசாயிகளுக்கு என் அருமைகளைப் புரிய வைப்பது எப்படி! எனக்கும் வாயிருந்திருந்தால் கதறிக் கதறிக் கூறியிருப்பேன்! என்

மனக் குறையையும் இந்த அரசு கவனித்தது! வேளாண்மைத் துறையின் இயக்குநர் அவர்கள் மூலம் மாவட்டங்களில் உள்ள கோட்டப் பொறியாளர்களுக்கு ஒரு ஆணை பிறப்பித்தது. உடனே கோட்டப் பொறியாளர்கள் **''ஆயில் என்ஜினையும், பம்பு செட்டுகளையும் பராமரிப்பது எப்படி?''** என்று ஒரு பயிற்சி முகாமை ஏற்பாடு செய்தார்கள். எனக்கோ, விடிவு காலமே வந்து விட்டது என்று பூரித்து நின்றேன். பயிற்சி முகாமும், கலந்து கொண்டவர்களுக்கு மிகவும் உதவியுள்ளதாக, வெற்றிகரமாக நடந்து முடிந்தது. ஆனல், அந்த முகாமில் கலந்து கொள்ளாதவர்களுக்கு எப்படித் தெரிவிப்பது! அதற்காகத்தான் என் கதையை உங்களுக்குச் சொல்கிறேன். இதைப் படிப்பவர்கள், அடுத்தவர்களுக்குச் சொல்வார்கள் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். சரி, இனி என்னைப் பராமரிப்பது எப்படி என்பதையும் கூறுகிறேன்! அதையும் கேளுங்கள்.

''முதலில், என்னை இயக்க ஆரம்பிக்கு முன்பு நீங்கள் முக்கியமாகச் செய்ய வேண்டியவை :

1. முதலில் என்னைக் குளிர வைக்கும் முறை சரியாக இருக்கிறதா? என்பதைக் கவனித்து, தேவைப்பட்டால் சுத்தத் தண்ணீரை நிரப்பவும்.

2. உயவு எண்ணெய் (லூப்ரிகேட்டிங் ஆயில்) இட வேண்டிய இடங்களில் இடவும்.

3. டீசல் **எண்ணெய்,** உயவு **எண்ணெய்** மட்டங்களைச் சரி பார்த்துத் தேவையான அளவு நிரப்பவும்.

4. 'டீ கம்பரஷன் லிவரைத்' தூக்கி விட்டு, 'ஸ்டார்ட்டிங் ஹேண்டில்' உதவியால் என்ஜின் சக்கரத்தை 12 முதல் 24 முறை சுற்றவும். இவ்வாறு செய்வதால் எல்லா பாகங்களுக்கும் உயவு **எண்ணெய்** பெற உதவும். இப்பொழுது நான் இயங்கத் தயார் நிலை அடைந்து விடுகிறேன். இப்போது 'டீ கம்ப்ரஷன் லீவரைத்' தூக்கி 'ஸ்டார்ட்டிங் ஹேண்டில்' உதவியால் சுற்றி, நல்ல வேகமடைந்தவுடன், 'டீ கம்ப்ரஷன் லீவரை' இறக்கி விட்டால், நான் இயங்க ஆரம்பித்து விடுவேன்.

முதல் முறை இயங்காவிட்டால் இதே போல் இரண்டு அல்லது மூன்று முறை செய்தால், இயங்க ஆரம்பித்து விடுவேன். நான் இயங்க ஆரம்பித்ததும், முதலில் கறுப்புப் புகையினையும், பின்னர் வண்ணமில்லாத அல்லது லேசான ஊதா நிறப் புகையினையும் வெளித் தள்ளுவேன்.

சுத்தமான, கலப்படமற்ற அதிவேக டீசல் **எண்ணெய்**யை (ஹைஸ்பீடு டீசல் ஆயில்) உபயோகப்படுத்திஞல் நான் நீண்ட காலம் பழுதின்றி உழைப்பேன்.

5. **எண்ணெய்** டேங்குகளை மாதம் ஒரு முறையாவது முழுமையாகச் சுத்தம் செய்ய வேண்டும். தினசரி என் இயக்கம் முடிந்ததும், டேங்கில் **எண்ணெய்** ஊற்றி நிரப்பி விடல் அவசியம். அவ்வாறு செய்யாவிட்டால், இரவு நேரங்களில் குளிரினுல் ஏற்படும் நீர்த்துளிகள் டேங்கிற்குள் உறைய நேரிடும்.

6. என்னுடைய சீரான இயக்கத்திற்கு இன்னொரு முக்கியமான பாகத்தையும் நீங்கள் நன்கு கவனிக்க வேண்டும். அதுதான் 'ப்யூயல் ஃபில்டர்கள்'. எண்ணெய்யில் சேரும் அழுக்குகளை உறிஞ்சி எண்ணெய்யைச் சுத்தம் செய்து அனுப்புவதால், நாளடைவில் அதில் அழுக்குச் சேர்ந்து உறிஞ்சும் தன்மையை அது இழந்து விடுகிறது. ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அதனை மாற்றுதல் அவசியம். அதாவது 500 மணி நேரம் நான் வேலை செய்த பிறகோ அல்லது 2 மாதங்களுக்கு ஒரு முறையோ அதனை மாற்றுதல் அவசியம்.

7. ஆயில் என்ஜினுக்கான உயவு **எண்ணெய்** (என்ஜின் ஆயில்) தயாரிப்பாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட தரத்தினை பயன்படுத்திஞல், நான் நீடித்து உழைப்பேன். உயவு எண்ணெய் மாற்றும்போது உயவு எண்ணெய் வடிகட்டியையும் (என்ஜின் ஆயில் ஃபில்டர்) சுத்தம் செய்தல் அவசியம்.

என்ஜின் ஆயில் மாற்றுமுன் என்ஜினின் உயவு எண்ணெய் வழிகளை சுத்தம் செய்வது அவசியம். ஆகவே, 'பிளஷிங் ஆயிலை', 'டிப் ஸ்டிக்கின்' மேல் கோடு அளவிற்கு ஊற்றி என்ஜினை 10 நிமிடம் ஓடவிட்டு நிறுத்திஞல் எல்லா வழிகளும் சுத்தமாகி விடும். பிறகு இந்த எண்ணெயை வெளியில் எடுத்து விட்டு புதிய உயவு எண்ணெயை 'டிப்ஸ்டிக் மேல்' கோடு அளவிற்கு ஊற்றி நிரப்ப வேண்டும்.

8. **ஏர் க்ளீனரை வாரம் ஒரு முறையாவது சுத்தம் செய்வது அவசியம். 'பேப்பர் எலிமெண்டை' 800 வேலை மணிகளுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.**



## பழுதுகளும் சரி பார்த்தலும் :

9. பழுதான பிறகு ஒன்றைச் சரி செய்வதை விட, பழுது வராமல் தவிர்க்க முயற்சிப்பது பயனுடையதாகும். ஆகவே, கீழ்க்கண்டவை பற்றி அறிந்து கொண்டால் என்ஜின்களுக்கு வரும் பெரும் பழுதுகளைத் தவிர்க்க ஏதுவாகும் :

| பழுதுகள் (1) | காரணங்கள் (2) | சரி செய்தல் (3) |
|---|---|---|
| 1. இயங்க ஆரம்பிப்பதில்கஷ்டம். | (அ) டாங்கில் டீசல் இல்லாமை | (அ) டாங்கில் டீசல் நிரப்பவும். |
| | (ஆ) எண்ணெய் வழிகளில் காற்றுக் கசிவு | (ஆ) காற்றுக் கசிவினை நீக்குதல். |
| | (இ) எண்ணெய்க் குழாய்கள் கழன்று நிற்பது (லூஸாக இருப்பது) அல்லது முறிந்த எண்ணெய்க் குழாய்கள் | (இ) எண்ணெய்க் குழாய்களை முடுக்கவும். முறிந்ததை புதுப்பிக்கவும். |
| | (ஈ) நாசில் சரியான அழுத்தத்தில் எண்ணெய் தெளிக்காதிருக்கலாம். | (ஈ) நாசில் சரியான அழுத்தத்தில் (சப்தத்துடன்) தெளிக்க சரி செய்யவும். |
| 2. என்ஜின் இயங்க ஆரம்பித்து, விட்டு விட்டு எரி பொருளை எரிப்பது அல்லது விரைவில் நின்று விடுவது | (அ) என்ஜினுக்கு எரியெண்ணெய் சரியாகச் செல்லாமை | (அ) எல்லா எண்ணெய் வழிகளையும் நன்கு முடுக்கி விட்டு, காற்றுக் கசிவினை நீக்கி விடவும். |
| | (ஆ) எரியெண்ணெயில் நீர் கலந்திருத்தல் | (ஆ) எண்ணெய் டாங்கைச் சுத்தம் செய்து புதிய எண்ணெய் ஊற்றவும். |
| | (இ) எண்ணெய் வடிகட்டி கனத்து, மாற்ற வேண்டி இருத்தல். | (இ) ஃபில்டர் எலிமெண்டை மாற்றவும். |
| | (ஈ) நாசில் சரியாக வேலை செய்யாமை. | (ஈ) நாசில்களை சரிபார்த்தல். |
| 3. அழுக்கடைந்த புகையை வெளித்தள்ளுவதோடு, சக்தி குறைவாயிருத்தல். | (அ) என்ஜினுக்கு எண்ணெய் சரிவரச்செல்லாமை. | (அ) 2-ல் கண்டவாறு செய்யவும் |
| | (ஆ) பொருந்தாத எண்ணெய். | (ஆ) எண்ணெயை வடித்து புதிய தகுதியான எண்ணெயைநிரப்பவும். |
| | (இ) ஏர் க்ளீனர் அழுக்கடைந்து இருத்தல். | (இ) ஏர் க்ளீனர் எலிமெண்டைச் சுத்தம் செய்தல் அல்லது மாற்றுதல். |
| | (ஈ) எக்ஸாஸ்ட் சைலன்ஸரில் அழுக்கடைந்திருத்தல். | (ஈ) எக்ஸாஸ்ட் சைலன்ஸரைச் சுத்தம் செய்யவும். |
| 4. என்ஜின் அதிக சூடேறுதல் | (அ) அதிக பளு கொடுப்பது. | (அ) சரியான பளு மட்டும் கொடுத்து அதிகப் பளுவினைத் தவிர்த்தல். |
| | (ஆ) குளிர்விக்கும் தண்ணீர் இல்லாதிருத்தல். | (ஆ) தண்ணீரைப் புதுப்பித்து, தொடர்ந்து உட்செல்லவகை செய்யவும். |
| | (இ) உயவு எண்ணெய் இல்லாது இருத்தல் | (இ) என்ஜின் அடிப்பாகத்தில் உள்ள உயவு எண்ணெயில் அளவைச் சரிபார்த்துத் தேவைப்படின் நிரப்பவும் |




10. ஆயில் என்ஜினின் முறையான பராமரிப்புப் பணிகள் :

(1) நாள்தோறும்

அ. என்ஜின் ஆயில் மட்டத்தைச் சரி பார்த்துத் தேவைப்படின் குறிப்பிட்ட அளவிற்கு நிரப்பவும்.

ஆ. எரியெண்ணெய் டாங்கை நிரப்பவும். வேலை முடிந்ததும் நிரப்பி வைத்தல் வேண்டும்.

இ. வேலை முடிந்ததும் என்ஜினின் புறப் பகுதியைச் சுத்தம் செய்து வைக்கவும்.

(2) 50 வேலை மணிகளுக்குப் பிறகு (வாரம் ஒரு முறை) :

ஏர் க்ளீனரைக் கழற்றி எல்லாப் பகுதிகளையும் சுத்தம் செய்து பூட்டவும்.

(3) 100 வேலை மணிகளுக்குப் பிறகு (அரை மாதத்திற்கு ஒரு முறை) :

அ. எல்லா போல்ட், நட்டுகளையும் முடுக்கி டைட் செய்யவும்.

ஆ. எரி எண்ணெய் டாங்கிலுள்ள காற்றுத் துவாரம் சுத்தமாயுள்ளதா எனக் கவனிக்கவும்.

(4) 250 வேலை மணிகளுக்குப் பிறகு :

அ. என்ஜின் ஆயிலை வடித்து, பிளஷிங் எண்ணெயால் சுத்தம் செய்து புதிய எண்ணெயினை அளவிற்கு ஊற்றவும்.

ஆ. எரி எண்ணெய் டாங்கினை முழுவதும் சுத்தம் செய்யவும்.

இ. எரி எண்ணெய் வடிகட்டி கிண்ணத்தைச் சுத்தம் செய்யவும்.

ஈ. எக்ஸாஸ்ட் சைலன்ஸரைக் கழற்றி, தட்டி, அதனுள் உள்ள புகை அழுக்குகளை அகற்றவும்.

(5) 500 வேலை மணிகளுக்குப் பிறகு :

அ. ஃப்யூயல் ஃபில்டரிலுள்ள பேப்பர் எலிமெண்டை மாற்றுதல் வேண்டும்.

ஆ. என்ஜின் ஆயில் ஃபில்டரை மாற்றவும்.

(6) 800 வேலை மணிகளுக்குப் பிறகு:

ஏர் க்ளீனர் பேப்பர் எலிமெண்டை மாற்றவும்.

(7) 1,000 வேலை மணிகளுக்குப் பிறகு:

என்ஜின் பூராவையும் பிரித்துச் சரி பார்க்க வேண்டும்.

11. என்ஜினை நீண்ட நாட்களுக்கு வேலையின்றி வைத்திருக்க நேரின் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றவும் :

1. என்ஜினை இயக்கி, மித வெப்பம் அடைந்த பிறகு நிறுத்தவும்.

2. எரி எண்ணெயை டாங்கு, ஃபில்டர் எண்ணெய்க் குழாய் ஆகியவைகளிலிருந்து எண்ணெயை வடித்துத் தயாரிப்பாளர் பரிந்துரைத்த பாதுகாப்புஎண்ணெய்யை நிரப்பவும்.

3. என்ஜின் ஆயிலை வடிகட்டி விடவும். ஃபில்டரைச் சுத்தம் செய்யவும். தயாரிப்பாளர் பரிந்துரைப்படி பாதுகாப்புஎண்ணெயை நிரப்பவும்.

4. சிலிண்டர் ஃபிளாஸ்க்கிலுள்ள நீர்க் குழாய் மூடியைத் திறந்து, தண்ணீர் முழுவதையும்வெளியேற்றிவிடவும்.

5. எக்ஸாஸ்ட் சைலன்ஸரைச் சுத்தம் செய்து, பாதுகாப்பு எண்ணெயை உள்ளே தெளிக்கவும்.

6. நாசிலைக் கழற்றி 1/4 லிட்டர் பாதுகாப்பு எண்ணெயை சிலிண்டருக்குள் தெளித்து நாசிலைப் பொறுத்தவும்.

7. என்ஜினின் புறப்பகுதியைச் சுத்தம் செய்து, மழை, தூசியின்றி தடுக்கத் தகுந்த உறையிட்டு வைக்கவும்.

''ஆக, மேலே சொன்ன முறைப்படி என்னைப் பராமரித்து வந்தால், என்னைப் பராமரிப்பதில் ஆகும் செலவு மிகவும் குறையும். நானும் முழு நலத்தோடு உங்களுக்கு உழைப்பேன். இந்தக் கட்டுரையைப் படிப்பவர்கள் தயவுசெய்து அடுத்தவர்களுக்கும் என் கதையைக் கூறுங்கள். மின்சார மோட்டரைவிட, பராமரிப்புச் செலவு எனக்கு சற்று அதிகமானாலும், மின் வெட்டு வருகின்ற காலங்களிலும், வறட்சிக் காலங்களிலும் நான் தான் விவசாயிகளுக்கு உற்ற துணையாயிருந்து பயிர் வளம் பெருக்குவேன்.

''நாளுக்கு நாள் எண்ணிக்கையில் நான் வளர்ந்து வருவதனால் என்னை நன்றாகப் பராமரிப்பதிலும் கொஞ்சம் கவனம் செலுத்துங்களேன். இனியாவது எனக்கு ஒரு நல்ல காலம் பிறக்கும் என்று நம்பி வாழ்கிறேன்.''

''வணக்கம்.''

—அ. சொக்கலிங்கம்
உதவி வேளாண்மைப் பொறியாளர்,
வேளாண்மை இயக்கம்,
சென்னை-5.

## பயிர் விளைச்சல் போட்டியில் பரிசு பெற்றவர்கள்



தமிழ் நாட்டில் 1974—75ஆம் ஆண்டில் சோளம், கேழ்வரகு ஆகிய பயிர்களில் நடத்தப்பெற்ற விளைச்சல் போட்டியில் பின்கண்டவர்கள் பரிசு பெற்றுள்ளனர் :

**சோளத்தில் முதற் பரிசு பெற்றவர்**

திரு. என்.வி. கிருஷ்ணன்,
த/பெ. வெங்கம கவுண்டர்,
நாயக்கன் பாளையம் அஞ்சல்,
கோயம்புத்தூர்—20.

இவர் ஏக்கருக்கு 3,175.809 கிலோ கிராம் சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு மாநில முதற் பரிசாக ரூபாய் 2,000 வழங்கப்படும்.

**சோளத்தில் 2-வது பரிசு பெற்றவர்**

திரு. ஆர். கருப்பக் கவுண்டர்,
த/பெ. ராமசாமி கவுண்டர்,
தொண்டாமுத்தூர் (அஞ்சல்),
கோயம்புத்தூர் மாவட்டம்.

இவர் ஏக்கருக்கு 2,994.595 கிலோ கிராம் சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு இரண்டாவது பரிசாக ரூபாய் 1,000 வழங்கப்படும்.

**சோளத்தில் 3-வது பரிசு பெற்றவர்**

திரு. வி. மருதாச்சலம்,
த/பெ. வெங்கிடாச்சலதேவர்,
சின்னய்யா தேவர் தோட்டம்,
மில் ரோடு,
சௌரி பாளையம்,
கோயம்புத்தூர்.

ஏக்கருக்கு 2,751.168 கிலோ சோளம் விளைவித்துள்ள இவர் 500 ரூபாய் பரிசு பெறுவார்.

**கேழ்வரகில் முதல் பரிசு பெற்றவர்**

திரு. கே. ராமசந்திர நாயுடு,
த/பெ. குப்புசாமி நாயுடு,
'கிரிஸ்டல்', திருச்சி ரோடு,
சிங்காநல்லூர் அஞ்சல்,
கோயம்புத்தூர்.

ஏக்கருக்கு 2,555.484 கிலோ கிராம் கேழ்வரகு விளைவித்துள்ள இவருக்கு மாநில முதற் பரிசாக ரூபாய் 2,000 வழங்கப்படும்.

மேற்கூறிய 4 உழவர் பெருமக்களுக்கும் ''**தமிழரசு**'' சார்பில் பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# படமும் செய்தியும்



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 24-4-'76 அன்று மதுரையில் பூதான இயக்கக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.



மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பிலியபட்டியில், 24-4-'76-ல் ஆளுநர் அவர்கள் பூதான நிலப்பட்டாக்களை ஏழை விவசாயிகளுக்கு வழங்கினார்.

பூதான இயக்கத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு ஆளுநர் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.





வறட்சி நிவாரணப் பணியின்கீழ் கிணறு வெட்டும் பணியைத் தமிழக ஆளுநர் அவர்கள் 24-4-'76 அன்று





வீரபாண்டிய கட்டபொம்மன் பரம்பரையினருக்காக, பாஞ்சாலங்குறிச்சியில் ரூபாய் 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 202 வீடுகளை ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 21-4-'76-ல் திறந்து வைத்தார்.



இந்தியப் புவியியல் ஆய்வுத்துறையின் கருத்தரங்கை சென்னை எழும்பூரில் உள்ள அரசினர் அரும்பொருட்காட்சியகத்தில் 28-4-'76-ல் ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார். அக்கருத்தரங்கையொட்டி தென்னார்க்காடு மாவட்டம், திருவக்கரை என்ற ஊருக்கு அருகில் உள்ள தேசிய பூங்காவிலிருந்து கொண்டு வரப் பட்டிருந்த 2 கோடி ஆண்டு வயதுடைய கல்மரத்தை (fossil tree) ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.



புள்ளி விவரத்துறையில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றிய, மறைந்த திரு. வி.டி என். சாரங்கபாணி என்பவரின் துணைவியார் திருமதி. சந்திராசாரங்கபாணி அவர்களுக்கு அரசு ஊழியர் குடும்ப நன்மைத் திட்டத்தின் கீழ் 10,000 ரூபாயை ஆளுநர் அவர்கள் 28-4-'76-ல் வழங்கினார்



தமிழகத்திற்கு 1-5-'76 அன்று வருகை தந்த மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்களை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஆளுநர் அவர்கள் வரவேற்றார்.

ஜவகர்லால் நேரு இளைஞர் மன்றத்தினரால், மைலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் "நமது இந்தியா" என்ற பொருட்காட்சியை மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா அவர்கள் 6-5-'76-ல் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.



ஆளுநர் அவர்கள் 3-5-'76, 4-5-'76 ஆகிய 2 நாட்களில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார். எலச்சிப்பாளையம் என்ற ஊரில் ஒரு நரிக்குறவப் பெண் கொடுத்த மனுவையும் பெற்றுக் கொண்டார். அப்போது, தங்கள் குறைகளைத் தீர்த்து வைக்கும்படிக் கூறிப் பொதுமக்கள் கொடுத்த மனுக்களை ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.





சேலம் மாவட்டம் செல்லம்பட்டி என்ற கிராமத்தில் 3-5-'76-ல் முதியோர் ஓய்வு ஊதியத்தொகையை ஆளுநர் அவர்கள் வழங்கினார்.





இந்திய வேளாண்மைக் கல்வி நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏழாவது அனைத்துலக வேளாண்மைக் கடனுதவி ஆய்வுத் திட்டத்தை ஆளுநர் அவர்கள் 28-4-'76-ல் துவக்கி வைத்தார்.



தென்னிந்திய சினிமா வர்த்தக சபையினரால் 6-5-'76-ல் நடத்தப்பெற்ற வரவேற்பு விழாவில் மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா அவர்கள் உரையாற்றினார்.





"தேசிய ஒருமைப்பாடு மற்றும் கல்வி கற்பிப்பதில் மேம்பாடு செய்வது" என்பது பற்றிய, சென்னை தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி நிலையத்தில், ஆசிரியர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மறுபயிற்சியை மத்திய துணைக் கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. டி. பி. யாதவ் அவர்கள் 4-5-'76-ல் துவக்கி வைத்தார்.

# மணி போல் விளங்கிட ...



மாணவர் அரங்கம்



**மா**ணவ, மாணவியர் மணிபோல் விளங்கிட அவர்கள் பல துறை நூல்களையும் படித்தல் வேண்டும். இதற்கு உறுதுணையாக இருப்பது நூலகம் ஆகும். ஓய்வு நேரங்களில் வீணே பொழுதைக் கழிக்காமல், பயனுள்ள வகையில் பொழுதை இனிதே கழித்திட மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

'படிப்பதற்கு நேரமில்லையே!' என்று பத்திரிகை படிக்கும் பழக்கத்தை விட்டுவிடக் கூடாது. நாள்தோறும் இதற்கு ஒரு நேரத்தை ஒதுக்கியே ஆக வேண்டும்.

பள்ளிப் படிப்போடு பொது அறிவுத் தகவல்களையும் தெரிந்து கொண்டால்தான், நாம் முழு மனிதனாக விளங்கலாம்.

உங்கள் பொது அறிவைச் சோதிக்க சில வினாக்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குச் சரியான விடை தெரிகிறதா பாருங்கள்!






1. உலக வானிலை தினம் எந்த ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது?
2. 'சர்வ தேச நீதி மன்றம்' எங்கே இருக்கிறது?
3. 'இன்டர்போல்' என்றால் என்ன?
4. இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் எது?
5. இந்திய நாணயத்தின் பெயர் ரூபாய் என்று நமக்குத் தெரியும். அதைப் போல கீழ்க்காணும் நாடுகளின் நாணயத்தின் பெயர் என்ன?
   அ. பர்மா.
   ஆ. டென்மார்க்.
   இ. ஜப்பான்,
   ஈ. துருக்கி.
6. நம் நாட்டுக் கொடியில் மூவண்ணம் உள்ளது. ஆனால் வண்ணத்தோடு சிலுவை உள்ள கொடிகள் எந்தெந்த நாட்டில் உள்ளன?
7. இந்திய தேசிய காங்கிரசின் முதல் தலைவர் யார்?
8. முதன் முதலில் அணுகுண்டு எங்கே, எப்போது வீசப்பட்டது?
9. சென்னை உயர்நீதி மன்றத்தின் வயது என்ன?
10. சென்னையிலுள்ள இராஜாஜி ஹால் முதலில் எதற்காக ஏற்படுத்தப்பட்டது?
11. தமிழ் நாட்டில் எத்தனைப் பத்திரிகைகள் வெளிவருகின்றன?
12. சென்னையில் பெண்களே நடத்தும் அஞ்சல் நிலையம் எங்கே இருக்கிறது?
13. சென்னையில் புதிய கலங்கரை விளக்கம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது, அது எந்த இடத்தில்?
14. "உனக்காக நீ அல்ல; மக்களுக்காக நீ ஆவாய்"—இந்த வாசகம் எங்கே இருக்கிறது?
15. சென்னையில் உறுப்பினர் கட்டணம் ஏதுமில்லாமல், இலவசமாக நூல்களை வழங்கும் நூலகம் எது?

விடைகள் 48-ஆம் பக்கம் பார்க்க!





# இராமநாதபுரமாவட்டத்தில் மேம்பாட்டுப் பணிகள்

**வா**ன்முகில் தன் கொடைக் கரத்தை இவ்வாண்டும் குறைத்துக் கொண்டதால் இராமநாதபுர மாவட்டம் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது. மாவட்டத்தின் பல பகுதிகளில் கண்டுள்ள வறட்சி நிலையைச் சமாளிக்கும் வகையில் குடிநீர்த் திட்டங்கள், சமுதாயக் கிணறுகள், கிராமப்புறச் சாலைகள் மற்றும் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்கள் பலவற்றை அரசு விரைந்து செயல்படுத்தி வருகிறது. மார்ச் மாதத்துடன் முடிந்த நிதியாண்டில் 12 இலட்சம் ரூபாய் செலவில் 114 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் 33 இலட்சம் ரூபாய் செலவில் 410 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது இம்மாவட்ட மக்களுக்கு மனநிறைவைத் தருகிறது. மேலும் இம்மாவட்டத்தின் ஆறு நகராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களுக்காக 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மானியமாகவும் மற்றும் 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் கடனாகவும் அரசு வழங்கியுள்ளது.

ஆறு புதிய சமுதாயக் கிணறுகள் மற்றும் 65 சமுதாயக் கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு 3 லட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. கிராமப்புறச் சாலை அமைப்புத் திட்டத்தின்கீழ் 93 வேலைகளுக்காகப் பத்து லட்ச ரூபாய் அனுமதியாகி வேலைகள் நடந்து வருகின்றன. வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடியே 77 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு 66,000 கிராமப்புற மக்கள் பயனடைந்துள்ளனர்.

கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பயிர்க்கடன் திட்டத்தின் படி, சென்ற ஆண்டில் 37,269 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன், 9 கோடியே 27 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய்க்கான கடன் பட்டுவாடா விண்ணப்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கறவை மாடுகள் வாங்கும் திட்டத்தின்கீழ் இரண்டு லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் புதிதாக ஐந்து தீப்பெட்டித் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் இயந்திரச் செக்குகள் வைப்பதற்கும் மற்றும் பனைநார் துடைப்பான்கள் செய்வதற்கான கடன்வசதிகளைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் செயல்படுத்துகின்றன. பதனீர் இறக்கும் தொழிலாளர்களுக்கு 175 ரூபாய் வீதம் அளிக்கும் திட்டம், இம்மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

ராபி பருவக்காலத்தில் 2,769 ஏக்கர் நிலத்தில் நெல், சோளம் முதலிய பயிர்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. வரும் காரிப் பருவத்தில் மானாவரி புஞ்செய் நிலங்களில் தீவிர சாகுபடித் திட்டங்கின்கீழ் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் உற்பத்தி பெருக்கும் திட்டமுள்ளது.

101 உயர்நிலைப் பள்ளிகளில் துவக்கப்பட்ட, பள்ளி மாணவர்கள் வங்கித் திட்டத்தில் 13,507 மாணவர்கள் 79 ஆயிரத்து 777 ரூபாய் சேமித்துள்ளனர். சிறுசேமிப்பு வசூலிலும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழும் மாவட்டத்திலேயே சிறப்பாகப் பணியாற்றிய பெருமை சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சாருகிறது.

1975-ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்பில் சிறந்து விளங்கிய அருப்புக்கோட்டை வட்டம் கோவிலாங்குளம் கிராமம், முதல் பரிசான ஆயிரம் ரூபாய்க்குத் தகுதி பெற்றது. முதுகுளத்தூர் வட்டம் கரையான் புளிங்குடி கிராமம் இரண்டாவது பரிசைப் பெற்றது. மேலும் இம்மாவட்டத்தில் பதினொரு அரிசனக் குடியிருப்புகள் 75-ஆம் ஆண்டில் நன்கு பராமரிக்கப்பட்ட குடியிருப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் 500 ரூபாய் பெறுமான வானொலிப் பெட்டி வழங்கப்பட்டது.

பிரதமரின் இருபது அம்சத் திட்டம், மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றிச் சென்ற மாத இறுதியில் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. தவே, இம்மாவட்ட ஆட்சியாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்தார். இருபது அம்சத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 70 ஆயிரம் வீடற்ற குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு, விலை விவரம் மற்றும் கணக்குகள் பராமரித்தல் சட்ட விதிகளின் கீழ் 203 வியாபாரிகள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

அரசு கடன் நிவாரண அவசரத் திட்டத்தின்கீழ், வரம்புக்கு மீறி அதிக வட்டி வசூலித்த எட்டு நபர்கள் மீது நடவடிக்கை தொடரப்பட்டதன் மூலம் வட்டிக்குக் கடன் கொடுப்போரிடையே ஒழுங்குக் கட்டுப்பாடு வளர்க்கப்பட்டுள்ளது.

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக உள்ள 360 ஏக்கர் நிலத்தை, வரும் ஜூன் மாதத்துக்குள் ஒப்படை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய களத்துறைப் பிரிவின் கீழ் 45-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு, சிவகங்கை, சிவகாசி நகரங்களில் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் இருபது அம்சத் திட்டத்தை, திரளான மக்களிடையே விளக்குவதாக அமைந்திருந்தன.



# நாடு கொண்டாடும் நல்ல விழா பூதான இயக்க வெள்ளி விழா!

நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு நிலம் நிறையப் பெற்ற நிலக்கிழார் மனமுவந்து தம் நிலத்தினை, தானாக ஈந்து மகிழ்வதே பூதான இயக்கம்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றார் தாயுமானவர்.

'அறத்தால் வருவதே இன்பம்' என்கிறது தமிழ் மறை.

இவ்வுண்மைக்கு உயரிய எடுத்துக் காட்டாக விளங்குவது தான் பூதான இயக்கம்.

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமதர்மச் சமுதாய நெறி முறையை அன்பு வழியில் வலியுறுத்திடும் இயக்கமாக விளங்குகிறது பூதான இயக்கம்.

அண்ணல் காந்தியடிகளின் முதன்மையான சீடர் என்றும், இன்று நம்மிடையே வாழ்வோரின் காந்தியத்தின் முன்னோடியாக விளங்குபவர் என்றும் போற்றப்படும் ஆச்சார்யா வினோபா பாவே அவர்கள் பூதாண இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

காஞ்சிபுரத்தில் 1956-ஆம் ஆண்டு மே திங்களில் அனைத்து இந்திய பூதானம் சர்வோதய ஊழியர்களின் மாநாடு வினோபா பாவே முன்னிலையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களும் பங்கேற்றது நினைவு கூரத்தகது.

பூதான இயக்கம் உழுதுண்டு வாழ்வோரிடையே ஓர் எழுச்சியை உருவாக்கியது. இராமநாதபுரம் மாவட்டத்தில், பூதான இயக்கத்திற்கு 4,575 ஏக்கர் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இவ்வியக்கத்திற்கு நிலம் வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டில் பூதான இயக்கத்திற்கு வழங்கப்படும் நிலங்களை வரைமுறைப் படுத்துவதற்காக 1958-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு 'பூதானச் சட்டம்' ஒன்றை இயற்றியது. இதனை ஒட்டி 'பூதான வாரியம்' உருவாக்கப்பட்டது. நிலம் பெறுவதிலும் வழங்குவதிலும் பின்பற்ற வேண்டிய வழி முறைகள் நிர்ணயிக்கப்பட்டன. இவ்வாரியத்தின் தலைமையகம் மதுரையில் செயல்படத் தொடங்கியது.

பூதான இயக்கத்தின் மூலமாக கிடைத்த நிலங்களை மட்டும் பகிர்ந்து விவசாயிகளுக்குக் கொடுத்தால் மட்டும் போதுமா? அவர்கள் வேளாண்மை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா? எனவே, உழவர்களுக்கு நிதி உதவிட தமிழ் நாட்டில் 32 கிராம தான-பூதான இயக்கக் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளில் 3,497 உறுப்பினர்கள் உண்டு. ஏறத்தாழ 2,416.15 ஏக்கர் நிலம் இச் சங்கங்களின் பாதுகாப்பில் உள்ளது. இந்நிலத்

விழாக்கூட்டத்தில் ஒரு பகுதி






பூதான இயக்க வெள்ளிவிழாப் பொருட்காட்சியில்

கடந்த 29-3-1976 அன்று சாணார்பட்டியில் நடைபெற்ற பூதான வெள்ளி விழாவில் ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களும், ஊரக உள்ளாட்சித் துறைச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்ராமன் அவர்களும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பூதான இயக்க வெள்ளி விழா மதுரையில் 24-4-1976 அன்று ஆளுநர் தலைமையில் கொண்டாடப்பட்டது. அன்று மாலை ஆளுநர் அவர்கள் சாணார்பட்டி வட்டாரத்தில் பாத யாத்திரையை மேற்கொண்டார்கள்.

**சென்னையில் வெள்ளி விழா :**

சென்னை காந்தி மண்டபத்தில் வழிபாட்டுக் கூட்டமும் பூதான இயக்க வெள்ளி விழாக் கொண்டாட்டமும் 30-4-76 வெள்ளிக்கிழமையன்று கொண்டாடப்பட்டது. விழாவை ஒட்டி கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளான யுனைடெட் கமர்சியல் பாங்க், சென்ட்ரல் பாங்க், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், இந்தியன் பாங்க், ஸ்டேட் பாங்க் போன்ற வங்கிகளும், தமிழ்நாடு வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கிராம—கைத்தொழில் வாரியம், கிராமோத்ய பவன் ஆகியவைகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்றன. இவை கிராம மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவி வருவதைத் தெளிவாக விளக்கிக் காட்டின.

இந்தக் கண்காட்சி வெற்றிகரமாக அமைய ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. டி. வி. வாசுதேவன் அவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்.

வெள்ளி விழாக் கொண்டாட்டம் திரு. கே. வீரமணி குழுவினரின் துதிப் பாடல்களுடன் தொடங்கியது.

**ஆளுநர் உரை**

விழாவுக்குத் தலைமையேற்ற ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''காந்தியடிகள் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்களின் போது சில ஆண்டுகளாக கவனித்துக் கொண்டு வருகிறேன், தமிழ் நாடு காந்தியக் கொள்கைகளின் குரலாக விளங்குவதை, எனவே, இங்கு காந்தியக் கருத்துக்களை செயல்படுத்துவதில் ஆர்வம் மிகுதியாகக் காணப்படுகின்றது.

பூதானம், கட்டுப்பாட்டை உருவாக்குவதுடன், ஜனநாயக சோசலிசத்தை உருவாக்கும் கருவியாக விளங்குகிறது. நமது

தில் 595 ஏக்கர் பரப்புகளில் நன்செய் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. 341 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இது வரை இச்சங்கம் ரூ. 7,12,186 வழங்கியுள்ளது. இத்தொகையில் ரூ. 2,18,178 மானியம் வழங்கப்பட்டு உணவு உற்பத்தி பெருக்கப்பட்டது.

**சர்வ சேவா சங்கங்கள் :**

20 ஏக்கர் பூதான நிலங்கள் ஒரே இடத்தில் கிடைத்தால் அவைகளை பராமரித்திட அமைக்கப்பட்ட அமைப்பே சர்வ சேவா சங்கங்கள். தமிழ் நாட்டில் இப்பொழுது ஒன்பது சர்வ சேவா சங்கங்கள் உள்ளன. பூதான நிலங்களிலிருந்து அதிக மகசூலைப் பெறுவதற்கு வேண்டிய பணிகளை ஆற்றும் சர்வ சேவா சங்கங்களை வெளி நாட்டினரும் பாராட்டியுள்ளனர். அறநோக்கோடு செயல்படும் பல வெளிநாட்டுச் சங்கங்கள் இவைகளுக்கு நிதி உதவி வழங்கியுள்ளன.

**20 அம்சத் திட்டமும் பூதான இயக்கமும் :**

இன்று நம் நாட்டில் புதிய பொருளாதார வளர்ச்சிக்கான பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் இருபது அம்சத் திட்டத்தின் இரண்டாவது திட்டம், ''நில உச்ச வரம்புச் சட்டம் முனைப்பாக அமல்படுத்தப்படும். உபரி நிலங்களை ஏழைகளுக்கு விரைவாக வழங்கப்படும். நில உடைமை பற்றிய சான்றுகள் தயாரிக்கப்படும்'' என்பதாகும்.

இக்கருத்து பூதான இயக்கத்தின் அடிப்படைக் கருத்துடன் இசைந்ததாக அமைந்துள்ளது.

பாடுபடும் பாட்டாளி பயனை அனுபவிக்க வேண்டும் என்பதை அற வழியில் வலியுறுத்தி பாடுபட்டு வரும் பூதான இயக்கம் சமதர்மச் சமுதாய அமைப்பை உருவாக்கிட அயராது பாடுபடும் அரசின் இலட்சிய வெற்றிக்கும் ஒரு பாதையாக விளங்குகிறது.

காந்தியத்தில் நம்பிக்கை உள்ள அனைவரும் இதனை உணர்ந்துள்ளனர்.

எனவே, புதிய பொருளாதார நிலையை உருவாக்கும் 20 அம்சத் திட்டத்தை சிறப்புடன் நிறைவேற்றி வரும் இந்நாளில் பூதான இயக்க வெள்ளி விழாவை எல்லாரும் மகிழ்ந்து கொண்டாடுவதில் வியப்பேதுமில்லை!

எனவே, தமிழ் நாட்டில் பூதான இயக்க வெள்ளி விழா மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடப்பட்டது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சாணார்பட்டி வட்டாரத்திலுள்ள ஏறத்தாழ எல்லா கிராமங்களும் கிராமதான கிராமங்களாகும். கிராம தானம் என்பது கிராமத்திலுள்ள பெரும்பான்மை நிலம், பூ தானம் தரப்பட்ட நிலமாக உள்ளதாகும். இப்படி முழுவதும் கிராமதானமாக அமைந்துவிட்ட சாணார்பட்டியில் தமிழ் நாடு பூதான இயக்கம் வெள்ளி விழா கொண்டாடியது பொருத்தமல்லவா?

பிரதமர் அறிவித்துள்ள இருபது அம்சத் திட்டமும், பூதான இயக்கத்தின் அடிப்படைக் கருத்தும் ஒத்ததாக அமைந்துள்ளது. சாமானிய மனிதனின் வாழ்வில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவவேண்டும் என்றார் காந்தியடிகள். அதனையே வினோபாஜி பூதான இயக்கத்தின் மூலம் எடுத்துரைத்து வருகிறார். பூதானம் சமுதாய ஜனநாயகத்தை விளக்கி வருகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளசர்வோதயமும் ஜனநாயக சோசலிசமும் உதவுகின்றன.

சர்வோதயம் தனக்குத்தானே கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்ளச் செய்கிறது.

இருபது அம்சத் திட்டத்தின் மூலமும், அவசரநிலையின் மூலமும் பொருளாதாரத்திலும் அரசியலிலும் கட்டுப்பாட்டை உருவாக்கி வருகிறோம். காந்தியடிகள் எப்பொழுதுமே கடமைகளை நிறைவேற்றுவதை வலியுறுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் இப்பொழுது ஊரகச் சீரமைப்புத் திட்டங்களைப் பற்றி பேசி வருகின்றோம். திட்டமிடுதல் கிராம நிலையிலிருந்து செயல்படுத்தப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சியைக் காண முடியும்.

பிரதமரின் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர் அதனைச்சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படுத்தி வறுமையை விரட்டிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். ஊரகச் சீரமைப்புக்கு முன்னோடியாக சோமங்கலத்தில் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

புறக்கணிக்கப்பட்டவர்களாய் இருந்த கிராம மக்கள் வளர்ச்சி அடைந்திட, வேலை வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள வழி வகுத்துள்ளோம். கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் மாதம் ரூ. 400 வருமானம் பெற வேண்டும். ஊரகச் சீரமைப்பு இதனை உருவாக்கிட வேண்டும். இப்பணிகளுக்கு 20 அம்சத் திட்டம் நமக்கு உறுதுணையாக அமைந்து உள்ளது.

வினோபாஜி அவர்கள் கிராம மக்களின் நல்வாழ்வை எண்ணியே பூதான இயக்கத்தைத் தொடங்கினார்கள். அந்த அருமையான இயக்கத்தின் பணிகளையே நாம்தொடருகின்றோம்—தொண்டாற்றுகின்றோம்.

ஆளுநர் உரைக்குப் பின்னர் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் காந்திய சகாப்தத்தில் உருவான கிராம மறுமலர்ச்சியின் வெற்றியே நம்மை வாழவைக்கும் என்று எடுத்துரைத்தார்.

திரு. டி.எஸ். அவினாசிலிங்கம் அவர்கள் விரோதிகளிடமும் வெறுப்புக் கொள்ளாமல் பலாத்காரத்தில் பல நாடுகள் நம்பிக்கை கொண்டிருக்கும் பொழுதும், சட்டபூர்வமாக அல்லாமல் மனப்பூர்வமாகப் பூதான இயக்கம் பெற்று வரும் வெற்றியை எடுத்துரைத்தார்கள்.

திரு. டாக்டர் பா. நடராஜன் அவர்கள் கிராம ஜனநாயகம் மலர்ந்திட பூதான இயக்கம் அடிப்படையாக விளங்குவதை விவரித்தார். அதுவே நாட்டின் உண்மையான ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பாக அமையும் என்றார்.

திரு. டாக்டர் ஹண்டே பூதான இயக்கத்தை தமிழ் நாட்டில் மேலும் சிறப்பாக நின்றவேற்ற வேண்டும் என்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா பேசுகையில், 1976-ஆம் ஆண்டு பூதான இயக்கத்திற்கு வெள்ளி விழா ஆண்டு ஆகும். பொருளாதார விஞ்ஞானம் கண்டுபிடிக்கப்பட்டு 200 ஆண்டுகளாகிறது. 1776-ஆம் ஆண்டில் ஆடம்ஸ்மித் பொருளாதார விஞ்ஞானத்தை அறிமுகப் படுத்தினர்.

பொருளாதார மறுமலர்ச்சித் துறைகளில் பூதான இயக்கமும் ஒன்றாகத் திகழ்கிறது.

சட்டப் பூர்வமாக நிலச் சீர்திருத்தத்தால் நம் நாட்டில் வழங்கப்பட்ட நிலமும், பூதான இயக்க மூலமாக வழங்கப்பட்ட நிலமும் ஏறத்தாழ ஒத்த அளவில் இருப்பதை அறிகின்றோம். எனவே பூதான இயக்கம் அரும் பணி ஆற்றியிருப்பது விளங்கும்'' என்றார்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், ''பூதான இயக்கம் பருவத்தே பெய்த மழையாகும். இந்தியா என்பது கிராமத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, அக்கிராம மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும். அப்பணியைச் செய்ய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோம். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்றைச் செய்து வெற்றி பெற்ற நம் நாட்டில் பூதான இயக்கம் வெற்றி பெறுவது உறுதி'' என்றார்.

இவ்விழாவிற்கு ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்து வைத்தனர்.

தமிழக ஆளுநர், ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. பி. கே. தவே, திரு. ஆர். வி. சுப்ரமணியம், தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன், உள்ளாட்சித் துறைச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்ராமன், ஆளுநரின் தனிச் செயலாளர் ஏ. இராமசாமி ஆகிய அனைவரது ஒத்துழைப்புடன் இவ்விழா வெற்றியுடன் நிறைவேறியது.

விழா முடிவில் திரு. கே. ஜே. ஜேசுதாஸ் துதிப் பாடல்கள் பாடினர்.

சென்னையில் நடைபெற்ற பூதான இயக்க வெள்ளி விழா நிகழ்ச்சிகள், நாடு கொண்டாடும் நல்ல விழா இது என்பதை அறிவுறுத்தின. மேலும் இவ்விழா நிகழ்ச்சிகள் ஊரகச் சீரமைப்பை உருவாக்க பூதான இயக்கமும் நமக்குப் பெருந்துணை என்பதையும் எல்லாருக்கும் உணர்த்தின.

→ மாமூலன்





# கொத்தடிமை விலங்கிலிருந்து விடுதலை!

அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெற்ற நம் நாட்டில், பணமுதலைகளிடம் கொத்தடிமைகளாக இருந்து வரும் ஏழைமக்களுக்கு விடுதலை கிடைக்காத கொடுமையான சூழ்நிலை இருந்து வந்தது.

ஆண்டாண்டுக் காலமாய் மனிதனை மனிதன் அடிமைப் படுத்தி வந்த காட்டுமிராண்டிச் செயலுக்கு நமது பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டத்தால் முடிவு ஏற்பட்டிருக்கிறது.

அதன் பயனாய்க் கொத்தடிமைக் கூண்டில் அடைபட்டுக் கிடந்த ஏழை எளிய மக்கள், இன்று பூரண சுதந்தரத்துடன் வெளியே நடமாடத் தொடங்கியிருக்கின்றனர்.

'பெற்றோரை இனிக் காண்போமா?' என்று ஏங்கித்தவித்த கண்களுக்கு முன்னே இருந்த திரை கிழிக்கப்பட்டு விட்டது.

இருண்ட உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அந்த ஏழை மனத்தில் இன்று ஒளிமயமான எதிர்காலம் தோன்றியிருக்கிறது.

இவைகளெல்லாம் 'இருபது அம்சம்' என்கின்ற ஒளிவிளக்குகளிலே ஒன்றான ''தொழிலாளர்களை அடிமைபோல் நடத்தும் பிணைப்பு முறை சட்ட விரோதமாக்கப்படும்'' என்பதால் அன்றோ?

இதன் விளைவாக இந்தியா வெங்கும் அடிமை முறையை ஒழித்திட இன்று தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடிமை ஊழியம் ஒன்றா? இரண்டா? அதில்தான் எத்தனை வகை!

உதாரணத்துக்கு ஒன்று.

ஆயிரமோ இரண்டாயிரமோ வாங்கியிருந்தால்கூடப் பரவாயில்லை. ஆனால் அவள் வாங்கியதோ 65 கிலோ நெல்தான்!

அதற்காக இருபது வயது இளம் பெண் அடிமைக்குப் பலியானாள்.

ஓராண்டுக்காலம் அடிமை ஊழியம் செய்தாள் அந்த ஆரணங்கு. அக்கால கட்டத்தில் அவள்பட்ட தொல்லைகளுக்கு எல்லையில்லை.

அவளுக்கு-அந்த அடிமைக்குத் தற்போது விடிவுகாலம் பிறந்துள்ளது. அவள் கொத்தடிமை என்னும் கூண்டிலிருந்து மீட்கப்பட்டுப் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டாள். இது நடந்தது புவனேசுவரத்தில்!

இதைவிடக் கொடுமை நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது.

ஆம்! ''விஷு'' பண்டிகையின் போது (மலையாளப் புத்தாண்டு விழா) வழங்கப்படும் ஒரு ஜோடி வேட்டி, 10 சேர் நெல், 10 ரூபாய் பணத்திற்காக ஓராண்டுக் காலம் அடிமையாக உழைக்க வேண்டும் என்ற கொத்தடிமை முறை கூடலூர் வட்டத்தில் 'பனியர்' என்ற இனத்தவரிடம் இருந்து வந்துள்ளது.

**நீலகிரி மாவட்டத்தில் :**

கூடலூர் வட்டத்தில் மொத்தம் 242 குடும்பத்தைச் சார்ந்த 481 பனியாக்கள் அடிமைகளாக இருந்தார்கள். கடந்த அக்டோபர் மாதம் கொத்தடிமை முறை ஒழிப்பு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. என்றாலும் இன்னும் பனியாக்கள் அடிமை விலங்கிலிருந்து விடுபடவில்லை. அடிமை முறைக்கு ஆளாகியிருப்பவர்கள் யார், யார் என்பதைக் கண்டு பிடிப்பதில் உள்ள சிரமமே இதற்குக் காரணம்.

பனியாக்கள் என்னும் இந்த ஏழை எளிய கூலிகள் நாகரிகம் பரவாத ஆதிவாசி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களுடைய பழங்காலப் பழக்க வழக்கங்களைக் கைவிடத் தயாராயில்லை. ஆகையால் படிப்படியாகவும் மெதுவாகவும்தான் அவர்களை விடுவிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

நீலகிரி மாவட்ட கூடலூர் வட்டத்தில் ''பனியர்'' என்ற கூலிகளைப் புனரமைப்புச் செய்து அவர்களைக் கொத்தடிமையிலிருந்து விடுவிக்க மூன்று அம்சத் திட்டம் அமல்படுத்தப்படவிருக்கிறது.

இதுவரை 207 பனியாக்கள் வேறு இடங்களில் வேலைகளை ஏற்கச் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். தேயிலைத் தோட்டங்கள், இந்தியா-ஜெர்மனி கூட்டுத் திட்டங்கள், பொதுப் பணித் திட்டங்கள் போன்ற அரசுத் துறைகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித் தரப்படும்.



அன்று— "என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

கூடலூர் வட்டத்தில் உள்ள பெரும்பகுதி ஜென்மிகளுக்குச் சொந்தமானது. ஆனால் 1969-ல் ஜென்மிமுறை ஒழிக்கப்பட்டபின் ''செட்டிகளும்'', ''சேட்டான்களும்'' (கேரளத்தைச் சேர்ந்த சிரியன் கிறித்தவர்கள்) குத்தகைதாரர்களாகவும், நிலச்சுவான்தாரர்களாகவும் ஆகியிருக்கிறார்கள்.

ஜென்மிகள் இப்போது நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்திருப்பதால் நில விநியோகம் சம்பந்தமாக அரசு உடனடியாக எதுவும் செய்வதற்கில்லை. நீதிமன்ற உத்தரவைப் பெற்ற பின்புதான் நிலத்தை மீட்டுப் பனியாக்களுக்கும் மற்றும் நிலமில்லாத ஏழைகளுக்கும் அவைகளைப் பகிர்ந்து அளிக்க முடியும். வழக்குகளில் விரைவில் தீர்ப்புப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அநேகமாக 800 எக்டேர்கள் (அதாவது சுமார் 2,000 ஏக்கர்)நிலமாவது அவர்களுக்கு விநியோகிக்க கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை வைத்துப் பனியாக்களுக்கு ஒரு கூட்டுப் பண்ணையை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

ஏற்கெனவே மாவட்ட ஆதிவாசிகள் சங்கத்தின் ஆதரவில் பனியாக்களின் கூட்டுறவுப் பண்ணை ஒன்று நடக்கிறது. பனியாக்களிடம் உள்ள கஷ்டம் என்னவென்றால், அவர்கள் தங்கள் சொந்த நிலத்தில் பாடுபட்டாலும் சரி, வேறு யாருக்காவது உழைத்தாலும் சரி, உடனடியாகத் தங்களுக்கு அன்றாடம் கூலி கிடைத்துவிட வேண்டும் என்று விரும்புவதுதான்!

அவர்களுடைய அறியாமை, மூடநம்பிக்கை, வளர்ச்சியின்மை ஆகியவற்றைப் பார்க்கும்போது மாநிலத்தில் உள்ள மற்ற முற்போக்கான விவசாயிகளுக்குச் சமமாக அவர்கள் வர இன்னும் நீண்ட காலமாகும். என்றாலும் படிப்படியாக அவர்கள் திருத்தப்படுவார்கள். திருந்திய வாழ்க்கையில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**தொழிலாளர் நல அமைச்சர் அளித்த தகவல் :**

கூடலூரில் கொத்தடிமை முறை இருப்பதாகச் செய்தி வந்துள்ளது தொடர்பாக அங்கு சென்று விசாரிக்க மத்திய அரசு பிரதிநிதி ஒருவரை அனுப்ப உத்தேசித்துள்ளது. இவ்வாறு தொழிலாளர் நல அமைச்சர் கே. ரகுநாத ரெட்டி அவர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொத்தடிமை ஊழியமுறையை ஒழிக்க சட்டமியற்றப்பட்டுள்ள போதிலும், அம்முறை நீடித்திருப்பதாக உறுப்பினர்கள் புகார் கூறினர். இது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்க அவர்கள் வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டில் கூடலூரில் மாநில அரசு வீடு வீடாகச் சென்று ஆய்வு நடத்தியதில் மொத்தம் 5,667 பனியா மக்களில் 481 பேர் அடிமைகளாக இருப்பது தெரியவந்தது. இந்த அடிமைத் தொழிலாளர்கள் அவர்களது எஜமானர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அப்பகுதியில் விவசாய வேலைகளில் ஈடுபட்டுள்ளதாலும், வேலையில்லாப் பிரச்சினை இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**தென் ஆர்க்காடு மாவட்டத்தில்**

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அடிமையாக வேலை செய்யும் ஆண்களையும் பெண்களையும் மீட்க உதவி கலெக்டர் அண்மையில் நேரில் சென்றிருந்தார்.

கள்ளக்குறிச்சி பக்கம் குரும்பகவுண்டர் ஜாகீரில் வஞ்சிக்குழி, புதுப்பாலப்பட்டு, பழைய பாலப்பட்டு, பாச்சேரி, தும்பை மேட்டாம் பட்டி ஆகிய மலைக் கிராமங்கள் உள்ளன.

இங்கு வாழும் ஆண்களும், பெண்களும் நீண்டகாலமாக அடிமைகளாகச் சிலரிடம் வேலை செய்து வருகிறார்கள்.

இதுபற்றி விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவர் திரு. செங்கல்வராயன், பயிற்சி உதவி கலெக்டர் திரு. இராமசாமி, சங்கராபுரம் யூனியன் தலைவர் திரு. துரைமுத்துசாமி, ஆகியோர் சென்றார்கள்.

மலைவாசி ஆண்களையும் பெண்களையும் சந்தித்து அவர்கள் விசாரணை நடத்தினார்கள்.

அப்போது மலைவாசிகள் அவர்களிடம் தாம் பட்ட தொல்லைகளை விளக்கிக் கூறினார்கள்:

''எங்கள் சந்ததியினர் ஜாகீர் அளிக்கும் கொடுமைகளை அனுபவித்து, எந்த வசதியும் இன்றி அடிமைகளாக வாழ்கிறோம். எந்தவித ஆதாரமும் இல்லாமல் பல தலைமுறையாய் வரி என்ற பெயரில் ஆடு, கோழி, பணம், பட்டிவரி, இளைஞர் வரி, திருமண வரி, விதவை வரி, குற்ற வரி செலுத்தி வருகிறோம். ஏன்— எதற்கு? என்று கேட்க இயலாமல் அவர்களுக்குப் பல்லக்கு சுமக்கிறோம்......''

ஆதரவு இல்லாத முதியவர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆவன செய்யும்படி தாசில்தாருக்குக் கோட்டாட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மேலும் 14 பேர்கள் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் குணளவாடி என்னும் கிராமத்தில் 14 பேர் கொத்தடிமைத் தொழிலாளர்களாக இருந்தது தெரியவந்தது. இவர்களில் இருவர் 10 வயது, 11 வயது சிறுவர்கள்.

இந்தப் பதினான்கு பேர்களும், தாம் வாங்கிய கடனைவிடக்கூடு

தல் தொகைக்குப் பதிவு செய்யப் பட்ட ஆவணங்களில் கையெழுத் திட்டிருந்தனர். கடன் தொகை மீதான வட்டிக்கு வேலைபார்க்கு மாறு இவர்கள் கட்டாயப்படுத் தப்பட்டனர்.

இவர்கள் அடிமை ஊழியம் செய்தபோது, நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை கேழ்வரகு உணவு தரப்பட்டது. இந்த அப்பாவிகள் வேறு எங்கும் வேலை செய்யவும் அனுமதிக்கப்பட வில்லையாம்!

தென்னார்க்காடு, புதுக்கோட் டை ஆகிய இரண்டு மாவட்டங் களிலும் கொத்தடிமை முறை எந்த அளவிற்குப் பரவியுள்ளது என்பது குறித்துச் சென்னை சமூகப் பணிப் பயிற்சிப் பள்ளி ஆராயப் போகிறது. இந்த இரண்டு மாவட்டங்களிலும், கொத்தடிமை முறை பற்றி ஆராயும் பொறுப்பைத் தமிழ் நாடு அரசு சென்னை சமூகப் பயிற்சிப் பள்ளியிடம் ஒப்படைத் துள்ளது.

கொத்தடிமைத் தளையை அறுத்து, நல்வாழ்வுக்கு வழி செய்ய அணுகும் அதிகாரிகளி டம் தங்களது உண்மையான நில வரத்தைச் சொல்லக் கொத்த டிமைத் தொழிலாளர் அஞ்சுகின் றனர்; வெட்கப்படுகின்றனர். எனவே, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அரசிற்குச் சங் கடம் ஏற்படுகிறது. தென்னார்க் காடு மாவட்டத்தில் அடிமை முறையை அறவே ஒழித்துக்கட்ட தீவிர செயல் திட்டம் உருவாக் கப்பட்டு வருகிறது.

விசாரணை அறிக்கைகளுக்காகக் காத்திராமல், மாவட்ட ஆட்சித் தலைவர்களே அடிமை முறையை ஒழித்துக் கட்டும் வகையில் அதி காரம் அளிப்பது குறித்தும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இப்படிச் செய்வதால் கொடிய கொத்தடிமை முறை மிக விரைவி லேயே ஒழிக்கப்பட்டுவிடும்.

கடலூர், திருக்கோயிலூர் வட் டத்தில் மேலநந்தல் என்னும் கிராமத்தில் கொத்தடிமைத் தொழிலாளர் 50 பேர்களுக்கு விடுதலை கிடைத்துள்ளது. இவர் களில் 18 பேர் சிறுவர்கள்.

தென்னார்க்காட்டில் அடூர் கொளப்பாக்கம் கிராமத்தில் 35 வயதுப் பெண் உட்பட மேலும் 10 கொத்தடிமைகள் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது. இதைச் சேர்த்து இம்மாவட்டத்தில் இது வரை 74 கொத்தடிமைகள் விடு தலை பெற்றுள்ளனர்.



"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று"
—இன்று!

**இதர மாவட்டத்தில்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏறத்தாழ 700 தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகப் பயன் படுத்தப்படுவதாகத் தெரிய வரு கிறது. மதுரை, தருமபுரி மாவட்டங்களிலும் கொத்த டிமை முறை உள்ளது என்று தெரிய வருகிறது. எனவே, புதுக்கோட்டை, மதுரை, தரும புரி மாவட்டங்களில் கொத் தடிமை முறையை ஒழிக்கும் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடிமை ஊழியம் ஒழிந்து, சமு தாயத்தில் அனைவரும் சமம் என் கின்ற புதிய சூழ்நிலை இன்று உருவாகி வருகின்றது என்றால் அதற்கு முக்கிய காரணம் இருபது அம்சத் திட்டமே அன்றோ?

— பி.வி.ஜி.

## அங்கோலாவுக்கு உதவி

இந்திய அரசு 1,550 கிலோ கிராம் எடையுள்ள மருந்துப் பொருட்களை அங்கோலா நாட்டு அரசுக்கு நன்கொடை யாக வழங்கியுள்ளது. இந்த மருந்துப் பொருட்களை 'ஏர்-இந்தியா' தனது பம்பாய்—கெய்ரோ விமானப் போக்கு வரத்துச் சேவையின் போது கட்டணமின்றி இலவசமாக எடுத்துச் செல்லும்படி அந் நிறுவனத்துக்கு இந்திய அரசு அறிவித்துள்ளது.




# பீடுநடை போடும் பீங்கான் தொழில்

பீங்கான் தொழில் ஒரு நாட்டின் தொழில் வளத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், நாகரிக வாழ்வுக்கும் பயன்படக்கூடிய ஓர் அடிப்படைத் தொழிலாகும். பெரும்பாலான தொழில்கள், குறிப்பாக மின் ஆற்றலால் இயங்குகின்ற தொழில்கள் பீங்கான் பொருட்களை நம்பியே நடைபெற்று வருகின்றன. இரும்பு-உருக்குத் தொழில்கள் பீங்கான் பொருட்களைப் பெருமளவில் எதிர்பார்க்கின்றன. எனவேதான் இத்தொழிலை விரிவுபடுத்திடவும், ஆக்கம் மிகுந்ததாகச் செயல்படுத்திடவும், பல்வேறு முறைகளில் பயன்படுத்திடவும் வேண்டியது இன்றியமையாததாகிறது. இதனை நன்கு உணர்ந்தே தமிழ்நாடு அரசு இதில் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டு தென்ஆர்க்காடு மாவட்டம் விருத்தாச்சலத்தில் பீங்கான் தொழிற்சாலைகளை உருவாக்கி அவைகளைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றது.

பீங்கான் தொழில் தமிழகத்தில் தரமாக வளர்ச்சி பெற்று வருவதற்குக் காரணம் இத்தொழிலுக்குத் தேவையான அனைத்து மூலப் பொருட்களும் இங்கே பெருமளவில் கிடைப்பதுதான். இத்தொழிலில் முக்கியப் பங்கேற்று வரும் சைனு களிமண், மாக்கல் பாண்டக் களிமண் (Stone - ware Clay) குவார்ட்ஸ் ( Quartz ), பெல்ஸ்ஃபார் ( Feldspar ), ஜிப்சம் போன்றவைகள் இயற்கையிலே தமிழ்நாட்டில் கிடைத்து வருகின்றன. மேலும், பீங்கான் பொருட்களின் தேவையும் நமது மாநிலத்திலும், பிற மாநிலத்திலும் அதிக அளவில் இருந்து வருகின்றது. எனவேதான், இத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவை மிகுந்த பல்வேறு செயல்திட்டங்களைத் தீட்டிடத் தமிழ்நாடு அரசால் 1955-ஆம் ஆண்டில் முடிவெடுக்கப்பட்டது.

இவைகளின் அடிப்படையில் 'பீங்கான் தொழில் வளர்ச்சி மையம்' ஒன்றினைப் பொதுத் துறையின் கீழ் அமைத்திட உத்தேசித்தது. இந்த வளர்ச்சி மையம் வாணிபம் சம்பந்தப்பட்ட தொழிற்கூடங்கள், பயிற்சிக் கூடங்கள், சோதனை மற்றும் கற்பிக்கும் நிலையங்கள் (Testing and Teaching Institutes ), நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டைகள் ( Functional Industrial Estate ), பொது வசதிப் பணிமையம் ( Common Facility Service Centre) என்பன போன்ற பல்வேறு தொழில் அமைப்புகளைத் தன்னகத்தே கொண்டு இயங்கிடவும் வழிகோலியது. இத்தகு வளர்ச்சி மையத்தினை விருத்தாச்சலத்தில் துவக்குவதென முடிவு எடுத்து அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டது.

'தமிழகத்திலே விருத்தாச்சலம் இத்தொழிலுக்கெனத் தெரிந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம் பீங்கான் பொருள் தயாரிப்புகளுக்குத் தேவையான தரம் மிகுந்த சைனு களிமண் நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கிடைப்பதுதான். தவிர குவார்ட்ஸ், பெல்ஸ்ஃபார் போன்றவைகள் மிக அருகாமையில் அதாவது திருச்சி, சேலம் மாவட்டங்களைச் சார்ந்த சில இடங்களிலிருந்து கிடைக்கின்றன. திருச்சி மாவட்டம் தேரணிபாளையத்தில் கழிவு நீர்க் குழாய்கள் தயாரிப்பதற்குத் தேவையான மாக்கல் பாண்டக் களிமண்ணும், தென்



ஆர்க்காடு மாவட்டம் பண்ணுருட்டியில் சுடுசெங்கல்லுக்குரிய களிமண்ணும் ( Fire-clay ) தகுந்த அளவிலும், உயர்ந்த தரத்திலும் கிடைக்கின்றன. இவைகள் குழாய்கள், பீங்கான் ஓடுகள், செங்கற்கள் தயாரிப்புகளுக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளன.

1955-ஆம் ஆண்டில் துவங்கப்பட வேண்டுமெனக் கருதிய இந்த வளரும் தொழில் மையம் படிப்படியான நிலைகளிலே நிறைவேற்றப்பட்டு வந்தது. சுகாதார வசதியுடன் கூடிய கழிவுச் சாதனப் பொருட்கள், மித மின் ஆற்றல் வாய்ந்த இன்சுலேட்டர்கள், பீங்கான் குழாய்கள், பீங்கான் கலை, கைவண்ணப்

பொருட்கள் போன்றவைகளைத் தயாரித்திடுவதற்கெனத் தமிழ் நாடு அரசின் தொழில் வணிகத் துறை வாணிபத் தொழிற்கூடங்களை இங்கே துவக்கியது. இவைகள் மட்டுமல்லாமல் பயிற்சி நிலையங்கள், பணி மையங்கள், நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டைகள் போன்றவைகளையும் இங்கேயே துவக்கியது.

சிறுதொழில்களின் வளர்ச்சி மேம்படுத்தப்பட வேண்டும், சிறு தொழில்களுக்குத் தகுந்த பாதுகாப்பினை அளித்திட வேண்டும் என்கின்ற வகையில் அரசு 1965-ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்' ஒன்றினைத் தோற்றுவித்தது. இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டதும் தொழில் வணிகத் துறை இயக்குநரகத்தின் நிருவாகத்தில் இயங்கி வந்த தொழிற்கூடங்கள் அனைத்தும் இதனுடைய நிருவாகத்திற்கு மாற்றப்பட்டன. பொதுத்துறையின் கீழ் இயங்கி வந்த இந்தத் தொழிற்கூடங்களின் நடவடிக்கைகள் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்கும், தொழில் வணிகத்துறை இயக்குநரகத்திற்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தன. இத்தகு நடவடிக்கைகளால் இயற்கையிலே தொழில்நுட்பம், நிருவாகம் போன்றவைகளில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. எனவே, இந்த அமைப்புகள் அனைத்தும் ஒரே நிருவாகத்தின்கீழ் இயங்கிடவும், பீங்கான் தொழில் வளர்ச்சிக்குத் தேவைமிகுந்த-வேகமான நடவடிக்கைகளை மேற்கொண்டிடவும் அரசு தனித்தனி அமைப்புக்களையெல்லாம் ஒன்று சேர்த்துத் தனியானதொரு நிறுவனத்னத்தை உருவாக்கிட முடிவெடுத்தது. இந்த வகையில் உருவான நிறுவனம்தான் 'தமிழ்நாடு பீங்கான் தொழிற்சாலைகள் நிறுவனம்' (Tamil Nadu Ceramics Limited).

இரண்டு கோடி ரூபாய் அளவிலான அதிகாரபூர்வமான மூலதனத்தைக் கொண்ட இந்நிறுவனம் 14-12-1973-ல் துவக்கப்பட்டது. இந்த மூலதனத்தில் ரூபாய் 1,000 வீதம் ஏறத்தாழ 20,000 பங்குகள் அடங்கியுள்ளன. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திடமிருந்து விருத்தாச்சலத்திலுள்ள பீங்கான் தொழிற்சாலை, பீங்கான் குழாய்த்தொழிற்சாலை ஆகியவைகளையும், தொழில் வணிகத்துறை இயக்குநரகத்திடமிருந்து விருத்தாச்சலம், பெரம்பூர் ஆகிய இடங்களிலுள்ள பீங்கான் கலை, கைவண்ணப் பொருட்கள் தொழிற்கூடங்கள், திருமழிசையிலுள்ள இரு இயந்திரச் செங்கல் தொழிற்கூடங்கள், ஓமலூரிலுள்ள பீங்கான் தொழிற்கூடம், விருத்தாச்சலத்திலுள்ள பொது வசதிப் பணிமையம், நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டை ஆகியவைகளையும் இந்நிறுவனம் 15-7-1974 முதல் மேற்கொண்டது.

விருத்தாச்சலத்தில் ஒருங்கிணைந்த பீங்கான் கூட்டுத் தொகுதித் தொழிற்சாலையினை அமைத்திட மேற்கொண்ட முயற்சி வெற்றிகரமான முறையில் செயல்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேல் இந்நிறுவனம் கையாண்ட பொறுமையின் காரணமாகவும், அயராத உழைப்பின் பயனாலும்இத்தகைய வெற்றியினைக் காணமுடிந்தது எனலாம்.



இவ்விரு பெரிய வாணிபத் துறை சார்ந்த அமைப்புகள் முழு அளவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டபொழுது பீங்கான் தொழிலின் வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்பட்டது. பீங்கான் தொழிலில் சீரான வளர்ச்சியைக் காண்பதற்குக் கைத்திறன் மட்டும் போதாது. கலை நுணுக்க அறிவும் தேவை. பீங்கான் தொழிலின் செய்பொருட்கள் பெரும்பாலும் அழகுப் பொருட்களாகவும், கைவண்ணம் மிகுந்ததாகவும் காட்சியளிக்கின்றன.



எனவே இத்தொழில் சிறக்க-காலத்தால் அழிவுறாமல் நிற்க, திறன் வாய்ந்த-தேர்ச்சிமிக்க கலை நுணுக்க-தொழில் நுட்ப வல்லுநர்களின் தேவை மிகுந்த அளவில் எழுகின்றது என்பதும் உணரப்பட்டது. எனவேதான் விருத்தாச்சலத்தில் ''பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சிநிலையம்'' ஒன்று உருவாக்கப்பட்டது.

இப்பயிற்சி நிலையம் தொழில் நுட்பத்தில் 4 ஆண்டுகள் பயிற்சியளித்து, பயிற்சியாளர்களைத் திறமைமிக்க-தகுதி வாய்ந்த-தேர்ச்சி பெற்ற தொழில் நுட்பதாரர்களாக உருவாக்குகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வகையில் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சி நிலையத்திலுள்ள பீங்கான் தொழில் ஆய்வுக்கூடத்தைத் திறமையுடன் செயல்படுத்திடத் தேவையான நவீன சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், மூலப் பொருட்கள், முற்றுப் பெற்ற தயாரிப்புப் பொருட்கள் போன்றவைகளும் இங்குப் பரிசோதனை செய்யப்படுகின்றன. இவை தவிர ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவு ஏராளமான

புதிய தயாரிப்புகளைத் தரம்மிக்கதாகவும் ஆக்குகின்றது. இவைகளின் வாயிலாக புதிதாகத் தொழில் துவங்க முன்வருபவர்கள், பீங்கான் தொழிலில் உயர்ந்த தன்மையில் சிறிய, நடுத்தர அல்லது குடிசைத்தொழில் போன்ற தொழிற்கூடங்களைத் துவக்க எல்லாவித உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் தரப்படுகின்றனர். இதுவரை 8 அணியினர் பயிற்சி முடித்து அங்கேயே பணிபுரிகின்ற வாய்ப்பினையும் பெற்றுள்ளனர். தற்பொழுது இந்நிலையம் தொழில் வணிகத்துறை இயக்குநரகத்தின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது.



தனியார்துறையில் தனிப்பட்ட தொழில் உரிமைதாரர்கள் பீங்கான் தொழிலில் ஈடுபட இயற்கையான சில இடர்ப்பாடுகள் உள்ளன. தொழிற்கூடங்களை அமைத்திட ஏராளமான பணம் தேவைப்படுகின்றது. அதேநேரத்தில் இத்தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களுக்கும் பெருந்தொகையினை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. சிலருக்குத் தொழில் நுணுக்க அறிவுப் பற்றுக்குறையும் இருக்கின்றது. இவைகள் அனைத்தும் அவர்கள் தொழில் துவங்கத் தடைகளாக அமைகின்றன.

இத்தகு குறைபாடுகளையெல்லாம் களைந்து தனியார்கள் சிரமமின்றித் தொழில்களைத் துவங்கிடவும், சீரானதொழில் வளர்ச்சியினை அடைந்திடவும் வழிகோலும் வகையில் ''பொது வசதிப் பணி மையம்'' ( Common Facility Service Centre ) ஒன்று செயல்பட்டு வருகின்றது. இது தேவை மிகுந்தநவீன இயந்திரங்களையும், அனைத்து வசதிகளையும் பெற்று இயங்கி வருகின்றது.

விருத்தாச்சலத்தில் அமைக்கப்பெற்றுள்ள பீங்கான் தொழில் கூட்டமைப்பு, ஏராளமான வணிபம் சார்ந்த தொழிற்கூடங்களையும், பயிற்சி நிலையம், ஆராய்ச்சி ஆய்வுக்கூடம், பொது வசதிப் பணி மையம், நடைமுறை சார்ந்த தொழிற்பேட்டை போன்றவைகளையும் தன்னகத்தே கொண்டு ஒப்பற்ற ஒன்ருக விளங்குகின்றது. மேலும் சிறப்பு மிக்க பீங்கான் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிப் பணிகள் பயனுள்ள முறையில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன என்பதையும், அவைகள் சிறு தொழில் உரிமைதாரர்களுக்கு எந்தவகையில் உதவுகின்றன என்பதையும், மிகப் பரந்த அளவில் வேலை வாய்ப்புகளை நல்கி வருவதையும், அதிக அளவில் பீங்கான் பொருட்களைத் தயாரித்து, குறைந்த விலையில் வழங்கி வருவதையும் நாடு முழுமைக்கும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் கல்கத்தாவில் நடைபெற்ற அனைத்திந்தியப் பீங்கான் தொழிற்சாலைகள் சங்கத்தின் 40-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அதன் தலைவர் உரை நிகழ்த்துகையில், தமிழ்நாடு அரசு பீங்கான் தொழிலில் ஒருங்கிணைந்த தொழில் அமைப்பினை விருத்தாச்சலத்தில் உருவாக்கி, அதனை எல்லாரும் பாராட்டும் வண்ணம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது என்றும், மற்ற மாநிலங்களும் இந்த முறைகளை மேற்கொண்டு பீங்கான் தொழிலில் வளர்ச்சி காணவேண்டும் என்கின்ற கருத்தினையும் தெரிவித்தார். மேலும் இவ்விழாவில் பங்கேற்ற மேற்கு வங்காளத்தின் முதல்வரும் தன்னுடைய மாநிலத்திலும் பீங்கான் தொழில் வளர்ச்சிக்கென இதுபோன்ற நிறுவனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திறமைமிக்க தொழில்நுட்பதாரர்களைக் கொண்டு செயல்படுவதால் இங்கு இத்தொழில் வளர்ச்சி பெற்று விளங்குகின்றது. இத்தகு வளர்ச்சியினையும், முன்னேற்றத்தையும் கண்டுள்ள இந்நிறுவனத்தின்கீழ் விருத்தாச்சலத்தில் இயங்கி வருகின்ற தொழிற்கூடங்களைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

**பீங்கான் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்கூடம் ( Tacel Ceramics Unit ) :**

பொருட்களின் தயாரிப்பையும், விற்பனையையும் பெருமளவில் பெருக்கிட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு இப்பெரிய வாணிபத் தொழிற்கூடம் தமிழ்நாடு பீங்கான் தொழிற்சாலை நிறுவனத்தால் 1974-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இங்குள்ள ஆய்வகத்தின் மிக நெருங்கிய ஒத்துழைப்புடன் இது செயல்பட்டு வருவதால் புதுவகை மாதிரி உருவங்களையும், வண்ணங்களையும் தரமான முறையில் உருவாக்கிபீங்கான் பொருட்களைத் தயாரிக்கின்றது. பீங்கான் தட்டுகள், கோப்பைகள், ஜாடி, கழிவுச்சாதனப் பொருட்கள், சுகாதார வசதிக்கேற்ற சாதனங்கள், மின்சாதனப்பொருட்கள், மருத்துவத் துறைக்குத் தேவையான பொருட்கள் ஆகியவற்றை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இத்தொழிற்கூடத்தின் உற்பத்தியும், விற்பனையும் படிப்படியே உயர்ந்து வருகின்றது. 1973-74-ஆம் ஆண்டு உற்பத்தியின் மதிப்பு ரூ. 16.05 இலட்சம். 1974-75-ஆம் ஆண்டின் உற்பத்தி 71 சதவிகிதமாக உயர்ந்து ரூ. 27.41 இலட்சத்தை எட்டியது. ஆனல் 1975-76-ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டினைவிட 26 சதவிகித உயர்வைக் கண்டு ரூ. 34.72 இலட்சத்தை அடைந்தது. அதே நேரத்தில் விற்பனையிலும் 1973-74-ல் ரூ. 14.35 இலட்சத்தையும், 1974-75-ல் ரூ. 25.81 இலட்சத்தையும் பெற்றிருந்தது. இது 79 சதவிகித உயர்வு ஆகும். வெளிச்சந்தையின் வாணிபம் மோசமான நிலையில் இருந்த போதிலும் 1975-76-ஆம் ஆண்டில் ரூ. 25.62 இலட்சம் மதிப்பில் விற்பனையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

இங்குத் தயாராகும் பொருட்கள் தரம் மிகுந்ததாகவும், கலைவண்ணம் கொண்டதாகவும் விளங்குவதால் உயர்ந்த வாடிக்கையாளர்களைப் பெருமளவில் கவருகின்றன. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு, குறிப்பாக 'தாஜ் கோரமண்டல்' போன்றவைகளுக்கும், ஏர் இந்தியாவைச் சார்ந்தஹோட்டல்கள், கப்பல் போக்குவரத்துக் கழக உணவு விடுதிகள், இராணுவச் சிற்றுண்டிச் சாலைகள் போன்றவைகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. முதல்தடவையாக இங்கே தயாராகும் பீங்கான் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாவது குறிப்பிடத்தக்கது. இந்தத் தொழிற்கூடத்தின் வாயிலாக 400 பேர்களுக்கு மேல் நேரடி வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**பீங்கான் குழாய்த் தொழிற்சாலை (Tacel Stone-Ware Pipe Unit) :**

இந்தியாவிலே மிகப் பெரிய நவீன குழாய்த் தொழிற்சாலைகளில் ஒன்ருகும். இங்கே கிடைக்கும் மாக்கல் பாண்டக் களிமண்ணைக் கொண்டுஇக்குழாய்கள் தயாரிக்கப்படுகின்றன. 4 அங்குலம் முதல் 15 அங்குலம் விட்டம் வரையிலான குழாய்கள் தயாரிக்கப்படுகின்றன. உலையில் வைத்துத் தயாரிக்கப்படும் பொழுது இறுதியில் சாதாரண உப்புதூவப்படுகின்றது. இதனுல் இந்தக் குழாய்கள் உருக்குப் போன்ற பளபளப்பான வண்ணத்தைப் பெறுகின்றன. இந்த வண்ணம் எந்தக் காலத்திலும் மறையாமல் இருப்பது இத்தொழிற்கூடத்தின் தனிச்சிறப்பாகும். தரத்திற்குத் தகுந்த பெயரினையும் பெற்றுள்ளது. தமிழகத்தில் இத்தொழிற்சாலை மட்டுமே தன்னுடைய தயாரிப்புக்குழாய்களில் 'இந்தியத் தரக் கட்டுப்பாடு' (I.S.I.) முத்திரையைப் பொறித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழாய்கள் சுகாதாரத் துறையில்-கழிவு நீர்கள் அகற்றப்படும் பணியிலும் மற்றும் பல்வேறு வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தொழிற்சாலையாகும். தற்பொழுது பீங்கான் தொழிற்சாலையை விட நன்கு செயல்பட்டு வருகின்றது. திங்கள் ஒன்றுக்குச் சுமார் 1,000 டன்கள் வரையிலான குழாய்கள் தயாராகின்றன.

1973-74-ஆம் ஆண்டு உற்பத்தியின் மதிப்பு ரூ. 11.05 இலட்சமாகும். 1974-75-ல் உற்பத்தியின் மதிப்பு ரூ. 21.21 இலட்சம். ஏறத்தாழ 91 சதவிகித உயர்வைக் காட்டிப் பெரும் சாதனையை ஏற்படுத்தியது. 1975-76-ஆம் ஆண்டில் உற்பத்தியான குழாய்களின் மதிப்பு ரூ. 28.45 இலட்சம். இது சென்ற ஆண்டைவிட 34 சதவிகித உயர்வு ஆகும்.

இங்குத் தயாராகும் குழாய்களுக்குப் பெருமளவில் வரவேற்பு இருந்து வருகிறது. மைசூர், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்கும் இந்தக் குழாய்கள் அனுப்பப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டு வருகிறது. இலங்கைக்கு மட்டும் ரூ. 1.5 இலட்சத்திற்கும் மேல் மதிப்புள்ள குழாய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தவிர மத்தியக் கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பீங்கான் கலைப்பொருள் தொழிற்சாலை (Tacel Art Pottery) :**

இத்தொழிற்சாலையில் ஏறத்தாழ 15 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. கலைகைத்தொழில் கல்லூரியில் பயின்று தேர்வு பெற்ற ஓவியர்கள் இத்தொழிற்சாலையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் உருவமாதிரிகளை அமைப்பவர்களாகவும், பயிற்சியளிப்பவர்களாகவும் செயல்படுகின்றனர். இதைத் தவிர புது வகை மாதிரிகள், கலைப்பொருட்களை உருவாக்குவதற்குத் தகுந்த ஊக்கத்தினையும், பீங்கான் பொருட்களைச் சீரிய முறையில் உபயோகிக்கத் தகுந்த உற்சாகத்தையும் இவர்கள் பெறுகின்றனர். இதுவரை பீங்கான்பொருட்களைப் பயன்படுத்தி, இவர்கள் ஏறத்தாழ 1,000-க்கும் மேற்பட்ட மாதிரி கலைப்பொருட்களை உருவாக்கியுள்ளனர்.



இங்குத் தயாராகும் குழாய்களுக்கு அதிக அளவில் தேவை எழுவதால் விற்பனையிலும் முன்னேற்றங்கண்டு வருகிறது. 1973-74-ஆம் ஆண்டில் ரூ. 11.13 இலட்சத்திற்குத்தான் விற்பனையானது. பீங்கான் தொழில் நிறுவனம் மேற்கொண்ட பின்னர் 1974-75-ல் இதன் விற்பனை 97 சதவிகிதமாக உயர்ந்து ரூ. 21.94 இலட்சத்தை எட்டியது. 1975-76-ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டைவிட 34 சதவிகிதம் உயர்ந்து ரூ. 28.57 இலட்சத்தை அடைந்தது. இத்தொழிற்சாலையின் மூலம் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதியும் கிடைத்துள்ளது.

தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம் மேற்கொண்டதும் இங்கே பொருட்களின் உற்பத்தி கணிசமான அளவிற்குப் பெருக வழி செய்யப்பட்டது. பெரியதொரு வாணிப நிறுவனமாக இயங்கிடுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டது. பீங்கான் தொழில் நிறுவனம் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து தொடர்ச்சியான உற்பத்தியையும், விற்பனையையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்நிறுவனம் மேற்கொண்டதன் விளைவாக 174 சதவிகித உற்பத்தி உயர்வை அடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்குத் தயாராகும் கலை கைவண்ணப் பொருட்களின் விற்பனை

யில் தடை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. தற்பொழுது முதல் தடவையாக வெளிநாடுகளுக்கு இங்குள்ள பொருட்கள் ஏற்றுமதியாகின்றன. இந்தத் தொழிலகம் 100-க்கு மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

**நடைமுறை சார்ந்த தொழிற் பேட்டைகள்**

விருத்தாச்சலத்திலுள்ள நடைமுறை தொழில் சார்ந்த தொழிற் பேட்டையில் தற்பொழுது 31 சிறுதொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் பெரும்பாலானவை தொழில் நுட்பதாரர்களுக்கென ஒதுக்கப்பெற்றவையாகும். பீங்கான் தொழில் நிறுவனம் இந்தத் தொழிற்கூடங்களுக்குப் பொருள் உற்பத்திக்குத் தேவையான-கணிசமான உதவிகளை வழங்கி வருகின்றது. இந்தத் தொழிற்கூடங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பக்குவம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. இவைகளுக்குப் பொது வசதிப் பணிமையத்தின் வாயிலாக எல்லாவித உதவிகளும் அளிக்கப்படுகின்றன. பொது வசதிப் பணி மையத்தில் 100 பேர்களுக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பீங்கான் தொழில் ஆய்வுக்கூடத்தின் ஒத்துழைப்புடன் சிறுதொழிற்கூடங்கள் பல வகைப்படுத்தப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றன.

தமிழ்நாடு பீங்கான் தொழில் நிறுவனம் விருத்தாச்சலத்திலுள்ள தொழிற்கூடங்களையெல்லாம் மேற்கொண்ட பின்னர் உற்பத்திப் பொருட்களின் அளவு 125 சதவிகிதமாகவும், பொருட்களின் விற்பனை அளவு 110 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் உற்பத்தியின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 80 இலட்சமாகும். தொழிற்பேட்டையிலுள்ள மற்ற தொழிற்கூடங்களின் உற்பத்தியையும் கணக்கில் கொண்டால் இவைகளின் மதிப்பு ரூபாய் 120 இலட்சத்தையும் தாண்டிவிடும். இந்நிறுவனத்தாலும், பிற தொழிற்கூடங்களாலும் நேரடி வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை 1,200-க்கு அதிகமாகும். இத்தகு வளர்ச்சியின் காரணமாக மந்தமான நிலையிலிருந்த விருத்தாச்சலம் வட்டம் நகராட்சியாக மாறுகின்ற அளவிற்கு வளம் பெற்று ஒரு சகாப்தத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இங்குத் தயாராகும் கலை-கை வண்ணப் பொருட்களுக்கு அதிக அளவில் தேவை எழுவதால் பீங்கான் கலைப்பொருட்கள் தொழிற்சாலையினை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது. விருத்தாச்சலம் தவிர்த்துச் செங்கற்பட்டு மாவட்டத்தில் பீங்கான் குழாய்த் தொழிற்சாலை ஒன்றினை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன.

தொழிலாளர்களுக்குத் தகுந்த வசதியினையும் இந்நிறுவனம் வழங்கி வருகின்றது. பாராட்டுதலுக்கும், முன்னேற்றத்திற்கும் தகுந்த தொழிலாளர் கொள்கைகளைக் கையாண்டு வருகின்றது. தொழிலாளர்கள் உற்பத்தியில் பங்கு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளனர். தொழிலாளர்களுடைய முழு ஒத்துழைப்பும் கிடைத்து வருவதால் மிகக் குறுகிய காலத்தில் வியத்தகு சாதனையைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தகுந்தது.

வெளிநாடுகளின் ஒத்துழைப்புடன் இத்தொழில் செயல்பட்டால் நிச்சயமாக உலகச்சந்தையிலே ஓர் உயர்ந்த இடத்தை இது வகிக்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

—ஆயிரராமன்

---


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
# சேலம்-1.

**தபால் பை எண். 171** **தொலைபேசி எண் : 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.**

**வட்டிவிகித அட்டவணை**

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 3½% |

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

**நடப்புக் கணக்கு ½%** **சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்சொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**தி. பாலசுந்தரம், பி.ஏ.,** துணைப் பதிவாளர், நிர்வாக அதிகாரி.

**பி. காசி, பி.எஸ்.சி., எச்.டி.வி.,** காரியதரிசி.

**எஸ். ஆறுமுகம்,** தலைவர்.



# நெருப்பும் பொறுப்பும்

—ஐ. இரத்தினசாமி,
இயக்குநர்,
தமிழ்நாடு தீயணைப்புத்துறை,
சென்னை.

அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும். நெருப்பு என்று கொல்லும் என்று இயம்புதலரிது. அன்று கொன்ருல் அகோரம்; அன்று விட்டு நின்று கொன்ருல் சித்திரவதை. தொன்று தொட்டு வந்த தொண்டனும், ''தீ'', ஓர் நன்றி கெட்ட நாசகாரி. அடக்கி ஆண்டால் ஆத்ம நண்பன், இடம் கொடுத்தால் அடம் செய்யும் அற்பன். ஆக்கலு மழித்தலும் ஆண்டவன் ஆணை.

அவனுக்கிணை நெருப்பென்ருல் அர்த்தமுண்டு. பலவற்றை உருவாக்கும் ஆற்றலும், அவற்ருேடு ஆண்டவனளித்த உயிர்களை அழிக்கும் திறனும் கொண்டது ''தீ''. பல தெய்வங்களில் ஒன்ருக வழிபட்டு வந்த, 'அக்கினி', என்று மறுபெயர் கொண்ட, தீயின் தீய செயல்களை விதிப்பயன் என்றும், அவைகளைத் தடுப்பது மனித சக்திக்குஅப்பாற்பட்டது என்றும் கூறும் நண்பர்களுக்கு, ''விதியை மதி வெல்லும்'' என்னும் விதி விலக்கும் உள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விடுபெற்ற சத்தியவானின் உயிரை மீளப் பெற்ற சாவித்திரியின் மதியும், மறைகளால் இறை என்று கூறப்பட்ட, 'விதியை வென்ற மனிதனின் மதியும் இக்கூற்றுக்குச் சான்ருகும். பரலோக வாசிகளை மதியால் வென்ற பல கதைகள் உண்டு. பிறந்தால் இறக்கத்தான் வேண்டும்என்னும் விதியின் நியதியை எதிர்த்து மருத்துவ மனைகள் நடத்தித்தான் வருகின்ருேம். ஆதலால், செய்வினைக்குப் பலன் உண்டென்பது உண்மையானல், நாம் செய்யும் எந்த முயற்சிக்கும் பலனுண்டு. விதியை மதியால் வெல்லலாம் என்னும் நோக்கத்தோடு தீயின் வெகுளிக்குக் குழிதோண்ட முயற்சித்தோமானல் முயற்சியில் வெற்றியும், பலனும் கிடைப்பது நிச்சயம்.

தீ வெகுளியின் வெறியாட்டம் நெஞ்சைப்பிளக்கும் நிகழ்ச்சிகள்கொண்டது. அவைகள் பலவாயினும், ஒன்றை உதாரணம் கூற விரும்புகிறேன்.

இரண்டாம் உலகப் போர் முடியும் கட்டம். *1395* டன் எடையுள்ள வெடி மருந்துகளையும், யுத்த தளவாடங்களையும், *9,000* கந்தகி மூட்டைகளையும், *8,700* பருத்தி மூட்டைகளையும், பல எண்ணெய் பீப்பாய்களையும், மரச்சாமான்களையும், மீன் உரங்களையும், இன்னும் பல அபாயகரமான பொருள்களையும் தாங்கிய நிலையில், எஸ். எஸ். போர்ட் ஸ்டிகின் என்ற கப்பல், *1944*, ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம்12-ஆம் தேதி, ஓர் பெரும் சோக நாடகத்திற்கு மேடையாகப் பம்பாய்த் துறைமுகத்தை வந்தடைந்தது. ஏப்ரல் மாதம் 14-ஆம் தேதி சுமார் *09.00* மணிக்கு வெடி மருந்துகளையும், யுத்ததளவாடங்களையும் இறக்கும் பணியில் துறைமுகத் தொழிலாளர்கள் ஈடுபட்டு; சுமார் *12.30* மணிக்கு மதிய உணவிற்காகச் சென்றுவிட்டனர். கப்பலுக்குள் தீ மூண்ட சந்தேக அறிகுறியைச் சுமார் *12.35* மணிக்கு தூரத்திலிருந்தவர்களால் புகை மூலம் அறிய முடிந்தது. சுமார் *13.30* மணிக்கு வேலைக்குத் திரும்பிய துறைமுகத் தொழிலாளர் சுமார் *13.45* மணிக்குக் கப்பல் தீ விபத்தில் சிக்கியிருப்பதைக் கண்டு சந்தேகத்தை உறுதிப்படுத்தினர்.

எங்கு பார்த்தாலும் பரபரப்பு. எல்லாத் திசைகளிலும் அபாயக் குரல். எத்தனையோ தீயணைக்கும் இயந்திரங்கள் இயங்க ஆரம்பித்தன. திறமையும், அனுபவமும் நிறையப் பெற்ற தீயணைக்கும் கடமை வீரர்கள் தீவிரமாகத் தீயோடு போராடினர். தங்களது கடைசி நிமிடம் காதில் ஒலித்தும் அவர்கள் கடமையினின்றும் விலகவில்லை. சிறிது சிறிதாகக் காலம் கடந்தது. நாடகத்தின் கடைசிப் பாகத்தை நடிக்கக் காலம் வந்துவிட்டான். காதைப் பிளக்கும் ஓர் வெடிச் சத்தம், காற்றில் வாரி எறியப்பட்டோரை காணவில்லை. காணப்பட்டோர் கருகிக் கிடந்தனர். கடலில் மூழ்கியோர் மீளவில்லை. பல துறைகளைச் சேர்ந்த *231* பேர்களின் உடல்களையும் எண்ணுவதற்கு இயலாது போன ஏனையோர் சடலங்களையும் உணவாக உண்டு, காயமுற்ற எண்ணற்றவர்களின் இரத்தத்தை நீராகக் கொண்டு தீயரக்கன் வெறியாட்டம் கொண்டான். மூன்று கப்பல்களை நாசமாக்கினன். *12* கப்பல்களை முடமாக்கினன். *300* ஏக்கர் துறைமுகப் பரப்பை வெட்டவெளியாக்கினன். பம்பாய் நகரமே ஆடியது. எங்குபார்த்தாலும் அதிர்ச்சியும் ஆட்டமும். சொத்து சேத விவரத்தை இன்னும் சரியாகக் கணக்கிட முடியவில்லை. உத்தேசமாக பல கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமது இரு நண்பர்களோடு நடந்து கொண்டிருந்த திரு. ஸ்டிபன்ஸ் வெடிப்பின் வேகத்தால் தம் இரு நண்பர்களும் எங்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்பதை இன்னும் தெரிந்து கொள்ள முடியவில்லை. வண்டியில் ஓடிக் கொண்டிருந்த குதிரை, ஒரு காலை இழந்து, மூன்று கால்களில்தாவிக்கொண்டு சென்றது. உயிர் தப்பி ஓடிக் கொண்டிருந்த ஒரு தாய், தான் தாங்கிச் சென்ற தன் குழந்தைக்குத் தலையில்லை என்பதை அறியாது ஓடிக்கொண்டிருந்தாளாம்.

இந்த கண்களை எரிக்கும் காட்சிகள் காதுகளைப் பிளக்கும் செய்திகள், உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் யாரோ ஒருவரின் பொறுப்பற்ற செயலினால் ஏற்பட்ட விளைவுகளேயாகும். பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டால் நெருப்பின் கோரச் செயல்கள் எப்படிப்பட்டவைகளாக இருக்கும் என்பதை எடுத்து உணர்த்தவும் நாம் எல்லாரும் எவ்வாறு நெருப்புடன் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கையை விடுக்கவும் இக்கோரச் செயல் எடுத்துக் காட்டப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் தீ விபத்துக்களைத் தடுப்பதில் நம் எல்லாருடைய பொறுப்பு என்ன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளம் வருமுன் அணை போடுவதே விவேகம். பெருந் தீ விபத்துக்கள் நேர்ந்தபின் ஓலமிடுவதைவிட அவ்விபத்துக்கள் வராமலே அதற்கான காரணங்களைத் தவிர்க்க வேண்டும். கவனக் குறைவும், பொறுப்பற்ற செயல்களுமே பல தீ விபத்துக்களுக்குக் காரணங்களாயிருக்கின்றன. நாம் எல்லாரும் பொறுப்புடன் நடந்து கொண்டால், நெருப்பின் பிடியிலிருந்து தப்பலாம். புள்ளி விவரப்படி பார்த்தால் வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களே அதிகமாகியிருக்கின்றன. அதற்கான காரணங்களை நோக்கும்போது அவைகள் இலகுவாக தவிர்க்கக் கூடியவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, வீடுகளில் கவனக் குறைவாக அடுப்புகள்கொளுத்துவதும், அடுப்புச் சாம்பலை அணைக்காமல் எறிவதும், மின்சாரக் கருவிகளை விருப்பம் போல் கவனக்குறைவாக உபயோகப்படுத்துவதுமான சாதாரண காரணங்களே வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களுக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இக்காரணங்களைத் தவிர்ப்பது முக்கியமாக தாய், தங்கையரின் பொறுப்பு.





ஆதலால், தாய், தங்கையர்கள் நெருப்பைப் பொறுப்புடன் கையாள வேண்டும். சமைக்கும் பொழுது அளவோடு அடுப்பு எரிக்க வேண்டும். காற்றழுத்த மண்ணெண்ணெய் அடுப்பை உபயோகப்படுத்தும்பொழுது முழு கவனத்தோடு உபயோகப்படுத்த வேண்டும். பம்பாய் நகரில் மட்டும் ஆண்டிற்குச் சுமார் 500 பேர் இக்காற்றழுத்த அடுப்பின் விபத்தினால் இறப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. சூடான எண்ணெய்யில் குளிர்ந்த பதார்த்தங்களை இடும் பொழுதும், மெழுகுவர்த்தி, திறந்த மண்ணெண்ணெய் விளக்கு போன்றவைகளை உபயோகப்படுத்தும்பொழுதும் மிகக் கவனத்தோடு இருக்க வேண்டும். மின்சாரத்தினால் இயங்கும் கருவிகளை அளவோடும் கவனத்தோடும், உபயோகப்படுத்த வேண்டும். வீடுகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆபத்து விளைவிக்கும் பொருள்களை அனாவசியமாக வீடுகளில் சேகரித்து வைக்கக்கூடாது. அவசியம் ஏற்பட்டால் அவைகளை ஆபத்து நேரிடாத வகையில் பாதுகாப்பான இடங்களில் வைக்க வேண்டும். வீட்டின் சுற்றுப்புறங்களில் குப்பை, கூளங்களைப் போட்டுக் கொண்டு திறந்த வெளியில் தீ உண்டு பண்ணக்கூடாது. குழந்தைகளின் தொட்டில்களுக்கு அடியிலோ, தங்களது அருகிலோ விளக்குகளை வைத்துவிட்டுத் தூங்கக்கூடாது. அடுப்புப் பற்ற வைக்கும் பொழுது மண்ணெண்ணெய், ஸ்பிரிட் போன்ற உயர் சக்தி வாய்ந்த எரி பொருள்களைக் கவனக்குறைவாக உபயோகிப்பதையும், வேலை முடிந்ததும் அடுப்புச் சாம்பலை சரியாக அணைக்காமல் மற்ற எரிபொருள்களோடு போடுவதையும் தவிர்க்க வேண்டும். அனாவசியமாக மின்சார இணைப்பில் தலையிடக்கூடாது. அவசியம் ஏற்பட்டால், அதில் அனுபவம் வாய்ந்தவர்களை நாட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக குழந்தைகளை கண்காணிப்போடு வைத்துக் கொள்ள வேண்டும்.

தீப்பெட்டி, பெட்ரோல், மண்ணெண்ணெய், திறந்த விளக்குகள் போன்ற அபாயம் விளைவிக்கும் பொருள்களை அவர்கள் அணுகும்படி வைக்கக் கூடாது. தாழ்ந்த கூரைகளின் அடியில் அமைக்கப்பட்ட அடுப்புகளிலோ, அல்லது வேறு எந்த அடுப்பிலோ குழந்தைகளை அடுப்பு எரிக்கும்படிச் செய்வது பெருந் தவறு. அவர்கள் அறியாமை பேராபத்தை விளைவிக்கும். வேடிக்கைக்காகக் குழந்தைகள் விருப்பம்போல் பட்டாசுகளை வெடிக்கவும், வாண வேடிக்கை செய்யவும் அனுமதிக்கக்கூடாது. சில சமயங்களில் விளையாட்டு வினையாக மாறி சுபநாள் துக்க நாளாகிவிடும். அவர்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் நமது கவனம் இருக்க வேண்டும். தாய் பொறுப்பின் பெரும் பகுதி தந்தையையும் சாரும். குடும்பத் தலைவனான தந்தை மேற்கூறியவை சரிவரப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்வதுடன், தானும் தன் வாழ்க்கைத் துணைவிக்குத் துணையாய் நின்று வீடுகளில் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்க வேண்டும்.

புகை பிடிக்கும் பொழுது எறியும் தீக்குச்சிக் கொள்ளியும், புகை பிடித்தபின் எறியும் அணைக்காத துண்டுகளும், பல பெருந் தீ விபத்துக்களுக்குக் காரணங்களாக இருக்கின்றன. நகர்ப்புறங்களில் 15.3 சதவிகிதமும், கிராமப் புறங்களில் 12.9 சதவிகிதமும், ஆக மொத்தம் 28.2 சதவிகித தீ விபத்துக்கள் இக்காரணங்களால் ஏற்படுகின்றன.



புகை பிடிக்கும் அன்பர்கள் வேலை செய்யும்பொழுதும், படிக்கும் பொழுதும், படுக்கும் பொழுதும் புகை பிடிக்கும் பழக்கத்தை கையாள்கிறார்கள். வேலை செய்யும் பொழுது கவனக் குறைவாகவோ படுக்கும்பொழுது தூக்கத்திலோ தங்களது கைகளில் உள்ள எரியும் சிகரெட் துண்டுகளை அப்படியே அருகில் வீசிவிடுகிறார்கள். அதேபோல், ஓடும் ரயிலிலும், மோட்டார் வாகனங்களிலும் செல்பவர்கள் சிகரெட் துண்டுகளை அணைக்காமல் வீசி விடுகிறார்கள். இவ்வாறு எறியப்பட்ட துண்டுகளிலுள்ள அணையாத நெருப்பு பல பெருந் தீ விபத்துக்களை விளைவிக்கின்றது.







வீடுகளிலும், அலுவலகங்களிலும் புகை பிடிக்கும் அன்பர்கள் சாம்பல் தட்டுகளில் துண்டுகளை நன்ருக அணைத்துப்போட வேண்டும். வெளிப் புறங்களில் புகை பிடிக்கும் அன்பர்கள் துண்டுகளை நன்ருக அணைத்து எரிபொருட்கள் இல்லாத இடத்தில் போட வேண்டும்.

தீ விபத்துக்களினுல் தொழிற்சாலைகளிலும், நூற்பு ஆலைகளிலும் ஏற்படும் நட்டங்கள் உடல் சிலிர்க்க வைப்பனவாகும். இதற்கெல்லாம் காரணங்கள் நமக்குத் தெரியாவிட்டாலும் சிலரின் கவனக் குறைவும், பொறுப்பற்ற செயல்களுமே இப் பெருந் தீ விபத்திற்குக் காரணங்களாக இருக்க வேண்டும். இக்காரணங்கள் பலவாக இருக்கலாம். அவற்றைத் தடுப்பது சம்பந்தப்பட்ட எல்லாருடைய பொறுப்பும் ஆகும். பொதுவாக மற்ற துறைகளில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளோடு, தொழிலதிபர் — தொழிலாளர் நல்லுறவும் நல்வாழ்க்கையில் அக்கறையும் பல தீ விபத்துக்களைத் தடுப்பதற்குத் தேவை.

தொழிலதிபர்கள் தொழில் நலத்தையும், சொந்த நலத்தையும் முக்கியமாக நாட்டின் பொருளாதார நலத்தையும் கருதி தீ விபத்துக்களைத் தடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். தொழிலாளர் நலத்தில் அக்கறையும் அவர்களிடத்தில் ஆதரவும்காட்டி நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டால், வேலை நிறுத்தங்களையும், தீ விபத்துக்களை ஏற்படுத்தும் சதித் திட்டங்களையும் தவிர்க்கலாம். இதேபோல், தொழில் நலமே நமது நலம் என்று தொழிலாளர் உணர வேண்டும். தங்களதுவேண்டாத செய்கைகளால் தொழில் கெட்டால், அவர்களது சொந்த நலமே கெடும். வேலையில்லாத் திண்டாட்டம் வீட்டிற்கு நட்டம்.

பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் இத்துறையில் இயற்ற வேண்டிய பணி அடிப்படையானது. தொழில் கூடங்களையும்,நூல் துணிஆலையை நாளை இயக்கும் பொறுப்பு இளைஞர்களுடையது. தீயைப் பற்றியும், தீ அணைப்பைப் பற்றியும் அடிப்படைக் கொள்கைகளை இளைஞர்களுக்குப் பாடப் பகுதியாக ரஷ்யா, ஜப்பான் நாடுகளைப் போல் போதிக்கப்பட்டால், நாட்டின் நாளைய நட்டம் நீங்கி நலம் பெருகும்.

தொழில் கூடம், ஆலைகள், வீடுகள் கட்டும் பொறுப்பிலுள்ளவர்கள் ஆரம்பத்திலேயே தீப்பற்ருப் பொருள்களைக் கொண்டு கட்டுவதுடன் தவிர்க்க முடியாத காரணங்களால் தீ விபத்துக்கள் ஏற்படும் பொழுது ஆட் சேதம், பொருட்சேதங்களை குறைப்பதற்கான வழி முறைகளை அமைத்துத் தரும்படி வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள். ஓரிடத்தில் ஏற்பட்ட தீ மற்ற இடத்திற்குப் பரவாமலும் தீ விபத்து ஏற்பட்டால் பாதுகாப்பான இடத்துக்குச் செல்லத் தப்பிக்கும் வழிகளை அமைத்தும் கட்டடங்கள் அமைப்பது நலம்.

நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள், தங்கள் ஆட்சியிலுள்ள மக்களுக்குத் தீ விபத்துக்களிலிருந்து பாதுகாப்பளிப்பது ஓர் முக்கிய கடமை எனக் கருதி, தீயணைப்புப் படைகளுக்கு உதவியாக நின்று நீர் நிலைகளைப் பாதுகாத்து உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

தாய் தந்தையர்களுக்கும், தவறுதலாகப் புகை பிடிப்போருக்கும், நல்லுரை சொல்லி, வீடுகளிலும், வெளியிலும் தீ விபத்து களைத் தடுக்கும் முறைகளை உபதேசிக்குமாறு பொது நல சேவை தொண்டர்கள் வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள்.

இம்முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டால் கடமையுணர்ச்சியும், வீரமும் கொண்ட நமது தீயணைக்கும் படையினர் விரைந்து சென்று சேவை புரிவார்கள் என்று பொது மக்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பொது மக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பை தீயணைக்கும் படையினருக்கு அளிக்குமாறு, வேண்டிக்கொண்டு,

'அடக்கி ஆளாவிடில்—தீ
மடக்கி அழித்துவிடும்'

என்று கூறி முடிக்கிறேன்.

## வெங்காய ஏற்றுமதி

தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிறுவனத்தின் மூலம் வெங்காய ஏற்றுமதி செய்யும் கொள்கையைத் தொடர்ந்து 1976-77-லும் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரியில் வெங்காயம் அதிக அளவுக்கு உற்பத்தி ஆனதால், அங்காடிகளில் விற்பனைப் போக்கைக் கருத்தில் கொண்டு, வெங்காய ஏற்றுமதிக்கான தடை நீக்கப்பட்டது. இதனுல் 1975-76-இல் மொத்தம் ரூ. 13 கோடி மதிப்புக்கு, ஒரு லட்சத்து 10 ஆயிரம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. தேசிய விவசாயக் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிறுவனம், சோவியத் யூனியன், யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளில் புதிய அங்காடிகளுக்கும் வெங்காயம் ஏற்றுமதி செய்யு வகை செய்துள்ளது.

வெங்காய ஏற்றுமதியில் இந்நிறுவனம் சம்பந்தப்பட்டதன் மூலம் அனைத்து நாட்டு அங்காடிகளில், வெங்காய விற்பனையில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகிறது.

# இருபது அம்சத் திட்ட விளம்பர விழா

இந்தியா ஒரு பெரிய நாடு மட்டுமல்ல; மக்கள் தொகையை விரைவாகப் பெருக்கிடும் நாடாகவும் உள்ளது. இந்தியாவில் வாழும் பெரும்பாலானவர்கள் கல்வியறிவில்லாத பாமர மக்களாக உள்ளனர்! 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணிப்பின்படி, இந்தியாவில் 29.46 சதம் அளவினரே படித்துள்ளனர், என்பது தெரிய வருகிறது. கல்வியறிவில்லாத மக்கள் பெரும்பான்மையினராக இருப்பதனுலேயே, மக்களாட்சியின் அடிப்படையான தனி மனிதன், தன் கடமையை உணர்ந்து, சரிவரச் செய்ய முடியாத நிலேயில் இருக்கிருன்.

இத்தகைய நிலே இனியும் தொடர்ந்து இருக்கக் கூடாதென்பதற்காகவே நமது **பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்** கடந்த 1-7-1975 அன்று 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை இந்திய நாட்டிற்கு வழங்கினுர். சமதர்மச் சமுதாயம் அமைய வழிகோலும் இத்திட்டம் ஏழை, எளிய, பாமர, பாட்டாளி, தொழிலாளி, சாமான்ய மக்களின் வாழ்வை வளப்படுத்தி வருகிறது;

அரிசன மக்கள் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றம் பெற உதவுகிறது.

மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி வருகிறது;

இந்திய மக்கள் அனைவரின் வாழ்விலும் கட்டுப்பாடு உணர்ச்சியையும், பொறுப்பு உணர்ச்சியையும் ஏற்படுத்தி வருகிறது;

இந்திய நாட்டின் இருகண்களௌன விளங்கும் வேளாண்மை, தொழில் ஆகியவற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு உற்பத்தியை உயர்த்தி வருகிறது;

இந்தியாவில் பலத்தையும், சுயச் சார்பையும் உறுதிப்படுத்தி வருகிறது.

எனவே, இந்தியாவின் செழிப்புக்கு வித்திட்ட 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அனைவருக்கும் பெரும் பங்கு உள்ளது.

**நமது கடமை என்ன?**

கல்வியறிவில்லாதவர்களாகவும், கிராமப்புறங்களில் வாழ்வோராகவும் உள்ள மக்கள் அனைவரும் தம் தம் கடமைகளைச் செவ்வனே செய்திட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டியது அரசின் பொறுப்பாக உள்ளது. ஆனால், கல்வியறிவு இல்லாத மக்களுக்குக் கடமைகளை உடனடியாகக் கல்வி மூலம் கற்பிக்க முடியுமா? முடியாது! ஆகவே, குறுகிய காலத்தில் ஏராளமான பேர்களுக்குக் கடமைகளை உணர்த்த வலிமைமிக்க பல்வேறு விளம்பர சாதனங்கள் (Multi media) தேவைப்படுகின்றன.

கல்வி அறிவு இல்லாத பெரும்பான்மை கிராமப்புற ஏழை, எளிய, பாமர, சாமான்ய மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு, கண்காட்சிகள், கருத்தரங்குகள், கதாகாலட்சேபங்கள், செய்முறைகள், நாடகங்கள், சுவரொட்டிகள், சிலேடுகள், நாளேடுகள், துண்டு அறிக்கைகள், வானெலி, திரைப்படங்கள், டெலிவிஷன் போன்ற பல்வேறு விளம்பர சாதனங்கள் உதவுகின்றன.

மக்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருந்தால்தான், பொதுமக்களின் நல்வாழ்விற்காக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொது மக்கள் உணர்ந்து கொள்ளவும், பொது மக்களின் தேவைகளை உணர்ந்து அத்தேவைகள் அவர்களுக்கு எளிதில் கிடைத்திடுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்திடவும் இயலும். இதை மனத்திற்கொண்டே தற்பொழுது புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களில் பல்வேறு சாதனங்கள் வாயிலாக விளம்பர முனைப்பு இயக்கம் (Multi media Campaign) நடத்தப்படவிருக்கிறது.

நாளேடுகளும், வானெலியும் பரவமுடியாத சின்னஞ்சிறு கிராமங்களிலும்-குறிப்பாக பின் தங்கிய கிராமங்களிலும்-இந்திய அரசின் செய்தி விளம்பரத்துறையும், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையும், சிலேடுகள், திரைப்படங்கள் மூலம் புதுமைக் கருத்துகளைப் புகுத்தி வருகின்றன. அந்த வகையிலேதான் மிகவும் பின் தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு விளம்பர சாதனங்களைப் பயன்படுத்திப் பொதுமக்களிடையே 20 அம்சத் திட்டத்தையும், பயன்தரும் அறிவுரைகளையும் புகுத்துவதற்காகவே 'விளம்பர முனைப்பு இயக்கம்' மே 16, 17, 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கிறது.

அடுத்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மே 21, 22, 23, 24 ஆகிய நாட்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மே 26, 27, 28, 29 ஆகிய நாட்களிலும் நடைபெறவிருக்கிறது.

மைய, மாநில அரசுகளின் பல்வேறு துறையினரும் ஒருங்கிணைந்து முதன்முதலாக நீலகிரி மாவட்டத்தில் உதகையில் நடத்திய 'விளம்பர முனைப்பு இயக்கம்' உண்மையிலேயே பாமர மக்களுக்குப் பயன்தரும் விழாவாக அமைந்திருந்தது. எனவே, இரண்டாவதாகத் தருமபுரி மாவட்டத்திலும் இவ்வியக்கம் நடத்தப்பட்டது. அதனுல் தருமபுரி மாவட்ட மக்களும் அரும் பயன் பெற்றனர்.

எனவேதான், தற்பொழுது புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களிலும் இவ்வியக்கம் நடத்தப்படவிருக்கிறது. இம்முனைப்பு இயக்கத்தினைப் பயன்படுத்தி புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்ட மக்கள் தம்வாழ்வில் எல்லா வகையிலும் முன்னேறுவதற்குரிய வழிவகைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், மேற்கூறிய 3 மாவட்ட மக்களும், தங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்திட முடியும். அவ்வாறு கடமையைச் செய்தால் தான் மக்களாட்சியின் பயன், மக்கள் அனைவருக்கும் கிடைக்கும்! ஏழை எளிய மக்கள் மக்களாட்சியில் எதிர்பார்த்த இனிய வாழ்வு மலரும்!

—ஆர். மாணிக்கம்

# புதுக்கோட்டை மாவட்டத்தில் 20 அம்சத் திட்டச் சாதனைகள்

— ஆர். வீராசாமி

மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் பின்கண்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

- *அவசியப் பொருட்களின் விலைவாசியைக் குறைக்கத் தொடர்ந்து நடவடிக்கை; உற்பத்தி, கொள்முதல், விநியோகச் சீரமைப்புத் திட்டம்*

கடந்த 1—2—'76-க்குப் பிறகு அரிசி, பயறு, பருப்பு, எண்ணெய் போன்ற இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள எல்லா உணவு விடுதிகளிலும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்கு மாவட்டம் முழுவதிலும் விற்கப்படுகிறது. உணவுப் பொருள் வழங்கு துறை அதிகாரிகளும், காவல் துறை (உணவு) அதிகாரிகளும் மாவட்டத்திலுள்ள உணவு விடுதிகளை அடிக்கடி நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும் புதிய குடும்ப அட்டைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் 175 கடைகள் மூலமாக இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

- *உபரி நிலங்கள் ஏழைகளுக்கு விரைவாக வழங்கப்படும்.*

ஜனாதிபதி ஆட்சி அமுலுக்குப் பின் இம்மாவட்டத்தில் 1,870 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2,669.66 ஏக்கர் உபரி நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- *நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் விரைவாக வழங்கப்படும்.*

1—1—76-க்குப் பின் இம்மாவட்டத்தில் 5,284 நிலமற்ற ஏழை மக்களுக்கு 114.49 ஏக்கர் வீட்டு மனைப் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- *தொழிலாளர்களை அடிமை போல் நடத்துவது, பிணைப்புமுறை சட்டவிரோதமாக அறிவிக்கப்படும்*

ஆவுடையார் கோவிலிலும் குளத்தூர் தாலுகாவிலும் கொத்தடிமை முறை இருப்பது தெரிய வந்துள்ளது. அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

- *கிராமப்புற மக்களின் கடன்சுமை, நீக்கப்படும்.*

மாவட்டத்திலுள்ள 48 வட்டிக் கடைகளில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. அதிக வட்டி வசூலித்ததற்காகவும் கணக்குகள் சரியில்லாத காரணத்தினாலும் அக்கடைகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- *விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்சம் ஊதியம் பற்றி மறு ஆய்வு செய்யப்படும்.*

விவசாயத் தொழிலாளர்களுக்கான தமிழ்நாட்டின் குறைந்த பட்ச ஊதியச் சட்டம் மாவட்டத்தின் கிராமப் புறங்களில் நன்கு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. வட்டாட்சியர்கள் சட்டத்திற்குக் குறைவான ஊதியம் எங்கேனும் வழங்கப்பட்டால், கடும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

- *புதிதாக பாசன வசதி செய்து தரப்படும்.*

இம்மாவட்டத்தில் 1990 ஏரிகளும், குளங்களும் மராமத்து செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாக மாவட்டத்தில் 2,240 ஏக்கர் புதிய தாகப் பாசன வசதி பெருகி வருகிறது.

75 குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,500 எக்டேர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

- *மின்சாரத் திட்டங்கள் முடுக்கி விடப்படும்.*

இவ்வாண்டில் 32 கிராமங்களும் அரிசன காலனிகளும் மின் வசதி பெற்றன. 389 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதத்தில் மேலும் 171 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும். இம்மாவட்டத்திலுள்ள 31,370 கிணறுகளில் 7,344 கிணறுகளுக்கு இதுவரை மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

- *கைத்தறித் தொழில் வளர்ச்சிக்குப் புதிய திட்டம் வகுக்கப்படும்.*

இம் மாவட்டத்தில் 1,299 நெசவாளர்கள் உள்ளனர். பொன்னமராவதியிலும், கடியாபட்டியிலும் புதியதாக 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த ஆவன செய்யப்படுகின்றது. திருவப்பூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் புதுப்பிக்கப்பட உள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து நெசவாளர்களையும் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்த்து பயன்

பெற ஆவன செய்யப்படுகின்றது. நெச வாளர் குறைகளை நீக்குவதற்காக நெசவாளர் ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

● *சாதாரண மக்கள் அணியும் துணிகளின் தரம் அதிகரிக்கப்பட்டுத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யப் படும்.*

இம்மாவட்டத்தில் தரமான மலிவு விலைத் துணி வகைகள் மாதமொன்றுக்கு 73 பேல்கள் வீதம் கூட்டுறவு விற்பனை நிலையங் கள் மூலம் விற்கப்பட்டு வருகிறது. மேலும் தேவையான அளவு தமிழ்நாடு அரசிடம் பெற்று விற்பனை செய்யப்படும்.

● *வரி ஏய்ப்பு, பதுக்கல், கடத்தல் போன்ற பொருளா தாரக் குற்றங்கள் செய்வோருக்குக் கடும் தண்டனை விதிக் கப்படும்.*

கடந்த வருவாய் ஆண்டில் மட்டும் புதுக்கோட்டை நகராட்சியில் ரூபாய் 1,50,000 வரி ஏய்ப்பில் கண்டு பிடிக்கப்பட்டு, வசூ லிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட சட்டத் தின் கீழ் 3 பேர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். வணிக வரித் துறையினர் வியாபார இல்லங் களைச் சோதனையிட்டு வரி ஏய்ப்புச் செய்த 39 பேர் மீது வழக்குகள் தொடரப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. சினிமா அரங்குகள் இரண்டு, வரி ஏய்ப்புச் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளன; 23 லாரி உரிமையாளர்கள் வரி ஏய்ப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

● *சாலைப் போக்குவரத்து, தேசிய மட்டத்தில் அனுமதி வழங்கும் திட்டம் வரும்.*

இம்மாவட்டத்தில் விண்ணப்பம் செய்த இரண்டு லாரி உரிமையாளர்களுக்கும் தேசிய பர்மிட் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

● *விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அவசியமான பொருள் கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.*

புதுக்கோட்டை மாவட்டத்தில் 6 கல் லூரி விடுதிகள், 13 பிற்பட்டோர் மாணவர் விடுதிகள், 17 தாழ்த்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் உள்ளன. இவை அனைத்திற்கும் இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனால் புதுக்கோட்டை நகரிலுள்ள கல்லூரி விடுதியில் ஒரு நாள் உணவின் விலையில் 38 பைசா குறைந்துள்ளது.

● *மாணவர்களுக்கு நோட்டு, புத்த கங்கள் மற்றும் இதர பொருள்கள் கட்டுப் படுத்தப்பட்ட விலைக்கு வழங்கப்படும்.*

இம்மாவட்டத்தில் 300 மாணவர்களுக்கு மேல் படிக்கும் 39 உயர் நிலைப் பள்ளிகளில் (300 மாணவர்களுக்கு மேற்பட்ட) மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை, வரும் கல்வியாண் டில் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளி மாணவர்களுக்குப் பாடப்புத்த கங்கள், எழுது பொருள்கள் நியாய விலையில் கிடைக்கும்.

● *எல்லா மக்களுக்கும், குறிப்பாக எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகையுடன் கூடிய பயிற்சித் திட்டம் வகுக்கப்படும்.*

இம்மாவட்டத்தில் 18 தொழில்களில் பயிற்சி வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டு, 45 பேர்கள் பயிற்சி பெற்று வருகின் றனர். மேலும் அதிகப்படி மாணவர்களுக்குப் பயிற்சி வாய்ப்பளிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

## பிரதமர் திட்டத்தை அமல் நடத்தும் ஜேஸீஸ் இளைஞர் கழகம்

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தமிழகத்தி லேயே முதன் முதலாகவும், முன்மாதிரியாகவும், புதுக் கோட்டை ஜேஸீஸ் இளைஞர் கழகம், புதுகோட்டைக்கு அருகே உள்ள புல்வயல் என்னும் கிராமத்தை வளர்ப்பு கிராமமாக ஏற்றுக்கொண்டு சமுதாய நற்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறது.

முதற்கட்டமாகப் புல்வயல் கிராமத்தில் இலவச மருத்துவ மனை ஒன்றைக் கிராம மக்க ளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பால்ராஜ் தலைமையில், மாவட்டத் தலைமை மருத்துவ அதிகாரி திரு. வர்கீஸ் துவக்கி வைத் தார். இருபது அம்சத் திட் டத்தின் நோக்கங்கள் குறித் தும், மக்கள் பெருமளவு ஆதரவு தந்து திட்டங்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும், பொது மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

அறந்தாங்கி அரசினர் உயர்நிலைப் பள்ளி மைதானத் தில் இந்திய அரசுச் செய்தி விளம்பரத் துறையினர், பிரத மரின் இருபது அம்சத் திட் டத்தை விளக்கும் 'இனி யொரு விதி செய்வோம்' என்னும் நாடகத்தை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமை யில் நடத்தினார்கள்.

# ஒளிமயமான நல்வாழ்வு



சி. ராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 1975ம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதலாம் நாள் இப்பாரதத்தில் வாழும் ஏழை, எளிய மக்களின் நல்வாழ்விற்காக மிக உயர்ந்த பொருளாதாரத் திட்டமாம் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை இந்நாட்டிற்கு வழங்கினார்கள். இப்புதிய பொருளாதாரத் திட்டம் கடந்த ஓராண்டில் மிக வேகமாக நிறைவேற்றப்பட்டு பாரத மக்களின் வெகுவான பாராட்டுக்களையும், வரவேற்பினையும் பெற்றுத் திகழ்கின்றது என்றால் மிகையாகாது. இம்மகத்தான திட்டம் திருச்சி மாவட்டத்தில் மிகவும் சீரோடும், சிறப்போடும், விரிவாகவும், விரைவாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு சாதனைகளை உருவாக்கி வருகிறது.

திருச்சி மாவட்ட அளவில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு துறை அலுவலர்களைக் கொண்ட 'செயல் குழு' அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொன்னணியாறு பாசன வசதியைப் பெருக்குவதற்கு ஒரு துணைக்குழுவையும், உணவுப் பொருட்களைப் பதுக்கல், கலப்படம், விலையேற்றம், ஆகியவற்றைத் தடுத்தல் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலப் பட்டா, வீட்டுமனைப் பட்டா வழங்குதல் ஆகியவற்றிற்கு ஒரு துணைக்குழுவும், வேலைப் பயிற்சி வாய்ப்பிற்கு ஒரு துணைக்குழுவும் இம் மாவட்டத்திலே அமைக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்கள் எளிதில் கிடைப்பதற்கு ஏற்ற வகையில் எல்லா ஏற்பாடுகளும் விரைவாகவும் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஜனவரித் திங்களில் இருந்த அரிசியின் விலையை விட தற்போது 50 சதவீதம் விலை குறைந்துள்ளது. எண்ணெய் வகைகள் ஏறத்தாழ 25-லிருந்து 40 சதவீதம் விலைகள் குறைந்துள்ளன.

உணவுப் பங்கீட்டு முறையைச் சரி செய்வதற்கு உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஏறத்தாழ 18,000 டன்கள் கையிருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. உணவுப்பொருட்களை பங்கீட்டு முறையில் வழங்குவதற்கு ஏற்ற முறையில் ஏறத்தாழ 8,32,722 குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. குடும்பக் கார்டுகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறதா என்பதை கண்காணிக்கப்பட்டு வருகிறது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுகிறதா, ஒழுங்காக விற்பனை செய்யப்படுகிறதா, விலைப்பட்டியல் வைக்கப்பட்டிருக்கிறதா, எடைக்கற்கள் சரியாக இருக்கின்றனவா? ஓட்டல்களில் உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் விற்கப்படுகிறதா? என்பதைக் கண்காணித்து, தவறுகள் இருப்பின் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு ஏற்ற வகையில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுக்கழகத்தின் சார்பில் புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணற்றை ஆழப்படுத்தவும், ஆயில் பம்பு செட் வழங்குவதற்கும், மின்சார பம்பு செட்டுகள் வழங்கவும் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொன்னணியாறு திட்டத்தில் பாசன வசதி பெறும் ஆயக்கட்டுக்கள் 336 எக்டேர்களுக்குப் பதிலாக 741 எக்டேர்கள் பாசன வசதி வழங்குவதற்காக நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன. ரூபாய் 77 இலட்சம் செலவில் 9 வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகள் முடிவுறுமானால் 942 எக்டேர்கள் நிலம் பாசன வசதி பெறும். மேலும் 33 திட்டங்கள் ரூபாய் 2,512 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இவை நிறைவேற்றப்படுமேயானால் 5,887 எக்டேர்கள் நிலம் பயிர் சாகுபடிக்குக் கொண்டு வரலாம்.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமும் நிலவள வங்கிகள் மூலமும் விவசாயிகளுக்கு விரைவிலேயே கடன்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 720 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 890 இலட்சம் ரூபாய் கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்டம் முழுவதும் வங்கி அளவில் 34 சங்கங்களைத் தேர்ந்தெடுத்து நகைக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் இதுகாறும் 16 சங்கங்களுக்கு ரூபாய் 16.60 இலட்சம் ரூபாய் கடன் வசதி அனுமதிக்கப்பட்டுக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏழை, எளிய விவசாயிகளுக்கு கடந்த ஓராண்டில் 6543.45 ஏக்கர் நிலம், 4471 பேருக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 3480 பேருக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டு மனை, புதை குழிக்கு நடைபாதை ஆகியவற்றிற்காக ரூபாய் 2,55,000 செலவிடப்பட்டிருக்கிறது.

'உழந்தும் உழவே தலை' என்றான் வள்ளுவன். உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி ஒழுங்காக வழங்கப்பட்டு வருகிறதா என்பது குறித்துக் கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்டத்தில் 69 குக்கிராமங்களுக்கும், 31 தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும், மின்சாரம் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. இவற்றில் 16 குக்கிராமங்களுக்கும், 20 தாழ்த்தப்பட்டோர் காலனிகளுக்கும் மின்சாரம் வழங்குகின்ற வேலை முடிவுறும் தறுவாயில் இருக்கிறது. இவ்வாண்டில் 5,000 கிணறுகளுக்கு மின்வசதி செய்து தரப்பட இருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் உறையூர், ஜெயங்கொண்டம், நடுவீரப்பட்டு, கரூர் ஆகிய இடங்களில் நெசவாளப் பெருங்குடி மக்கள் மிகுதியாக இருக்கிறார்கள். ஏறத்தாழ 32,185 தறிகள் இம்மாவட்டத்தில் உள்ளன. நெசவாளப் பெருமக்களுக்குக் கடன் வசதியை பெருக்கவும் அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளின் விற்பனையைப் பெருக்கவும், அவர்களது சங்கங்களையும் அச்சங்கங்களில் அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க அந்தத் துறையின் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்றுமதி அடிப்படையான கைத்தறித் துணிகள் உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம் ஒன்றை ரூபாய் 40 லட்சம் மதிப்பில் கரூரில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் மூலம் 1,000 கைத்தறிகள் பயனடையும்.

விற்பனை வரிகள் முறைப்படுத்தப்பட்டு வரி ஏய்ப்போரின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. திரைப்பட அரங்குகளிலும், சோதனையிடப்பட்டு வரி ஏய்ப்போரின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களும், நோட்டுகளும், எழுதுபொருட்களும், மலிவு விலையில் வழங்க ஏற்பாடாகி வருகிறது. 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் உயர்நிலைப்பள்ளிகளில் ஒரு கூட்டுறவுச் சங்கம், மாணவர் வங்கி ஆகியவை தோற்றுவிக்கப்பட்டு வருகிறது. 300-க்கும் குறைவாக உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பண்டகச்சாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பெரம்பலூர் வட்டத்தில் மலையாளப்பட்டி என்ற கிராமத்தில் கொத்தடிமை விடுதலை கேட்டு 48 உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தார்கள். இவர்களில் 8 பேர் தாமே விடுதலையாகி கிராமத்திலிருந்து சென்று விட்டார்கள். பாக்கி 40 பேர்கள் சம்பந்தமாக விசாரணை செய்ததில் இருவர் தவிர 38 பேர்கள் கொத்தடிமை வேலை செய்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் அனைவரும் கொத்தடிமை வேலையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார்கள். இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்

திருச்சி மாவட்டத்திலுள்ள பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு அரிசி, மற்றும் உணவுப் பொருட்கள் கூட்டுறவுத் துறையின் மூலம் மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்திலுள்ள 23 பிற்பட்டோர் மாணவ விடுதியில் 1440 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். இவர்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் 18 டன்களாகும். 62 தாழ்த்தப்பட்டோர் மாணவ விடுதிகள் உள்ளன. இதில் 5062 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 71 டன்கள் உணவுப் பொருட்கள் தேவைப்படுகிறது. இவைகளெல்லாம் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள டால்மியா சிமெண்ட் ஆலையில் 22 பேருக்கும், கோத்தாரி சர்க்கரை ஆலையில் 9 பேருக்கும், பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸில் 1799 பேருக்கும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திட்டங்களை நிறைவேற்றுவதில் திருச்சி மாவட்டம் முன்னோடியாகத் திகழும் என்பது உறுதி. இப்புதிய பயணம் அனைவருக்கும் ஒளிமயமான நல்வாழ்வை உருவாக்கும்.

## விடைகள் :

1. உலக வானிலை தினம் : 1961 மார்ச் 23.
2. 'சர்வதேச நீதிமன்றம்' ஐ.நா. சபையில் உள்ளது. நெதர்லாந்தைச் சேர்ந்த ஹேக் நகரில் இது கூடுகிறது.
3. அனைத்து நாட்டுக் காவல் படைக்கு 'இன்டர்போல்' என்று பெயர். இதன் தலைமை நிலையம் பாரிசில் இருக்கிறது.
4. 'ஆர்யபட்டா'
5. அ. கியாட் ஆ. கிரோன் இ. யென் ஈ. லிரு.
6. டென்மார்க், பின்லாந்து, கிரீஸ், நார்வே, சுவிட்சர்லாந்து, பிரிட்டன்.
7. பானர்ஜி
8. ஜப்பானிலுள்ள நாகசாகி, ஹிரோஷிமாவில்; 1945ல்
9. 124 (உயர்நீதிமன்றம் துவக்கம் 1852)
10. விருந்துபசாரம் செய்வதற்காக ராபர்ட் கிளைவ் காலத்தில் (1789-1803) இது ஏற்படுத்தப்பட்டது.
11. 1970-ல் எடுத்த கணக்கின்படி 1,138 பத்திரிகைகள் உள்ளன.
12. சென்னைப் பல்கலைக்கழகத்தில்
13. சென்னை வானொலி நிலையத்துக்கு எதிரில்.
14. சென்னை எழும்பூரிலுள்ள காவல் துறை ஆணையாளர் அலுவலகத்தில்.
15. அமெரிக்க நூலகம்.

தொகுப்பு: பி. வி. கிரி

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
# நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,

## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.



கோ-ஆப்டெக்ஸ்

## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!

மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

தமிழரசு

பதிவு எண். M. 8676

# சாதனை மிகு பத்தாண்டு




## நாடு பீடுநடை போடுகிறது

சுய சார்பை நோக்கி

கட்டுப்பாடுடன் கூடிய சமூக

வாழ்வை நோக்கி

ஒருமைப்பாட்டை நோக்கி.

DIPR.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.